
கல்கி




KALKI செப்டம்பர் ௩௦, 1951

4 அணா







நாளுக்கு நாள் அதிக ஆரோக்கியமான தெளிவுள்ள சருமம்

ரெக்ஸோனாவிலிருக்கும் 'கேடில்' உங்கள் சருமத்தை அதிக தெளிவுடையதாகவும், அழகுடையதாகவும் செய்யும். தினமும் இருமுறை இச்சோப்பினால் கழுவுங்கள்.

ரெக்ஸோனா

'கேடில்' கலந்த சோப் இது ஒன்றே

சருமத்தை மிருதுவாக்கும் எண்ணெய்களின் பிரத்தியேகக் கலவையின் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட பெயர் இது.


RP. 72-X30 TM

ரெக்ஸோனா ப்ரொப்ரைட்டரி லிமிடெடுக்காக இந்தியாவில் தயாரிக்கப்பட்டது


உங்கள் புன்னகை
பிரகாசிக்க —
விஸ்டம் டூத் பிரஷ் உபயோகித்து உங்கள் பற்களை ஆரோக்கியமாகவும், வெண்மையாகவும் வைத்திருங்கள்! இதிலுள்ள நைலான் குஞ்சங்கள் பற்களுக்கு கேடு உண்டாகும் இக்கட்டான இடுக்குகளிலும், பல் சந்துகளிலும் புகும்படியாக அமைக்கப்பட்டிருக்கின்றன. பிரஷின் கைப்பிடி, எல்லாப் பற்களையும் சுலபமாகவும், துப்புரவாகவும் சுத்தம் செய்யக் கூடிய உருவில் உள்ளது. பெரியவர்கள், குழந்தைகள் முதலிய எல்லோருக்கும் ஏற்ற சைஸ்களில், விஸ்டம் பிரஷ்கள் தயாரிக்கப்பட்டு, தூசி துப்பு புகமுடியாத உறைகளில் விநியோகிக்கப் படுகின்றன!
—விஸ்டம் உபயோகியுங்கள்
WISDOM
HARD
NYLON
சரியான
உருவில்
அமைந்துள்ள
நைலான்
டூத் பிரஷ்
டிஸ்ட்ரிபியூடர்கள்: ஜே. எல். மார்ஸன், ஸன் & ஜோன்ஸ்
(இந்தியா) லிட்., தபால் பெட்டி 6527, பம்பாய் 26


டிரக்குகள்
மற்றும்
பஸ்ஸுகளுக்கு
சிவப்பு
விளயத்தைக்
கவனித்து
வாங்கவும்
சூப்பர் இந்தியா

B. I. S. N. கம்பெனி லிமிடெட்



S. S. "ரஜூலா"

சென்னை - நாகப்பட்டினம் - பினாங்கு - சிங்கப்பூர்

புறப்படும் தேதி

மதராஸ்			நாகப்பட்டினம்		
1951	அக்டோபர்	10	1951	அக்டோபர்	11
,,	நவம்பர்	4	,,	நவம்பர்	5
,,	நவம்பர்	29	,,	நவம்பர்	30
,,	டிஸம்பர்	24	,,	டிஸம்பர்	25

குறைந்த முதல் வகுப்புக் கட்டணம்

மதராஸ் — பினாங்கு	...	ரூ. 360/–
மதராஸ் — சிங்கப்பூர்	...	ரூ. 410/–
நாகப்பட்டினம் — பினாங்கு	...	ரூ. 355/–
நாகப்பட்டினம் — சிங்கப்பூர்	...	ரூ. 405/–

விசேஷ சுற்றுப் பிரயாணக் கட்டணம்—முதல் வகுப்பு மாத்திரம்

மதராஸ் — சிங்கப்பூர் — மதராஸ்	...	ரூ. 850/–
நாகப்பட்டினம் — சிங்கப்பூர் — நாகப்பட்டினம்		ரூ. 840/–

சிங்கப்பூரில் பிரயாணிகள் கப்பலில் தங்கும்போது ஏற்படும் செலவுகளும், விசேஷ சுற்றுப் பிரயாணக் கட்டணத்தில் சேர்க்கப் பட்டிருக்கிறது.

பினாங்கு, போர்ட் ஸ்வெட்டன்ஹாம், சிங்கப்பூருக்கு கார்கோ சாமான்களை நேரடியாக ஏற்றிச் செல்லவும், பாங்காக், ஹாங்காங், ஜப்பான் மற்றும் தூரக் கிழக்குத் திசையிலுள்ள இதர ஊர்களுக்கு சிங்கப்பூரில் கப்பல் மாற்றி அனுப்பும்படியும் ஏற்றுக் கொள்ளப்படும்.

இதர விவரங்களுக்கு தயவு செய்து விண்ணப்பிக்கவும் :

பின்னி & கோ., மதராஸ் லிட்.
7, அரண்மனைக்காரன் தெரு
மதராஸ்.

மதுரா கம்பெனி லிமிடெட்.
முதல் லைன் பீச் ரோட்,
நாகப்பட்டினம்.

பொருள் அடக்கம்

கல்கி


மலர் 11
இதழ் 9

1951 செப்டம்பர் 30

கர ஆ
புரட்டாசி 14உ

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே சம்பவங்களும் கற்பனையே.

காந்தாரியா மகாதேவ் கோவில் சிற்பம்



சமையல் செய்வது ஓர் கலை



ஆனால் அதன் வெற்றிக்குக் காரணம் உபயோகிக்கும் சாதனங்களைப் பொறுத்தது

துஷார்

வனஸ்பதி

இருமுறை சுத்தம் செய்யப்பட்டு பக்குவம் செய்த மேன்மையான சமையல் சாதனம்

நீடித்த புதுமைக்கும், ரகத்தின் மேன்மைக்கும், பரிசுத்தத் திற்கும் இணையற்று விளங்குவது துஷார் வனஸ்பதி. மேலும் மிஞ்சிய சிறிய அளவுகூட வீணாகாமல் மீண்டும் உபயோ கிக்கும் வண்ணம் கெடாதவாறு எப்போதும் ஒரே நிலையில் உள்ளவாறு துஷார் வனஸ்பதி பக்குவம் செய்யப்பட்டது.

துங்கபத்ரா இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், கர்னூல்

கல்கி

மலர் 11

தமிழ்த் திருநாடு தன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்

இதழ் 9

கை கொட்டிச் சிரியாரோ?

உலகில் பல நாடுகள் இந்தியாவுக்குக் கடன் பட்டிருக்கின்றன. அமெரிக்கா தேசம் ரொம்ப ரொம்பக் கடன் பட்டிருக்கிறது.

தென்னாப்பிரிக்கா, கெனியா, இலங்கை, பர்மா, மலாய் முதலிய நாடுகளுக்கு இந்தியத் தொழிலாளிகள் சென்று உழைத்துச் செழிப்பாகச் செய்தார்கள். ஆகையால் அந்நாடுகள் இந்தியாவுக்குக் கடன் பட்டிருக்கின்றன.

ஆனால், அமெரிக்கா தேசம் இந்தியாவுக்குக் கடன்பட்டிருப்பது இந்த வகையைச் சேர்ந்ததன்று; அமெரிக்கா என்பதாக ஒரு தேசம் இன்று வளர்ந்தோங்கி வல்லரசாக இருப்பதே இந்தியாவினால்தான்.

கொலம்பஸ் என்பவன் இந்தியாவுக்குக் கடல் மார்க்கம் கண்டு பிடிப்பதற்காகக் கப்பலில் ஏறிப் பிரயாணம் கிளம்பினான். அமெரிக்காவைக் கண்டு பிடித்தான். முதலில் அது ஒரு புதிய பெரிய கண்டம் என்றே கொலம்பஸ் அறியவில்லை. இந்தியா தேசத்தைக் கண்டு பிடித்ததாகவே எண்ணிக் கொண்டான். ஆகையால் அந்த நாட்டிலிருந்த சுதேசி ஜனங்களை அவன் 'இந்தியர்கள்' என்று அழைத்தான். பின்னால் அவர்களை இந்தியா தேசத்து அசல் இந்தியர்களோடு குழப்பாமலிருக்கும் பொருட்டுச் 'சிகப்பு இந்தியர்கள்' என்று அடைமொழி கொடுத்து அழைத்தார்கள்.

இப்படியாக, அமெரிக்கா கண்டத்தை ஐரோப்பியர் கண்டு பிடித்ததே இந்தியாவின் காரணமாகத்தான். ஆகையால் இன்று அமெரிக்கா நாட்டில் வாழுபவர்கள் அனைவரும், ஜனாதிபதி ட்ருமன், தளபதி மக் ஆர்தர் உள்பட,—தங்கள் வாழ்வுக்கே காரணமான இந்தியா தேசத்துக்கு நன்றிக் கடன் பட்டவர்கள். அந்தக் கடனில் கோடியில் ஒரு பகுதியைத்தான் இப்போது இந்தியாவுக்கு உணவுத் தானியம் உதவ முன் வந்து கழிக்கப் பார்க்கிறார்கள். நிற்க.

நம் நாட்டில் சில அரசியல் வாதிகள் இருக்கிறார்கள். இணையில்லா மதி நுட்பம் படைத்த பிரகஸ்பதிகள். அவர்கள் அமெரிக்காவுக்கு இப்போது இந்தியா கடன்பட வேண்டும் என்கிறார்கள்.

"அமெரிக்கா தேசத்தில் ஏராளமான பணம் இருக்கிறது. இந்தியாவில் பணம் இல்லை. அமெரிக்காவின் பண உதவி அதிகமாகக் கிடைத்தால்தான் இந்தியா பொருளாதாரத் துறையில் முன்னேற முடியும். ஆகையால் இந்தியா தேசம் மேலும் மேலும் அமெரிக்காவின் சிநேகத்தை வளர்த்துக் கொண்டு, மேலும் மேலும் அமெரிக்காவின் பண உதவியைப் பெற்று, மேலும் மேலும் பெரிய தொழில்களை ஏற்படுத்தி வளர்த்து, மேலும் மேலும் பணக்கார முதலாளி வர்க்க நாடாக மாறி வர வேண்டும்" என்று இவர்கள் சொல்கிறார்கள்.

அமெரிக்காவின் சிநேகமும் பண உதவியும் இலேசில் கிடைத்து விடுமா? கிடைக்காது. "ஆகையால் ருஷ்யாவுடனும் சைனாவுடனும் இந்தியா இப்போது பூண்டிருக்கும் சிநேக உறவை அறுத்துக் கொண்டு உலக அரசியல் அரங்கத்தில் அமெரிக்காவுடன் சேர்ந்துவிட வேண்டும்" என்கிறார்கள்.

அதாவது "அமெரிக்காவுக்கு இந்தியா ஒரேயடியாக அடிமை பூண்டு விட வேண்டும்" என்று கூறுகிறார்கள்.

இப்படிப் பட்டவர்கள் காங்கிரஸிலும் இருக்கிறார்கள்; வெளியிலும் இருக்கிறார்கள். காங்கிரஸில் இருந்த அத்தகைய ஒருவர் பண்டித துவாரகநாத் பிரஸாத் மிஸ்ரா. அவர் டாண்டன் விவகாரத்தில் கோபித்துக் கொண்டு வெளியேறி விட்டார். போகிற போக்கில் பண்டித ஜவாஹர்லாலின் அயல்நாட்டுக் கொள்கையைக் காரசாரமாகக் கண்டித்துவிட்டுப் போனார். போன பிறகும் கண்டித்து வருகிறார். கண்டிப்ப

தற்குக் காரணம் இந்தியா அமெரிக்காவோடு ஐக்கியமாகி விடவில்லை என்பதுதான்.

இந்தப் பண்டித மிஸ்ரா குரலின் எதிரொலி சென்ற வாரத்தில் சென்னையிலே கூடக்கேட்டது. இங்கேயும் சில பிரமுகர்கள் காங்கிரஸின் அயல் நாட்டுக் கொள்கையைக் கண்டித்தார்கள். "அமெரிக்காவோடு சேர்ந்தால்தான் இந்தியா தேசம் உருப்படும்" என்றார்கள்.

இந்தியாவில் முதலாளி வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் அனைவரும் அநேகமாக இத்தகைய அபிப்பிராயம் கொண்டிருப்பார்கள்.

ருஷியாவுடனும் சீனாவுடனும் இந்தியா கொண்டிருக்கும் சிநேக உறவைக் கத்திரித்துவிட்டு அமெரிக்காவின் தனிப்பட்ட சிநேகமாகிய அடிமைத் தளையைப் போட்டுக் கொள்ள வேண்டும் என்று அவர்கள் சொல்வார்கள்.

காங்கிரஸுக்குள்ளே பண்டித நேருவுக்கு எதிர்ப்புக் கோஷ்டி உருவாகி வந்ததற்கே இது ஒரு காரணம் என்று சொல்லலாம். இவர்கள் ராஜரிஷி டாண்டனைச் சுற்றி மேற்படி எதிர்ப்பைப் பலப்படுத்தி வந்தார்கள். ஆனால் ராஜ ரிஷி இவர்களைக் கைவிட்டு விட்டார். இந்தக் கோபத்தில் மிஸ்ரா வெளியேறி விட்டார். மற்றும் பலர் தேர்தலை முன்னிட்டு வாயை மூடிக்கொண்டு சும்மா இருக்கிறார்கள். தேர்தலில் கூடுமான ஸ்தானங்களைக் கைப்பற்றிய பிறகு தங்கள் சுயரூபத்தை இவர்கள் காட்ட முன்வருவார்கள்.

* * *

இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு ஏற்பட்ட சுயராஜ்ய சர்க்கார்—நேருவின் சர்க்கார்—உள்நாட்டு நிர்வாகத்தில் பல கொள்கைகளைக் கடைப் பிடித்துப் பல காரியங்களைச் செய்திருக்கிறார்கள். எல்லாம் சரியான கொள்கைகள் என்றோ, சரியான காரியங்கள் என்றோ சொல்ல முடியாது. முரண்பட்ட கொள்கைகள், முறையற்ற காரியங்கள், பயனற்ற திட்டங்கள், பயங்கர நிர்வாக ஊழல்கள்,—இவை யெல்லாம் வெளியாகி யிருக்கின்றன. இவற்றுக்காக நேருவும் வருந்தியிருக்கிறார்; மற்றப் பெருந் தலைவர்களும் வருந்தியிருக்கிறார்கள். நாமும் சில சமயம் எடுத்துக் காட்டி வந்திருக்கிறோம்.

ஆனால் இந்தியா தேசம் சுதந்திரம் அடைந்த பிறகு ஏதாவது ஒரு கொள்கை குற்றமற்றதாயும் தேச நலத்துக்கு உகந்ததாயும் தொடங்கியும் இருந்து வந்திருக்கிறதென்றால், அது நமது அயல் நாட்டுக் கொள்கைதான்.

இந்தியாவின் அயல் நாட்டுக் கொள்கை குற்றமற்றதாயிருப்பதோடு இதுவரை வெற்றிகரமாயும் இருந்து வந்திருக்கிறது.

அந்தக் கொள்கையை நடத்தி வைப்பதற்காக நாம் அயல் நாடுகளுக்கு அனுப்பி வைத்த தூதர்கள், ஸ்தானீகர்கள், பிரதிநிதிகள் பலர் அந்தந்த வேலைக்குத் தகுதியற்றவர்களா யிருந்திருக்கிறார்கள்; அவர்கள் காரியத்தைக் கெடுத்துக் குட்டிச்சுவராக்க முயன்றிருக்கிறார்கள்.

ஆனால் இந்தியாவின் அயல்நாட்டுக் கொள்கை அவ்வளவு திடமான அஸ்திவாரத்தில் அமைந்திருந்தபடியால் தூதர்கள் — ஸ்தானீகர்களால் அதிகமாகக் கெடுதல் செய்துவிட முடியவில்லை.

ஆகவே, இன்றைக்கு உலக அரசியலில் இந்தியா மிகவும் வலிமை வாய்ந்த வசதியான நிலையில் இருந்து வருகிறது.

இந்த நிலைமையில் இந்தியா இருப்பது பொறுக்காமல்தான் அதைச் சீர்குலைத்துவிட வேண்டுமென்று சிலர் ஆசைப்படுகிறார்கள்.

* * *

உலக அரசியலில் இன்று பெரிய வல்லரசு கோஷ்டிகள் ஏற்பட்டிருக்கின்றன. ருஷிய கோஷ்டி ஒன்று; அமெரிக்க கோஷ்டி ஒன்று.

இரண்டு கோஷ்டிகளும் ஏறக்குறைய சம வலிமை பெற்றிருக்கின்றன.

ருஷியாவிடம் ஆள் பலம், ஆயுத பலம், இயந்திர பலம், நுட்ப சாஸ்திர பலம், விஸ்தாரமான பிரதேசத்துக்கு மத்தியில் அமைந்த அரண்களின் பலம் எல்லாம் இருக்கின்றன.

அமெரிக்காவிடமும் மேற்கூறிய எல்லா பலங்களும் இருக்கின்றன.

ருஷியா பொது உடைமைக் கொள்கையைப் பிரசாரம் செய்யும் தேசமாதலால், மற்ற எல்லா நாடுகளிலும் வெகு சீக்கிரத்தில் ஐந்தாம் படை பலத்தைப் பெற்றுவிடக்கூடிய அநுகூலம் ருஷியாவுக்கு இருக்கிறது.

அமெரிக்காவுக்கு இந்த அநுகூலம் இல்லை. அதற்குப் பதிலாகப் பண பலம் இருக்கிறது. பிற நாடுகளுக்குப் பண உதவி செய்யும் வசதி இருக்கிறது. பணத்தின் மூலம் பிற நாடுகளில் பலம் சேர்க்கவும் எதிரி நாடுகளில் ஐந்தாம் படை திரட்டவும் வசதி இருக்கிறது.


ருஷியாவின் பொது உடைமைப் பிரசார இலக்கியத்தை வேறு நாடுகளில் உள்ள பாட்டாளிகளும் பிறரும் இரகசியமாகத் தருவித்து ஆவலுடன் படிப்பார்கள். படித்து 'ருஷியாவே பொது உடைமை; பொது உடைமையே ருஷியா' என்று மயங்குவார்கள். மயங்கி, அந்தந்த நாடுகளில் ருஷியாவுக்கு ஐந்தாம் படையாக வேலை செய்யவும் முன் வருவார்கள்.

அமெரிக்காவுக்கு இந்த வசதி கிடையாது. அமெரிக்காவின் முதலாளித்துவ இலக்கியத்தை வேறு நாட்டு மக்கள் அவ்வளவு ஆர்வத்துடன்

நாகரிகம்



"அரிசிச் சோறு தின்று வாழுபவர்கள் அநாகரிகமானவர்கள்" என்று கனம் உணவு மந்திரி முன்ஷி கூறுகிறார். — செய்தி



படித்து மயங்கிவிட மாட்டார்கள். ஆகையால் வேறு நாடுகளில் பணத்தைச் செலவழித்துத்தான் அமெரிக்கா பலந் திரட்ட வேண்டும்; இந்தாம் படையும் திரட்ட வேண்டும். இதற்கு வேண்டிய பண வசதி அமெரிக்காவுக்கு இருக்கிறது.

இப்படியாக, ஏறக்குறைய சம பலமும் சமமான வசதிகளும் உள்ள இரு பெரும் பூதங்கள் ஒன்றை யொன்று தாக்க முஸ்தீபுகள் செய்து கொண்டிருக்கும் காலத்தில், இந்தியா அனுசரிக்க வேண்டிய கொள்கை என்ன ! இரு பெரும் பூதங்களில் ஒன்றுடன் சேர்ந்து விடுவதா ! சேர்ந்தால் என்ன ஆகும் ! ஒன்று சிகேக பூதத்தினுலேயே விழுங்கப்பட்டு விடும்; அல்லது எதிரி பூதத்துக்கு முதல் இரையாகும்படி நேரிடும்.

இரண்டு கோஷ்டிகளில் எதனுடனும் சேர்ந்து விடாமல் தனித்துச் சுதந்திரத்துடன் நிற்பதே தற்போதைய உலக அரசியலில் இந்தியாவுக்கு உகந்த கொள்கையாகும்.

அந்தக் கொள்கையையே நேருவின் சர்க்கார் உறுதியாகக் கடைப்பிடித்து வருகிறார்கள்.

* * *

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் ஏற்பட்டு வரும் தகராறுகளில் அமெரிக்காவும், அடுத்தபடியாக இங்கிலாந்தும் பாகிஸ்தான் கட்சியையே 'பாரபட்சம்' என்று சொல்லக் கூடிய அளவுக்கு ஆதரித்து வருகின்றன.

இதற்குக் காரணம் என்ன!

உலக இராஜ தந்திரத்தில் 'பல சமன்வயம்' (Balance of Power) என்பதாக ஒரு கொள்கை. வேற்றுமைப் பட்ட இரு நாடுகள் ஏறக் குறைய சம பலம் படைத்திருந்தால் வல்லரசுகளுக்கு அதனால் சௌகரியம். ஒரு கட்சி மேலோங்கிவிட வல்லரசுகள் சம்மதிக்கமாட்டா. முற்காலத்தில் இங்கிலாந்து ஐரோப்பா விஷயத்தில் இந்தக் கொள்கையை அனுசரித்து வந்தது. பிரான்ஸின் பலம் மேலோங்கும் போது அதை மட்டந்தட்டவும் ஜெர்மனியின் வலிமை மிகும்போது அதைத் தீர்த்துக் கட்டவும் பிரிட்டிஷார் இராஜ தந்திரத்தையும் யுத்தத் தந்திரத்தையும் அவ்வப்போது உபயோகித்து வந்தார்கள்.

இப்போது அதே கொள்கையை அமெரிக்கா உலக அரசியலில் அனுஷ்டித்து வருகிறது. ஐரோப்பாவில் ருஷியாவின் பலம் மிகுதியாகாத படி பார்த்துக் கொள்ள பிரான்ஸ், இத்தாலி, மேற்கு ஜெர்மனி, இங்கிலாந்து முதலிய நாடுகளுக்கு உதவுகிறது.

சைனுவின் ராட்சத பலத்துக்கு முட்டுக்கட்டை போடுவதற்காக, ஜப்பான் ராட்சதனுக்குப் புதிய 'விடமின்' மருந்து கொடுத்து உயிர்ப்பித்துப் பலப்படுத்தி வருகிறது.

இந்தக் கொள்கைப்படி இந்தியாவும் பாகிஸ்தானும் ஏறக் குறைய சம பலத்துடன் சண்டை போட்டுக் கொண்டிருப்பதை அமெரிக்கா விரும்புகிறது. அதற்காகவே பாகிஸ்தான் கட்சியில் நின்று சப்பைக்கட்டு கட்டி வருகிறது.

இதையறியாத பிரகஸ்பதிகள் சிலர் என்ன சொல்கிறார்கள், தெரியுமா! "இந்தியா ருஷியாவுடனும் சைனுவுடனும் சிநேகமாயிருக்கப் பார்க்கிறது. அதனாலேதான் அமெரிக்கர் பாகிஸ்தானை ஆதரிக்கிறார்கள். ஆகையால் இந்தியா ருஷியாவுடனும் சைனுவுடனும் பகைத்துக் கொண்டு அமெரிக்காவுடன் சேர்ந்து விடவேண்டும்" என்று நினைக்கிறார்கள். இதை வெளியிட்டுச் சொல்லத் தயங்கி "நேருவின் அன்னிய நாட்டுக் கொள்கையினால் நமக்குச் சிநேகிதர்கள் இல்லாமல் போகிறார்கள்" என்று ஓலமிடுகிறார்கள்.

உண்மையில், அமெரிக்காவின் கோபத்தைக் காட்டிலும் அமெரிக்காவின் அதிகப்படி சிநேகம் இந்தியாவுக்கு இச்சமயம் ஆபத்தை விளைக்கும்.

இந்தியா அமெரிக்காவுடன் ஐக்கியமாகச் சேர்ந்து அமெரிக்காவும் இந்தியாவின் கட்சியில் நிற்கிறதென்று வைத்துக் கொள்வோம்.

பாகிஸ்தான் அப்போது என்ன செய்யும் !

ஏன்! ருஷியாவின் நெருங்கிய சிநேகிதத்தைக் கட்டாயம் தேடிக் கொள்ளப் பார்க்கும்.

அப்போது உலக ஆதிக்கத்தில் நோக்கம் கொண்ட ருஷியா கட்டாயம் பாகிஸ்தானுக்கு உதவி செய்ய முன்வரும்.

பிற்பாடு என்ன நடக்கும்!

நேற்று கொரியாவில் நடந்தது இந்தியாவில் நாளை நடைபெறும்.

ருஷிய கோஷ்டிக்கும் அமெரிக்க கோஷ்டிக்கும் தத்தம் புதிய ஆயுதங்களைப் பரீட்சை பார்க்க இந்தியா மிக வசதியான போர்க்களமாகும்.

கொரியாவில் இரண்டு கோடி ஜனங்கள்தான் உண்டு. அவர்களில் ஒரு கோடிப் பேருக்கு மேல் தீர்ந்து போனபிறகு, மேலே பரீட்சை பார்ப்பதற்கில்லை. ஆகையால் இரு கட்சியும் யுத்த நிறுத்தப் பேச்சில் இறங்கி விட்டார்கள்.

ஆனால், இந் நாட்டிலோ! ஆகா! இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் சேர்ந்து நாற்பது கோடி ஜனங்கள் இருக்கிறார்களே!

அமெரிக்காவும், ருஷியாவும் தங்கள் புதிய ஆயுதங்களைப் பரீட்சை பார்க்க ஆரம்பித்தால் இங்கே வருஷக் கணக்கில் சோதனை பார்த்துக்கொண்டே இருக்கலாமே!

நாற்பது கோடி மக்கள் இலேசில் தீர்ந்துவிடுவார்களா! குற்றுயிரும் குலை உயிருமாகப் பல வருஷ காலம் இருந்தே தீருவார்கள்!

"அமெரிக்காவுடன் இந்தியா ஒரேயடியாக சிநேகமாகி விடவேண்டும்" என்று சொல்லும் கோஷ்டியார் இந்தியா தேசத்தை மேற்படி நிலைக்குக் கொண்டு வரத்தான் பார்க்கிறார்கள்.

* * *

மகாகவி பாரதியார் கூறிய எத்தனையோ தீர்க்க தரிசன அருள் வாக்குகளில்,

"செம்புக்கும் கொம்புக்கும் அஞ்சி—மனிதர்
சிற்றடிமைப் படலாமோ?"

என்பதும் ஒன்று. இன்றைய நிலைமையை உத்தேசித்தே பாரதியார் அவ்விதம் சொன்னாரோ என்று தோன்றுகிறது.

'சிற்றடிமை' என்ற சொற்றொடர் எவ்வளவு பொருத்தமாக விழுந்திருக்கிறது என்றுபாருங்கள்.

இதுவரை பிரிட்டிஷாரிடம் 'பேரடிமை'ப் பட்டிருந்தோம். அரசியல் சுதந்திரத்தை அடியோடு இழந்திருந்தோம். இறைவன் அருளால் சுதந்திரம் கிடைத்தது.

இப்போது பண உதவியையும் ஆயுத உதவியையும் வேண்டி அமெரிக்காவுக்குச் சிற்றடிமைப்படலாம் என்று சிலர் யோசனை சொல்லி வருகிறார்கள்.

பாரதியாரின் தெய்வமணி வாக்கு இன்னொன்றும் இருக்கிறது:—

"கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினால்
கை கொட்டிச் சிரியாரோ?"

தாற்காலிகப் பண உதவியைக் கருதி நாம் அரிதில் பெற்ற சுதந்திரத்தை அமெரிக்கர்களுக்கு விற்றுவிட்டால், உலகம் கை கொட்டித்தான் சிரிக்கும். நம் வருங்கால சந்ததிகளும் சிரிப்பார்கள்.

சரித்திர புருஷர் சேனநாயகா

இலங்கை அரசாங்கப் பிரதம மந்திரி சேனநாயகா, சரித்திரத்தில் இடம் பெறப் போகும் ஒரு பிரமுகர் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் சரித்திரத்தில் இடம் பெறுவதற்குப் பல வழிகள் உண்டு.

செங்கிஸ்கான், நாதிர்ஷா, ஹிட்லர், முஸோலினி இவர்களைப் போல் எண்ணற்ற மக்களுக்கு இன்னல் இழைத்துச் சரித்திரத்தில் இடம் பெறலாம்.

அசோக சக்கரவர்த்தி, ஆப்ரஹாம் லிங்கன், காந்தி மகாத்மா, ஸன்யாட்ஸென் முதலியவர்களைப் போல் மனித சமூகம் என்றும் நன்றி பாராட்டும் படியான தொண்டு புரிந்தும் சரித்திரத்தில் புகழ் அடையலாம்.

பிரதமர் சேனநாயகா எந்த முறையில் சரித்திரப் புகழ் பெறப் போகிறாரோ, தெரியவில்லை.

* * *

இந்தியாவிலிருந்து இலங்கை சென்ற தோட்டத் தொழிலாளிகள் நாலு தலைமுறையாக உழைத்ததின் பயனாகவே இன்று இலங்கை பொருளாதார சுபிட்சம் உடைய நாடாக இருக்கிறது.

ஆயினும், அத்தகைய ஏழு லட்சம் தோட்டத் தொழிலாளிகளுக்கு நன்றி செலுத்துவதற்குப் பதிலாக இலங்கை சர்க்கார் அவர்களுடைய உரிமையைப் படிப்படியாகப் பறித்து விட முயன்று வருகிறார்கள்.

அதற்கு நேற்று வரையில் அவர்கள் ஒரு காரணமும் சொல்லி வந்தார்கள்.

"இந்தியத் தொழிலாளிகள் ஆற்றில் ஒருகாலும் சேற்றில் ஒரு காலுமாக இருக்கிறார்கள். அவர்கள் இலங்கையைத் தங்கள் தாய் நாடாகக் கொள்ளவில்லை. பணம் தேடிக் கொண்டு இந்தியாவுக்குத் திரும்புவதிலேயே கண்ணும் கருத்துமாயிருக்கிறார்கள். அப்படிப் பட்டவர்களுக்கு இலங்கையர்களைப் போல் சம உரிமை எப்படிக் கொடுக்க முடியும்!" என்று சொல்லி வந்தார்கள்.

மேற்படி காரணத்தை இனிமேல் இலங்கை சர்க்கார் சொல்வதற்கில்லை.

எப்படியென்றால், இரண்டு லட்சத்து இருபத்தையாயிரம் தோட்டத் தொழிலாளி இந்தியர்கள் "இலங்கையின் பிரஜா உரிமை எங்களுக்கு வேண்டும்" என்று மனுப் போட்டிருக்கிறார்கள்.

எத்தனையோ இடைஞ்சல்கள், தடங்கல்கள், தொந்தரவுகள் ஆகியவற்றை மீறி அவர்கள் மனுப் போட்டிருக்கிறார்கள்.

இரண்டே கால் லட்சம் இந்தியர்கள் மனுப் போட்டிருக்கிறார்கள் என்றால், இவர்களுடைய குடும்பத்தாரையும் சேர்த்து ஏறக்குறைய ஆறு லட்சம் பேர் மனுப் போட்டிருக்கிறார்கள் என்று கொள்ள வேண்டும்.

அதாவது ஆறு லட்சம் தோட்டத் தொழிலாளி இந்தியர்கள் "இலங்கையே எங்கள் தேசம்; இங்கேயே நாங்கள் வாழ்ந்து உழைத்து மடிவோம்; எங்கள் சந்ததிகளை இங்கேயே விட்டுச் செல்வோம்; வேறு தேசம் எங்களுக்கு இல்லை; வேறு தேசத்துப் பிரஜா உரிமையும் வேண்டியதில்லை" என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டு விண்ணப்பம் போட்டிருக்கிறார்கள்.

இலங்கையை வளப்படுத்திய இந்தியர்கள் "இங்கேயே நாங்கள் இருந்துவிடப் போகிறோம்" என்று சொன்ன பிறகு, இன்னும் என்ன பரீட்சை கொடுக்க வேண்டும்! இன்னும் என்ன சோத

களைக் குள்ளாக வேண்டும்! இன்னும் ஏன் அவர் களைச் சந்தேகக் கண்ணுடன் பார்க்க வேண்டும்!

தர்மம், நியாயம், அரசியல் நேர்மை என்பவற்றுக்குப் பிரதமர் சேனநாயகா மதிப்புக் கொடுப்பதாயிருந்தால், அவர் செய்ய வேண்டியது ஒன்றே ஒன்றுதான்.

விண்ணப்பம் போட்டிருக்கும் எல்லா இந்தியர்களையும் அவர்களுடைய குடும்பத்தாரையும் இலங்கைப் பிரஜைகள் என்று உடனே ஒப்புக் கொள்ள வேண்டியதுதான்.

கையெழுத்துச் சரியாகப் போட்டிருக்கிறார்களா, பாரத்தைச் சரிவரப் பூர்த்தி செய்திருக்கிறார்களா, தகப்பன் பாட்டன் பிறந்த தேதிகளைச் சரியாகக் குறித்திருக்கிறார்களா என்றெல்லாம் பார்த்துக் கொண்டிருக்க வேண்டாம். பார்த்து, போலிக் காரணங்களைச் சொல்லிப் பிரஜா உரிமையை மறுக்க வேண்டாம்.

"இரண்டு காலும் ஆற்றிலே வைத்து விட்டோம்" என்று சொன்னவர்களை, மறுபடியும் நீங்களே சேற்றில் பிடித்துத் தள்ள வேண்டாம்.

உங்களுக்காக நூறு வருஷமாய், நாலு தலைமுறையாய், வியர்வை சிந்தி உழைத்துப் பாடுபட்டவர்களைப் போலிக் காரணங்களைச் சொல்லி நிராகரிக்க வேண்டாம்.

விண்ணப்பம் போட்டவர்களுக்கெல்லாம் உடனே பிரஜா உரிமையைக் கொடுங்கள்.

'இலங்கைப் பிரஜைகள் அல்ல' என்ற காரணத்தைச் சொல்லி அவர்களுடைய வோட்டுரிமையைப் பறித்தீர்களே, அந்த வோட்டுரிமையையும் உடனே திருப்பிக் கொடுங்கள்.

இப்படித் தாராள மனப்பான்மையுடன் காரியம் செய்து சரித்திரத்தில் புகழ் பெற்ற உத்தம புருஷர்களின் கோஷ்டியில் சேருங்கள் என்று பிரதமர் சேனநாயகாவைக் கேட்டுக் கொள்கிறோம்.

தீபாவளி மலர்! திக்திக்கும் தேன் மலர்!

நம் காரியாலயத்தில் உருவாகிக் கொண்டிருக்கும் இவ்வாண்டு "கல்கி" தீபாவளி மலரைப் பார்த்தபோது எதுகை மோனைகளுடன் கவிதை பொங்கிக் கொண்டு வந்தது. "போதும்! நிறுத்து!" என்று கவிதா தேவிக்குக் கட்டளையிட்டுவிட்டு, அதில் ஒரே ஒரு வரியை மட்டும் மேலே தலைப்பாக உபயோகித்துக் கொண்டோம்.

செய்யப் போகும் எந்தக் காரியத்தைப் பற்றியும் அதிகப்படுத்திச் சொல்வதில் பயன் ஒன்றுமில்லை. கொஞ்சம் குறைத்துச் சொல்வதே நல்லது. ஆனால் இந்த வருஷத்துக் "கல்கி" தீபாவளி மலரைப்பற்றி எவ்வளவு குறைத்துச் சொன்ன போதிலும் அது அதிகப்படியாகவே தோன்றும்.

வர்ண சித்திரங்கள் அப்படிக் கண்ணைப் பறித்துக் கொண்டு போகின்றன. ஹாஸ்ய சித்திரங்கள் அப்படிக் குலுங்கச் சிரிக்க வைக்கின்றன. கதைகளும் கட்டுரைகளும் அப்படித் திகட்டாத இனிமையுடன் திகழ்கின்றன.

மிகக் குறைவாகச் சொன்னாலும், சென்ற வருஷத்து மலரைக் காட்டிலும் இந்த வருஷ தீபாவளி மலர் ஒரு படி மேலாக இருக்கும் என்று சொல்லியே தீரவேண்டும்.

ஆம்; தரத்தில் கூடியிருப்பது போலவே விலையிலும் ஒரு ரூபாய் கூடியிருக்கிறது. இதன் காரணம் நேயர்கள் அறிந்ததே. காகித கிராக்கியைப் பற்றித்தான் பத்திரிகைகளில் ஓயாத பல்லவி பாடப்பட்டு வருகிறதே!

சென்ற வருஷத்தைப் போல் ஒன்றுக்கு இரண்டு மடங்கு விலைகொடுத்துக் காகிதம் வாங்க வேண்டியிருந்தது. ஆனால் விலையில் கூடுதலோ நாலில் ஒரு பங்குதான். எனவே, தீபாவளி மலரை வாங்கும் நேயர்கள் தலைக்கு மூன்று ரூபாய் லாபம் அடைந்ததாகவே கருதுவார்கள்.

இது வேறொரு அச்சத்தை நமக்கு உண்டாக்குகிறது. ஐந்து ரூபாய் என்று விலை நாம் குறிப்பிட்டிருந்த போதிலும் அதைவிட அதிக விலை விற்கப்படலாம் என்ற அச்சத்தையே குறிப்பிடுகிறோம். இப்படிக் கறுப்பு மார்க்கெட் விலையில் கல்கி தீபாவளி மலர் விற்கப்படுவதை நாம் சிறிதும் விரும்பவில்லை. இதைத் தடுப்பதற்குச் சிறந்த நேர் வழியும் இருக்கிறது. நேயர்கள் முன்னதாகவே நம் காரியாலயத்திலோ அல்லது நம் ஏஜண்டுகளிடமோ முன் பணம் கொடுத்துப் பதிவு செய்து கொண்டு விட்டால் குறிப்பிட்ட விலைக்கு மலர் நிச்சயமாகப் பெறலாம். இவ்விதம் முன்னதாகப் பணம் அனுப்பிப் பதிவு செய்து கொண்டு நம்முடன் ஒத்துழைக்கும்படி நேயர்களைப் பெரிதும் கேட்டுக் கொள்ளுகிறோம்.

அட்டைப்பட விளக்கம்

ஓர் இள மங்கை ஆற்றங் கரைக்குத் தண்ணீர் மொண்டு செல்ல வந்தாள். வந்தவள் தான் வந்த காரியம் மறந்து ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருக்கிறாளே, ஏன்?

எல்லாம் அந்தக் காதல் புரியும் கூத்துத்தான்! அவள் ஒரு இளைஞனை ஒருநாள் சந்தித்தாள். அது முதல் அவள் நினைவிலிருந்து அவன் அகலுவதில்லை. பெரிய தொல்லையாகப் போய்விட்டது. அவனை மறக்க என்னவெல்லாமோ செய்து பார்த்தாள், முடியவில்லை.

கடைசியாக ஆற்றங் கரைக்குப் போய்த் தண்ணீர் எடுத்து வரலாம் என்று வந்தால், வந்த இடத்தில் காரியம் மறந்து விட்டது. அவன் நினைவு வந்து விட்டது.

"மன்மதனை வென்று வயங்கும் திருவழகை
என்மனதுக் குள்ளே எழுதவோ வந்தகன்றான்!"

என்று என்ன என்னவோ நினைத்தபடி உட்கார்ந்து விடுகிறாள். அவளுடைய கவலையை மாற்றுவதற்காக நம் சித்திரக்காரர் அந்த மன்மதனை வென்ற அழகனை அவளுக்குப் பின்னால் எழுதியிருக்கிறார்! அவள் திரும்பிப் பார்த்தால் தானே?

காலராவும் கதி கலங்கும்!

சில நாளைக்கு முன்னால் சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் திடீரென்று ஓர் அதிசயமான காட்சி தென்பட்டது. நாலாபுறமும் ஆயுதம் தரித்த சிப்பாய்கள் நின்றார்கள். யாரும் உள்ளே போகக்கூடாது, வெளியிலும் வரக் கூடாது என்று கண்டிப்பான தடை உத்தரவை அமுல் நடத்தினார்கள்.

இந்தக் காபந்து தடபுடலுக்குக் காரணம் என்னவென்று விசாரித்தபோது, ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு ஒரு மகா பெரிய பிரபு விஜயம் செய்திருந்தார் என்று சொன்னார்கள். அவர் பெயர் மிஸ்டர் காலரா துரை என்று தெரிய வந்தது. இதைக் கேட்டதும், ஆஸ்பத்திரியில் சிகிச்சையில் இருந்த உற்றார் உறவினரைப் பார்க்க வந்தவர்கள் ஓட்டம் பிடித்தார்கள். வெகுதூரம் ஓடிய பிறகு தான் நின்று திரும்பிப் பார்த்தார்கள்.

அப்படி எல்லாரையும் விரட்டியடிக்கக் கூடிய காலரா துரைகூடக் கதிகலங்கிப் போய்விட்டார். அவர் வயிற்றில் புளியைக் கரைத்து விட்டது. காலரா துரைக்கே காலரா வந்துவிடும் என்று தோன்றியது. காரணம் என்ன தெரியுமா! களா என்றும் காளா என்றும் கலா என்றும் காலா என்றும் பலவித உச்சரிப்புடைய பட்டப்பெயர் பெற்ற மாஜி ரெவின்யூ மந்திரி மாஜி காங்கிரஸ் பொதுக் காரியதரிசி வெங்கட் ராவ் சுகாதார இலாகா மந்திரியாகி விட்டார் என்ற செய்திதான்.

காலரா துரையே அப்படிக் கதிகலங்கி ஓடினார் என்றால், கேவலம் வைசூரி, மலேரியா, டைபிஃபஸ், டைபாய்டு, டூபர்குலாஸிஸ் முதலிய நோய்களைப் பற்றி யெல்லாம் கேட்பானேன்! ஒவ்வொன்றும் "போறேன் இதோ போறேன்!" என்று அலறிக் கொண்டு ஓட்டம் எடுத்திராதா!

அதோடுகூட, காலா வெங்கட்ராவ் சுகாதார மந்திரியாகப் போகிறார் என்ற செய்தி ஆந்திர கேசரி பிரகாசம் காருவுக்கு முன்னாலேயே ஒரு வாறு தெரியும் போலிருக்கிறது. அவர் ஒரு தனிப்பட்ட ஆஸ்பத்திரியில் போய்ப் பத்திரமாக உட்கார்ந்து கொண்டார். ஸ்ரீ காலா வெங்கட் ராவைப் பற்றிய பாடலைக் கேட்டிருக்கிறீர்களா!

"ஆந்திரர்களுக்குள் அறிவாளன்
ஆப்தர்களுக்கு அனுகூலன்
பட்டாபி புகழும் சீலன்—ஆனால்
பிரகாசத்துக் கோரு காலன்!"

என்று இவ்விதம் புகழ் பெற்ற காலா வெங்கட் ராவ் சுகாதார மந்திரியாக வருவதா யிருந்தால், ஸ்ரீ பிரகாசத்துக்கு முன் கூட்டியே சுகக்கேடு வருவதற்குக் கேட்பானேன்!

அப்படி ஆந்திர கேசரியைத் திகிலடையச் செய்யக் கூடிய ஸ்ரீ காலா வெங்கட் ராவ் காங்கிரஸுக்கே ஒரு காலனாகி விடுவாரோ என்று சிலர் பயந்து கொண்டிருந்தார்கள். ஜவாஹர்லால்ஜி அந்தப் பயத்தைப் போக்கி விட்டார். காலாவை அனுப்பி விட்டுச் சஞ்சீவி ரெட்டியைச் சேர்த்துக் கொண்டார்! காங்கிரஸ் நோயைத் தீர்க்கச் சஞ்சீவி எவ்வளவு பயன்படும் என்று இனித் தெரிய வேண்டும்.

ஸ்ரீ காலா வெங்கட் ராவ் பொதுக் காரியதரிசி வேலையை விட்டதினால் காங்கிரஸ் அடைந்த நஷ்டம் சென்னை சர்க்காரின் அதிர்ஷ்டமாயிற்று! அகில இந்தியாவுக்குக் கொடுத்து வைக்காததை தென்னிந்தியாவுக்குக் கொடுத்து வைத்தது! அதிலும் ஆந்திர மாகாணத்துக்கு அதிகமாகக் கொடுத்து வைத்தது.

எப்போது காலா வெங்கட் ராவ் திரும்பி வந்து மந்திரி சபையிலும் சேர்ந்து விட்டாரோ, இனி ஆந்திர மாகாணத்தில் காங்கிரஸ் வெற்றியைப் பற்றிக் கேட்பானேன்! பிரஜா கட்சி மண்ணை வாரிப் போட்டுக் கொண்டு போக வேண்டியது தான்! ஆசிரியர் ரங்காவுக்குக் கதி கலங்கிப் போயிருக்கும். காலராவே கதி கலங்கும் போது ஆசிரியர் ரங்கா எம்மாத்திரம்! அவர் சீக்கிரத்தில் ஆஸ்பத்திரிக்காவது போக வேண்டும்; அல்லது உண்ணாவிரதமாவது தொடங்க வேண்டும். தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறலாம் என்று கனவுகூடக் காண வேண்டியதில்லை. அப்படிக் கனவு கண்டால் அதிலும் காலா வெங்கட் ராவ் சூலாயுதத்தோடு வந்து பயமுறுத்துவார்!

ஸ்ரீ காலா வெங்கட்ராவ் நெடு நாளையக் காங்கிரஸ் தொண்டர். சிறந்த தியாகி என்பதோடு திறமைசாலி என்றும் பெயர் படைத்தவர். சென்னை மந்திரி சபையில் ரெவின்யூ மந்திரியாக இருந்து சிலகாலம் வேலை பார்த்தபோது நன்றாக வேலைசெய்து புகழ் பெற்றார். அவர் காங்கிரஸ் பொதுக் காரியதரிசியான போது நாம் அனைவரும் சேர்ந்து ஏக மனதாக அவருக்கு வாழ்த்துக் கூறி அனுப்பி வைத்தோம்.

துரதிருஷ்ட வசமாகக் காங்கிரஸ் பொதுக் காரியதரிசி பதவியிலிருந்து அவர் நல்ல பெயர் சம்பாதித்துக் கொள்ளவில்லை. காங்கிரஸ் ஸ்தாபனத்தில் கோஷ்டிப் பூசல்களை வளர்ப்பதற்கு உடந்தையா யிருந்தார். காங்கிரஸ் ஸ்தாபனத் தேர்தல்களில் நடந்த 'தில்லு முல்லு'களைப் பற்றித் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளாமல், அவற்றை மூடி மழுப்பப் பார்த்தார். பாவம்! ராஜரிஷி டாண்டனை ஆட்டி வைத்து விட்டார்!

இந்தக் காரியங்கள் பொறுக்க முடியாத அளவுக்குப் போன பிறகு ஜவாஹர்லால்ஜி விழித்துக் கொண்டார். ராஜ ரிஷி டாண்டனோடு காலாவையும் சேர்த்து வெளியேற்றினார்.


இப்படிப்பட்ட நல்ல சேர்த்தியுடன் ஸ்ரீ காலா வெங்கட்ராவ் மறுபடியும் சென்னை மந்திரி சபையில் வந்து சேர்ந்திருக்கிறார். காலாவை விட்டால் வேறு கதியில்லை என்ற நிலைக்கு நமது மந்திரி சபையும் வந்திருந்தது போலும்!

பரவாயில்லை! மனிதர்களுக்கும் மந்திரி சபைகளுக்கும் சில சமயம் இப்படியெல்லாம் ஏற்றத் தாழ்வுகள் ஏற்படுவது இயல்புதான்.

ஸ்ரீ காலா வெங்கட்ராவ் சுகாதார மந்திரியாகப் பதவி வகிக்கப் போகும் சொற்ப காலத்தில் அவர் பிரமாதமாக எதுவும் செய்து விடுவதற்கில்லை. ஆனால் இம்மாகாணத்துக்கு அவசியமாயிருக்கும் ஒரே ஒரு ஆபரேஷனையாவது அவர் திறமையாக நடத்தி வைத்து விட்டாரானால் நாம் திருப்தி யடையலாம்.

ஆந்திர மாகாணப் பிரிவினை ஆபரேஷனைத் தான் குறிப்பிடுகிறோம்.

நோயாளி எக்கேடு கெட்டாலும் பாதகமில்லை; ஆபரேஷன் மட்டும் வெற்றிகரமாக நடந்து விட்டால் போதும்!



மணமகன் :

கே. ஆர். சுப்பிரமணியம்

மணமகள் :

கௌசல்யா

கோவை நகரிலேயே சமீபத்தில் இதுபோல் திருமணம் நடந்ததில்லை என்று சொல்லும்படியாக சென்ற 6-ந் தேதியன்று கோவை, ஆர். எஸ். புரத்தில் இரண்டு திருமணங்கள் நடந்தன. பிரபல தங்கம், வெள்ளி, வைரம் வியாபாரி (கே. ஆர். & சன்ஸ்) ஸ்ரீ கே. இராமகிருஷ்ணப் பிள்ளை அவர்களின் குமாரர் ஸ்ரீ சுப்ரமணியத்துக்கும் சோரனூர் பாங்கர் ஸ்ரீ மாரிமுத்துப் பிள்ளை அவர்களின் குமாரி சௌ. கௌசல்யாவுக்கும் வெகு விமரிசையாகத் திருமணம் நடந்தது. அதே பந்தலில் உடனே கோத்தகிரி (லேட்) ஸ்ரீ வையாபுரிப் பிள்ளை அவர்களின் குமாரர் ஸ்ரீ நாதமுனி, B.Sc., B.Com. அவர்களுக்கும் கே. ஆர். & சன்ஸ் சொந்தக்காரர் ஸ்ரீ ராமகிருஷ்ணப் பிள்ளை அவர்களின் குமாரி சௌ. ராஜலக்ஷ்மிக்கும் சிறப்பாகத் திருமணம் நடந்தது. இரண்டு திருமணங்களுக்கும் உள்ளூர் வெளியூர் பிரமுகர்களும், உறவினர்களும் ஏராளமான நண்பர்களும் விஜயம் செய்து சிறப்பித்தனர். தம்பதிகளுக்கு ஏராளமான வாழ்த்துச் செய்திகளும் அன்பளிப்புகளும் வந்து குவிந்தன. அன்று மாலை இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகர் இன்னிசைக் கச்சேரியும் இரவு ''சீதாகல்யாணம்'' என்னும் பாவைக் கூத்து நாடகமும் பத்தாயிரம்பேர் உட்காரக்கூடிய விசேஷக் கல்யாணப் பந்தலில் நெருக்கியடித்து உட்கார்ந்திருந்த கூட்டத்துக்கு மத்தியில் நடந்தது. வாழ்க தம்பதிகள்!

மணமகன் :


வி. நாதமுனி
B.Sc., B.Com.

மணமகள் :

ராஜலக்ஷ்மி



திருமணம்

★  ★

காயாமொழி ஸ்ரீ S. சுப்பிரமணிய ஆதித்தர் அவர்களின் புதல்வன்
எஸ். ராஜகோபால் ஆதித்தனுக்கும்
(Partner of S. S. Athithan & Bros., Colombo)
நாலுமாவடி ஸ்ரீ நாவுக்கரசு நாடார் அவர்கள் புதல்வி
ஜெகதீஸ்வரி அம்மாளுக்கும்
16—9—51ல் திருமணம் சிறப்பாக நடைபெற்றது

அவ் வைபவத்தின்போது அன்புடன் நல்லாசிகள், வெகுமதிகள் அனுப்பியவர்களுக்கும், நேரில் வந்து ஆசீர்வதித்தவர்களுக்கும் தங்களின் மனமுவந்த நன்றியறிதலை இதன்மூலம் தம்பதிகள் தெரிவித்துக்கொள்கின்றனர்.



அத்தியாயம் 35

இலங்கைச் சிங்காதனம்

பிக்ஷு கையில் பிடித்த தீபத்தின் வெளிச்சத்தில் சுற்றுமுற்றும் ஒரு கணம் பார்த்தார். இளவரசரும் அவருடைய தோழர்களும் நிற்பதைக் கண்டு கொண்டார் போலும். மறு கணம் விளக்கும் வெளிச்சமும் மறைந்தன. சிறிது நேரத்துக்கெல்லாம் பிக்ஷு தடாகத்தின் படிக்கட்டுகளின் வழியாக நடந்து வருவது தெரிந்தது. இளவரசர் நிற்குமிடத்துக்கு வந்தார். நிலா வெளிச்சத்தில் அவருடைய திருமுகத்தை ஏறிட்டுப் பார்த்தார்.

"தேவப்ரியா! வருக! வருக! தங்களை எதிர் நோக்கி வைதுல்ய பிக்ஷு சங்கம் காத்திருக்கிறது. மகா தேரோ குருவும் விஜயம் செய்திருக்கிறார். குறிப்பிட்ட நேரம் தவறாது தாங்கள் வந்து சேர்ந்தது பற்றி என் உள்ளம் உவகை கொண்டு நன்றி செலுத்துகிறது!" என்றார்.

"அடிகளே! இந்தச் சிறுவனிடம் பல குறைகள் குடி கொண்டிருப்பதை அறிந்துள்ளேன். எனினும், வாக்குத் தவறுவதில்லை என்ற ஒரு நல்விரதத்தை அனுசரித்து வருகிறேன். அந்த விரதத்தில் என்றும் தவறியதில்லை!" என்றார் பொன்னியின் செல்வர்.

"இன்று சூரியன் அஸ்தமிக்கும் நேரம் வரையில் தாங்கள் வந்து சேரவில்லை என்று அறிந்தேன். அதனால் சிறிது கவலை ஏற்பட்டது."

"முன்னதாக வந்திருந்தால், ஒரு வேளை வாக்கை நிறைவேற்ற முடியாமல் போயிருக்கலாம். அதனாலேயே சமயத்திற்கு வந்து சேர்ந்தேன்."

"ஆம், ஆம்! வானில் ஜோதி மயமாக ஒளிரும் கதிரவனை மறைத்து விடுவதற்குப் பல மேகத் திரள்கள் சுற்றி வருகின்றன. நாங்களும் அறிந்துள்ளோம். ஆனால் அந்த மேகத் திரள்கள் எல்லாம் புத்த பகவானுடைய கருணை யென்னும் பெருங் காற்றினால் சின்னாபின்னமாகிக் கலைந்து விடும். போகட்டும்! இதோ நிற்பவர்கள் யார்? தாங்கள் நன்கு அறிந்தவர்கள்தானா? தங்களின் பூரண நம்பிக்கைக்கு உரியவர்களா? கொடுத்த வாக்கைத் தவறாது நிறைவேற்றக் கூடியவர்களா?" என்று பிக்ஷு கேட்டார்.

"அடிகளே! என்னுடைய கரங்கள் இரண்டையும் எப்படி நான் நம்புகிறேனோ, அப்படியே இந்த நண்பர்களையும் நம்புகிறேன். எனினும் தங்களுக்கு விருப்பமில்லையென்றால் இவர்களை இங்கேயே விட்டு விட்டுத் தங்களுடன் தனித்து வரச் சித்தமா யிருக்கிறேன்!" என்றார் இளவரசர்.

"இல்லை, இல்லை! அவ்வளவு பெரிய பொறுப்பை ஏற்றுக் கொள்ள நான் சித்தமாயில்லை. தங்களை நான் அழைத்துப் போகும் இடம் மிகப் பத்திரமானதுதான். ஆயினும், நீண்ட வழியில் போக வேண்டும். எந்த மூலையில் எந்தத் தூணுக்குப் பின்னால் என்ன அபாயம் மறைந்திருக்கும் என்று யார் சொல்ல முடியும்? இவர்கள் இருவரும் அவசியம் வரட்டும்!" என்றார் பிக்ஷு.

இவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த வந்தியத்தேவனுடைய உள்ளம் கொந்தளித்தது. முன்பின் அறியாத தன்னிடம் இளவரசர் இவ்வளவு பரிபூரண நம்பிக்கை காட்டி மிக அந்தரங்கமான காரியத்துக்கு அழைத்து வந்ததை நினைத்துப் பூரிப்பு உண்டாயிற்று. இன்றிரவு ஏதோ முக்கியமான நிகழ்ச்சி

நடைபெறப் போகிறது, அது என்னவாயிருக்கும் என்ற நினைவு மிக்க பரபரப்பை அளித்தது.

பிக்ஷு முன்னால் சென்று வழிகாட்ட மற்றவர்கள் பின் தொடர்ந்து சென்றார்கள். தடாகத்தின் படிக்கட்டுகளின் வழியாகச் சென்று பின் புறத்துக் கல் சுவரில் குடைந்து அமைந்திருந்த அறையில் புகுந்தார்கள். அதன் ஒரு பக்கம் சென்று இருட்டில் பிக்ஷு ஏதோ செய்தார். உடனே ஒரு வழி ஏற்பட்டது. உள்ளே வெளிச்சம் காணப்பட்டது. பிக்ஷு அங்கு வைத்திருந்த தீபத்தைக் கையில் ஏந்திக் கொண்டார். மற்ற மூவரும் உள்ளே வந்ததும் வழியும் அடைபட்டது. வெளியே தடாகத்தில் சிங்க முகத்திலிருந்து விழுந்த அருவியின் ஓசை மிக இலேசாகக் கேட்டது. இல்லாவிட்டால் ஒரு கணத்துக்கு முன்னால் அப்படி தடாகக் கரையில் நின்று கொண்டிருந்தோம் என்பதையே அவர்களால் நம்ப முடியாமல் போயிருக்கும்.

குறுகலான சுரங்கப் பாதை வழியாக அவர்கள் சென்றார்கள். பாதை வளைந்து வளைந்து சென்றது. முடிவில்லாமல் சென்று கொண்டிருப்பதாகத் தோன்றியது. அவர்கள் காலடிச் சத்தமும் அதன் எதிரொலியும் பயங்கரத்தை உண்டாக்கின. வந்தியத்தேவனுக்கு நடு நடுவே இளவரசர் ஏமாந்து போய் ஏதோ ஒரு சூழ்ச்சியில் சிக்கிக் கொண்டாரோ என்ற ஐயம் உண்டாயிற்று.

பாதை அகன்று அகன்று வந்து கடைசியில் ஒரு மண்டபம் தெரிந்தது. எப்பேர்ப்பட்ட மண்டபம்? பிக்ஷு கையில் பிடித்து வந்த தீபத்தில் சிறிய பகுதி தான் மங்கலாகக் கண்ணுக்குப் புலனாயிற்று. ஆயினும் அதன் தூண்கள் பளிங்குக் கல்லினால் ஆன தூண்கள் என்பது தெரிந்தது. நாற்புறமும் புத்தர் சிலைகள் தரிசனம் தந்தன. நிற்கும் புத்தர்கள், படுத்திருக்கும் புத்தர்கள், போத நிலையில் அமர்ந்திருக்கும் புத்தர்கள், ஆசீர்வதிக்கும் புத்தர்கள், பிரார்த்தனை செய்யும் புத்தர்கள்,—இப்படிப் பல புத்தர் சிலைகள் தோன்றின.

பளிங்கு மண்டபத்தைத் தாண்டி, அப்பால் சென்றார்கள். மறுபடி ஒரு குறுகிய பாதை. பின்னர் இன்னொரு மண்டபம். இதன் தூண்கள் தாமிரத் தகடுகளினால் ஆனவை. இரத்தினச் சிவப்பு நிறம் பெற்றுத் திகழ்ந்தன. இந்த மண்டபத்தின் மேற் கூரையிலும் செப்புத் தகடுகள். அவற்றில் பலவகைச் சித்திர வேலைப்பாடுகள். நாலாபுறமும் வித விதமான புத்தர் சிலைகள். இம்மாதிரியே, அபூர்வமான மஞ்சள் நிற மரத் தூண்களை உடைய மண்டபம், யானைத் தந்தங்களால் இழைத்த தூண்களை உடைய மண்டபம், பொன்னும் மணியும் இழைத்த தூண்களைக் கொண்ட மண்டபம்,—இவற்றையெல்லாம் கடந்து சென்றார்கள். அதி வேகமாக நடந்து சென்ற போதிலும் வந்தியத்தேவன் அங்கங்கே தூண்களைத் தொட்டுப் பார்த்துக் கொண்டே போனான். இளவரசர் அவற்றைச் சிறிதும் பொருட்படுத்தாது முன்னோக்கிய பார்வையுடன் சென்றது அவனுக்கு அளவிலா வியப்பை அளித்தது.

உலோக மண்டபங்களையெல்லாம் தாண்டிக் கடைசியில் சாதாரண கருங்கல் மண்டபம் ஒன்றுக்கு வந்து சேர்ந்தார்கள். ஆனால் விசாலமான அம் மண்டபத்தில் அபூர்வமான காட்சி தென்பட்டது. முந்தைய மண்டபங்களில் புத்தர் பெருமானின் சிலைகளைத் தவிர மனிதர் யாருமில்லை. இந்தக் கருங்கல் மண்டபத்தில் புத்த பிக்ஷுக்கள் பலர் கூடியிருந்தார்கள். அவர்களுடைய முக மண்டலங்கள் தேஜஸ் நிறைந்து திகழ்ந்தன. அவர்களுக்கு மத்தியில் மகா தேரோ குரு நடுநாயகமாக ஒரு பீடத்தில் வீற்றிருந்தார். அவருக்கு எதிரே நவரத்தின கசிதமான ஒரு தங்கச் சிங்காதனம் காணப்பட்டது. அதன் அருகில் ஒரு பீடத்தின்மேல் மணி மகுடம் ஒன்றும் உடை வாளும் செங்கோலும் இருந்தன. மண்டபத்தில் நாலாபுறமும் தீபங்கள் எரிந்தன. தீபச் சுடரின் ஒளியில் தங்கச் சிங்காதனமும் மணி மகுடமும் உடைவாளும் ஜொலித்துத் திகழ்ந்தன.

இளவரசர் முதலியோர் அந்த மண்டபத்துக்குள் நுழைந்ததும் பிக்ஷுக்கள் அனைவரும் எழுந்து நின்று "புத்தர் வாழ்க" "தர்மம் வாழ்க" "சங்கம் வாழ்க" என்று கோஷித்தார்கள்.

இளவரசர் மகா தேரோ குருவின் சமீபம் வந்து வணங்கி நின்றார்.

பிக்ஷுக்களின் அத்தியட்சகர் சிங்காதனத்துக்கு அருகில் கிடந்த ஒரு சாதாரண பீடத்தைச் சுட்டிக் காட்டி, அதில் அமரும்படி இளவரசரை வேண்டினார்.

"மகா குருவே! இச் சிறுவனுக்கு முன்னால் பிராயத்திலும் தர்மத்திலும் மூத்தவர்களாகிய தாங்கள் அமர வேண்டும்" என்று வேண்டினார் இளவரசர்.

அத்தியட்சக மகா குரு தமது பீடத்தில் அமர்ந்ததும் இளவரசரும் தமக்கென்று குறிப்பிட்ட ஆசனத்தில் பணிவுடன் உட்கார்ந்தார்.

"தேவர்களின் அன்புக்குரிய இளவரசரே! தங்கள் வருகையினால் இந்த மகா போதி சங்கம் மிக்க மகிழ்ச்சி அடைந்திருக்கிறது. நாங்கள் குறிப்பிட்ட நிபந்தனைகளையெல்லாம் ஒப்புக்கொண்டு பல சிரமங்களுக்கு உட்பட்டு வந்திருக்கிறீர்கள். புத்த பகவானுடைய கருணை தங்களிடம் பூரணமாக இருப்பதற்கு வேறு அத்தாட்சி தேவையில்லை!"—இவ்விதம் பாளி பாஷையில் பெரிய குரு கூற, இளவரசரை அழைத்து வந்த பிக்ஷு தமிழில் மொழி பெயர்த்துச் சொன்னார். மற்ற பிக்ஷுக்கள் "சாது! சாது!" என்று கோஷித்துத் தங்கள் சந்தோஷத்தை வெளியிட்டார்கள்.

மகா தேரோ மேலும் கூறலுற்றார்:— "இலங்கைத் தீவுக்குப் புத்த தர்மத்தை அனுப்பிய பாரத வர்ஷத்துக்கு நாங்கள் பெரிதும் கடமைப் பட்டிருக்கிறோம். ஆனால் ஆதி நாளிலிருந்து உங்கள் நாட்டிலிருந்து படையெடுத்து வந்த சோழர்கள், பாண்டியர்கள், மலையாளத்தார், கலிங்கத்தார் எல்லாரும் இங்கே பல அட்டூழியங்களைச் செய்ததுண்டு. புத்த விஹாரங்களையும் பிக்ஷுக்களின் மடாலயங்களையும் குருகுலங்களையும் அவர்கள் இடித்துத் தள்ளி தேவர்களின் சாபத்துக்கு ஆளானார்கள். உங்கள் நாட்டவரைச் சொல்வானேன்? இந்த நாட்டின் மன்னர்களே அத்தகைய கோர கிருத்யங்களைச் செய்திருக்கிறார்கள். புத்த சங்கத்தில் பிரிவினையை ஏற்படுத்தினார்கள். தங்களுடைய தீய செயல்களை எதிர்த்த பிக்ஷுக்களின் விஹாரங்களை இடித்தார்கள்; அக்கினிக்கு இரையாக்கினார்கள். இரண்டு காதங்களை நீளமும் ஒருகாதம் அகலமும் உள்ள இந்த விசாலமான புண்ணிய நகரத்தில் ஒரு சமயம் பாதி விஸ்தீரணத்தில் புத்த விஹாரங்கள் இருந்தன. அவற்றில் பெரும் பகுதி இன்று இடிந்து பாழாய்க் கிடக்கின்றன. இடிந்த விஹாரங்களைப் பழுது பார்த்துச் செப்பனிட்டுக் கொடுக்க வேண்டும் என்று இதுவரை எந்த அரச குலத்தினரும் கட்டளை யிட்டதில்லை. அத்தகைய ஆக்ஞை பிறப்பிக்கும் பாக்கியம் இளவரசர் அருள்மொழி வர்மருக்கே கிடைத்தது. தேவர்களுக்கு உகந்தவரே! தங்களுடைய இந்தச் செய்கையைப் புத்த மகா சங்கம் பெரிதும் பாராட்டுகிறது..."

இளவரசர் தலை வணங்கி மகா தேரோவின் வாழ்த்தை ஏற்றுக் கொண்டார்.

"இன்னும், இந்தப் புராதன புண்ணிய நகரத்தில் வெகு காலமாகப் பெரஹரா உற்சவம் நடைபெறாமல் தடைப்பட்டிருந்தது. நூறு ஆண்டுகளுக்கு முன்னால் பாண்டியர்கள் ஒரு சமயம் இந்த மாநகரத்தைப் பிடித்தார்கள். அப்போது இலங்கை அரச குலத்தார் புலஸ்திய நகரம் சென்றார்கள். அது முதல் இங்கே பெரஹராத் திருவிழா நடைபெற்றதில்லை. இந்தப் புண்ணிய வருஷத்தில் தாங்கள் அவ்வுற்சவம் மீண்டும் நடைபெறலாம் என்று கட்டளை யிட்டீர்கள். அதற்கு வேண்டிய வசதியும் அளித்தீர்கள். இதுபற்றியும் புத்த சங்கத்தார் சந்தோஷமடைந்திருக்கிறார்கள்......"

இளவரசர் மீண்டும் சிரம் வணங்கி "மகா குருவே! அடியேன் புத்த சங்கத்தாருக்கு இன்னும் ஏதேனும் சேவை செய்யக் கூடியதாக இருந்தால் கருணை கூர்ந்து பணித்தருள்க!" என்றார்.

அத்தியட்சகர் புன்னகை புரிந்து, "ஆம், இளவரசரே! புத்த சங்கம் மேலும் தங்களுடைய சேவையை நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறது. அதற்கு முன்னதாக, இன்னும் சில வார்த்தைகள் கூற வேண்டும். புத்த பகவான் கடைசித் திரு அவதாரத்துக்கு முன்னால் வேறு பல அவதாரங்களில் தோன்றியதாக அறிந்திருப்பீர்கள். ஒரு சமயம் சிபிச் சக்கரவர்த்தியாக அவதரித்துக் கொடுமை நிறைந்த இந்த உலகத்தில் ஜீவகாருண்யத்தின் பெருமையை உணர்த்தினார். ஒரு சிறிய புறாவின் உயிரைக் காப்பாற்றும் பொருட்டுத் தமது திருமேனியின் சதையைத் துண்டு துண்டாக அவர் அரிந்து துலாக்கோலில் இட்டார். அந்தச் சிபிச் சக்கரவர்த்தியின் வம்சத்திலே வந்தவர்கள் என்று சோழ குலத்தவராகிய நீங்கள் சொல்லிக் கொள்கிறீர்கள். சிபியின் வம்சத்தில் வந்த காரணம் பற்றிச் 'செம்பியன்' என்ற பட்டப் பெயரும் சூடிக் கொள்கிறீர்கள். ஆனால் இது வரையில் புத்த சங்கத்தார் அதை நம்பவில்லை. சோழ குலத்துப் புரோகிதர்கள் கட்டிய கதை என்றுதான் எண்ணியிருந்தார்கள். இன்று—தங்களுடைய அரும் பெரும் செயல்களைப் பார்த்த பிறகு,—சிபிச் சக்கரவர்த்தியின் பரம்பரையில் வந்தவர்கள் சோழர்கள் என்று ஒப்புக் கொள்ள வேண்டி வருகிறது. புத்த பகவானுடைய பெருங் கருணையை மாயை காரணமாக இதுகாறும் சோழ குலம்

மறந்திருந்தது. அந்தக் கருணை இன்றைய தினம் தங்கள் மீது ஆவிர்ப்பவித்திருக்கிறது. அதற்கான தேவ சூசகமும் கிடைத்திருக்கிறது. இதோ!......" என்று கூறி அத்தியட்சக தேரோ பின்னால் திரும்பிப் பார்த்ததும், பிக்ஷுக்கள் சிலர் பீடம் ஒன்றில் சாய்ந்து படுத்திருந்த மற்றொரு பிக்ஷுவைப் பீடத்துடன் தூக்கிக் கொண்டு வந்தார்கள். அந்தப் பிக்ஷுவின் உடம்பெல்லாம் இடைவிடாமல் நடுங்கிக் கொண்டிருந்தது. கைகள் வெட வெடவென்று நடுங்கின; கால்கள் நடுங்கின; உடம்பு நடுங்கிற்று; தலை ஆடிற்று: பற்கள் கிட்டின; உதடுகள் துடித்தன; சிவந்த கண்களுக்கு மேலே புருவங்களும் அசைந்தன.

"இந்தப் பிக்ஷுவின்பேரில் முப்பத்து முக்கோடி தேவர்களும் ஆவிர்ப்பவித்திருக்கிறார்கள். தேவர்கள் கருணை கூர்ந்து சொல்வதைக் கேட்டுக் கொள்ளுங்கள்!" என்றார் மகா தேரோ.

ஆவேசங் கொண்டிருந்த புத்த பிக்ஷுவின் வாயிலிருந்து நடு நடுங்கிக் குளறிய குரலில் ஏதேதோ மொழிகள் அதிவிரைவாக வந்தன. அவர் பேசி நிறுத்தியதும் அத்தியட்சக குரு கூறினார்: "முப்பத்து முக்கோடி தேவர்





களும் தங்களை ஆசிர்வதிக்கிறார்கள். முற்காலத்தில் தேவானாம்பிரிய அசோகவர்த்தனர் பாரத பூமியை ஒரு குடையில் ஆண்டு புத்த தர்மத்தை உலகமெல்லாம் பரப்பினார். அத்தகைய மகா சாம்ராஜ்யத்துக்குத் தாங்கள் அதிபதியாவீர்கள் என்று தேவர்கள் ஆசிர்வதிக்கிறார்கள். அசோகரைப் போல் தாங்களும் புத்த தர்மத்தை உலகில் பரப்ப வேண்டும் என்று விரும்புகிறார்கள். அசோகர் பாடலிபுத்திரச் சிம்மாசனத்தில் வீற்றிருந்து செய்த தர்மப் பெரும்பணிகளைத் தாங்கள் இந்தத் தொன்மை மிக்க அநுராதபுரத்தில் ஆரம்பித்து நடத்த வேண்டுமென்று கட்டளையிடுகிறார்கள். இளவரசே! தேவர்களுடைய கட்டளைக்குத் தங்கள் மறுமொழி என்ன?"

இதைக் கேட்டதும் இளவரசர், "மகா குரு! தேவர்கள் சக்தி வாய்ந்தவர்கள். அவர்கள் சித்தப்படி நடத்திக் கொள்ளுவார்கள். ஆனால் அடியேனுக்கு இப்போது அவர்கள் இடும் பணி யாது என்று விளங்கவில்லையே?" என்றார்.

"அதை நானே தெரிவிக்கிறேன்" என்று அத்தியட்சக தேரோ கூறிச் சமிக்ஞை செய்ததும், ஆவேசம் வந்திருந்த பிக்ஷுவை அப்பால் எடுத்துச் சென்றார்கள். பின்னர் பிக்ஷுத் தலைவர் கூறினார்:— "இளவரசே! இதோ உங்கள் முன்னால் உள்ள சிங்காதனத்தைப் பாருங்கள். மணி மகுடத்தைப் பாருங்கள். செங்கோலையும் பாருங்கள். இலங்கை இராஜ வம்சத்தைச் சேர்ந்த மன்னர்கள் அனைவரும் இந்தச் சிங்காதனத்தில் அமர்ந்து, இந்த மணி மகுடத்தை அணிந்து, இந்தச் செங்கோலைக் கையில் தரித்த பிறகே, புத்த சங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட அரசர்களானார்கள். துஷ்டகமனு சக்கரவர்த்தியும் தேவானாம்பிரிய திஸ்ஸரும் மகாசேனரும் அமர்ந்து முடிசூடிய சிங்காதனம் இது! அவர்கள் சிரசில் தரித்த கிரீடம் இது; அவர்கள் கரத்தில் ஏந்திய செங்கோல் இது. இப்படிப்பட்ட புராதன சிங்காதனம்,— ஆயிரம் ஆண்டுகளாக அரசர்களைச் சிருஷ்டித்த சிங்காதனம்,—இதோ தங்களுக்காகக் காத்திருக்கிறது. இதில் அமரவும் இந்த மணி மகுடமும் செங்கோலும் தரிக்கவும் தங்களுக்குச் சம்மதமா?"

இதையெல்லாம் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்த வந்தியத்தேவன் மிக்க பரபரப்பை அடைந்தான். இளவரசரைத் தூக்கி அந்தச் சிம்மாசனத்தில் அந்தக் கணமே உட்கார வைத்து விட்டால் என்ன என்று எண்ணினான். ஆனால் இளவரசருடைய முக பாவத்தில் எவ்வித மாறுதலும் ஏற்படவில்லை.

முன் போலவே அமைதியான குரலில், "அத்தியட்சகா! அது எப்படிச் சாத்தியம்? இந்தச் சிங்காதனத்தில் ஏறி முடி சூடிய மகிந்த மன்னர் இன்னும் ஜீவிய வந்தராக இருக்கிறாரே? அவர் இருக்குமிடம் தெரியாவிட்டாலும்......" என்று கூறி நிறுத்தினார்.

"இளவரசே! இலங்கை இராஜ வம்சம் மாறவேண்டும் என்பது தேவர்களின் கட்டளை. அது நடந்தே தீரும். கங்கைபாயும் வங்க நாட்டிலிருந்து வந்த விஜயராஜன் ஸ்தாபித்த இந்த வம்சத்தில் எத்தனையோ மகா ராஜாக்கள் தோன்றினார்கள்; தர்மத்தையும் பரிபாலித்தார்கள். ஆனால் பிற்காலத்தில் இந்த வம்சம் பல கொடிய கிருத்யங்களைச் செய்து தேவ சாபத்துக்கு ஆளாகி விட்டது. இந்த வம்சத்தில் பிறந்தவர்களிலே தகப்பன் மகனைக் கொன்றான்; மகனைத் தகப்பன் கொன்றான்; அண்ணனைத் தம்பி கொன்றான்; தம்பியை அண்ணன் கொன்றான்; தாய் மகனைக் கொன்றாள்; மருமகள் மாமியாரைக் கொன்றாள். இத்தகைய மகா பாதகங்களைச் செய்த வம்சத்தவர்கள் புத்த தர்மத்தைப் பரிபாலிக்கத் தகுதி வாய்ந்தவர்கள் அல்ல என்று தேவர்கள் கட்டளையிடுகிறார்கள் கடைசியாக முடிசூடிய மகிந்தன் இலங்கைச் சிம்மாதனத்துக்கு உரிமையை இழந்து விட்டான். அவனுக்குச் சந்ததியும் இல்லை. ஆகையால் இராஜ வம்சம் எப்படியேனும் மாறியே தீர வேண்டும். அப்படி இராஜ வம்சம் மாறும்போது புதிய வம்சத்தின் முதல்வனைத் தெரிந்தெடுக்கும் உரிமை இந்தச் சங்கத்துக்கு உண்டு இந்தச் சங்கத்தாரும் தங்களைத் தெரிந்தெடுக்க விரும்புகிறார்கள். தாங்கள் சம்மதம் கொடுத்தால் இன்று இரவே முடிசூட்டு விழா நடத்தி விடலாம்......"

அந்த மண்டபத்தில் சிறிது நேரம் பூகர்ப்பத்திலும் கடலின் ஆழத்திலும் குடிகொண்டிருப்பது போன்ற நிசப்தம் குடி கொண்டிருந்தது. வந்தியத் தேவனுடைய பரபரப்பு உச்ச நிலையை அடைந்து விட்டது.

அச்சமயத்தில் பொன்னியின் செல்வர் தமது பீடத்திலிருந்து எழுந்து புத்த பிக்ஷுக்களின் சங்கத்துக்கு வணக்கம் செலுத்தினார். வந்தியத் தேவன் குதூ

கலத்தின் எல்லையை அடைந்தான். இளவரசர் சிம்மாசனத்தில் அமர்ந்ததும் மணி மகுடத்தை எடுத்துத் தானே சூட்டி விடலாம் என்று ஆத்திரப்பட்டான்.

இளவரசர் கூறினார் :—" மகான்களே! உங்களை நமஸ்கரிக்கிறேன். இந்தச் சிறுவனிடம் எல்லையில்லா அன்பும் நம்பிக்கையும் வைத்து இந்தப் புராதன சிங்காதனத்தை அளிக்க முன் வந்த உங்கள் பெருந்தன்மையைப் போற்றி வணங்குகிறேன். ஆனால் தாங்கள் இப்போது இடும் பணி என் சக்திக்கு அப்பாற்பட்டது. நான் சோழ நாட்டில் பிறந்து வளர்ந்தவன். அந்த நாட்டு நிலங்கள் தந்த உணவும் நதிகள் அளித்த நீரும் இந்த உடலை ஆக்கின. என் தந்தை சுந்தர சோழ சக்கரவர்த்தியின் கட்டளைக்கு உட்பட்டு இங்கே வந்தேன். அவருடைய விருப்பத்தை அறியாமல் எதுவும் என்னால் செய்ய இயலாது......"

பிக்ஷு குறுக்கிட்டுக் கூறினார் :— "இளவரசே! தங்கள் தந்தை சுந்தர சோழர் இன்று சுதந்திர மின்றிச் சிறையில் இருப்பதுபோல் இருப்பதை நீர் அறியீரா?......"

"ஆம்; என் தந்தை நோய் வாய்ப்பட்டுப் படுத்த படுக்கையில் இருக்கிறார். கால்களின் சுவாதீனத்தை இழந்திருக்கிறார். ஆயினும் அவருடைய பெயரால்,— அவரிடம் அதிகாரம் பெற்று,—சோழ நாட்டை ஆளுவோரின் கட்டளைக்கு நான் உட்பட்டவன். அவர்களுடைய கட்டளையின்றி நான் இந்தச் சிங்காதனத்தை ஏற்றுக் கொண்டால் தேசத் துரோகியும் ராஜத்ரோகியும் ஆவேன்..."

"அவ்வாறு தாங்கள் கருதுவதாயிருந்தால் தஞ்சாவூருக்குத் தூது கோஷ்டி ஒன்றை அனுப்பச் சித்தமாயிருக்கிறோம். தங்கள் தந்தையார் புத்த தர்மத்தில் மிகப் பற்றுக் கொண்டவர். எங்கள் வேண்டுகோளை நிராகரிக்க மாட்டார்..."

"இந்த நாட்டின் பிரஜைகள் இருக்கிறார்கள். அவர்களுடைய சம்மதமின்றி இராஜ்யத்தை விநியோகிக்க யாருக்கு உரிமை உண்டு?"

"தங்களை அரசராகப் பெறுவதைப் பெறற்கரிய பேறாக இந்நாட்டுப் பிரஜைகள் கருதுவார்கள்."

"எல்லாரும் சம்மதிக்கலாம்; மகிழ்ச்சியும் அடையலாம். இந்த உலகில் வேறு யாருடைய விருப்பத்தையும் காட்டிலும் நான் அதிகமாக மதிப்பது என் தமக்கையாரின் விருப்பத்தையே. என் அன்னை என்னைப் பெற்றாள்; பொன்னி நதி என் உயிரைக் காப்பாற்றி அளித்தாள். ஆனால் என் தமக்கை என் அறிவை வளர்த்து அகக் கண்களைத் திறந்தார். அப்படிப் பட்டவருடைய விருப்பத்தைக் காட்டிலும் என் உள்ளத்திலே உள்ள ஒரு குரலின் கட்டளையே எனக்கு மேலானது. மகா புருஷர்களே! தாங்கள் இச்சிறுவனுக்கு மனமுவந்து அளிக்கும் மகா பாக்கியத்தை ஏற்றுக் கொள்ளும்படி என் உள்ளக் குரல் எனக்குச் சொல்லவில்லை! தயவு செய்து இச்சிறுவனை மன்னித்து அருளுங்கள்!..."

மறுபடியும் அந்த மகா சபையில் சிறிது நேரம் மௌனம் குடிகொண்டிருந்தது. வந்தியத்தேவனுடைய நாடி நரம்புகள் படபடவென்று துடித்த சத்தம் அவன் காதில் மட்டும் விழுந்தது.

சற்றுப் பொறுத்து, பிக்ஷு சங்கத்தின் அத்தியட்சகர் கூறினார் :—" இளவரசே! தாங்கள் கூறிய மறுமொழி எனக்கு அதிக வியப்பை அளிக்கவில்லை. ஒருவாறு எதிர்பார்த்தேன். இதனாலேயே இந்த இலங்கைச் சிங்காதனத்தில் ஏற எவரிலும் அதிக தகுதி வாய்ந்தவர் தாங்கள் என்று ஏற்படுகிறது. தர்ம சூக்ஷமத்தை உணர்ந்த எங்களுக்கு இதைப்பற்றிச் சிறிதும் சந்தேகம் கிடையாது. ஆனால் தங்களை வற்புறுத்தவும் விரும்பவில்லை. யோசிப்பதற்கு அவகாசம் கொடுக்கிறோம். ஓராண்டுக்குப் பிறகு இதேமாதிரி ஒரு நாள் தங்களுக்குச் சொல்லி அனுப்புகிறோம். அப்போது வந்து தங்கள் முடிவான கருத்தைத் தெரிவிப்பீராக!......ஒரு விஷயம் மட்டும் நினைவிருக்கட்டும். இந்தப் புராதன அநுராத புரத்தில் பல புத்த விஹாரங்கள் மூர்க்கமான யுத்தக் கொடுமைகளினால் பாழாய்ப் போயிருக்கின்றன. ஆனால் இந்த மகா போதி விஹாரத்துக்கு மட்டும் எவ்விதச் சேதமும் இது வரை ஏற்படவில்லை. ஏனெனில் இது பூமிக்குக் கீழே குடைந்து அமைத்த விஹாரம். இங்கே வரும் வழி இவ்விடத்தில் தற்சமயம் கூடியிருக்கும் புத்த சங்கத் தலைவர்களுக்கு மட்டுமே தெரியும். எங்களில் ஒருவர் வழி காட்டாமல் இங்கே யாரும் வர முடியாது. இலங்கை மன்னர்கள் தங்கள் வாழ்க்கையில் ஒரு தடவை, புத்த சங்கத்தாரால் முடிசூடிக் கொள்வதற்கு மட்டுமே, இங்கு அழைக்கப்படுவார்கள். அத்தகைய புனிதமான இரகசியப் பாதையுள்ள விஹாரம் இது. இங்கே தாங்கள் வந்தது, போனது,

இங்கே நடந்தது எதையும் பற்றி வெளியில் யாருக்கும் சொல்லக் கூடாது. தங்களுடைய நண்பர்களும் சொல்லக்கூடாது. சொன்னால் மிகக் கடுமையான தேவ சாபத்துக்கு உள்ளாகும்படி நேரிடும்!"

"அத்தியட்சக! சாபத்துக்குத் தேவையில்லை; வெளியில் யாருக்கும் சொல்வதில்லையென்று வாக்குக் கொடுத்துவிட்டுத்தான் இங்கே என் நண்பர்களையும் அழைத்துக் கொண்டு வந்தேன். கொடுத்த வாக்கை ஒருநாளும் மீறமாட்டேன்" என்றார் பொன்னியின் செல்வர்.

* * *

அரை நாழிகை நேரத்துக்குப் பிறகு இளவரசர் அருள்மொழி வர்மரும் ஆழ்வார்க்கடியானும் வந்தியத் தேவனும் அநுராதபுரத்தின் வீதியில் நிலா வெளிச்சத்தில் நடந்து கொண்டிருந்தார்கள். விஹாரத்துக்குள் இருந்த வரையில் வாயைக் கெட்டியாக மூடி வைத்துக் கொண்டிருந்த வந்தியத் தேவன் இப்போது அடக்கி வைத்திருந்த எண்ணங்களையெல்லாம் அவிழ்த்து விட்டான்.

"சோழநாடு நீர் வளம் நில வளம் பொருந்தியதுதான். ஆனாலும் இந்த இலங்கைக்கு இணையாகாது. இப்படிப்பட்ட இரத்தினத் தீவின் சிம்மாசனம் வலிய வந்ததை உதைத்துத் தள்ளிவிட்டீர்களே? இது என்ன பேதைமை? தங்களை அழைத்து மணி மகுடத்தை வழங்க வந்த பிக்ஷுக்களின் மதியை என்னவென்று சொல்ல? அடுத்தாற்போல், நானும் தூணோடு தூணாக நின்று கொண்டிருந்தேனே! எனக்குக் கொடுத்திருக்கக் கூடாதா?" என்று இப்படியெல்லாம் பொருமிக் கொட்டிக் கொண்டிருந்தான்.

இளவரசர் அவனைச் சமாதானப் படுத்த முயன்றார். "துஷ்ட கமனுவின் மகன் ஸாலி அசோகமாலா என்னும் பெண்ணின் காதலுக்காக இந்த இலங்கை ராஜ்யத்தைத் துறந்தானென்று சொன்னேனே? அது உமது காதில் ஏறவில்லையா?" என்றார்.

"எல்லாம் ஏறிற்று. அப்படித் தாங்கள் எந்தப் பெண்ணைக் காதலிக்கிறீர்கள்? அவ்விதம் தாங்கள் சிம்மாசனம் ஏறுவதற்குக் குறுக்கே நிற்கும் பெண் யார்?" என்று வந்தியத்தேவன் கேட்டான்.

"ஒரு பெண் அல்ல; இரண்டு பெண்கள். சத்தியம், தர்மம் என்னும் இரு பெண்களை நான் காதலிக்கிறேன். அவர்களுக்காகவே இலங்கை மணி மகுடத்தை வேண்டாம் என்றேன்."

"இளவரசே! தங்களைப் பார்த்தால் இளம் பிராயத்தினராகக் காணப்படுகிறது. பேச்சோ, வயதான கிழவரைப் போல் பேசுகிறீர்கள்."

"நம்மில் யார் வயதானவர், யாருடைய பிராயம் முடியப் போகிறது என்பது யாருக்குத் தெரியும்?"

இப்படி அவர்கள் பேசியபோது வீதியின் ஓரமாக ஒரு பழைய மாளிகையின் சமீபம் போய்க் கொண்டிருந்தார்கள்.

வீதிக்கு எதிர்ப் புறத்தில் யாரோ கையைத் தட்டும் சத்தம் கேட்டது.

சத்தம் கேட்ட இடத்தில் ஓர் உருவம் நின்று கொண்டிருந்தது.

"இப்படி வாருங்கள்!" என்று கூறி, இளவரசர் அந்த உருவத்தை நோக்கி வீதியைக் கடந்து போனார்.

மற்றவர்களும் தொடர்ந்துபோனார்கள்.

அவர்கள் பாதி வீதியைக் கடந்து கொண்டிருந்தபோது பின்னால் பெரிய தடபுடல் சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தார்கள். அவர்கள் எந்த வீட்டின் ஓரமாகப் போய்க் கொண்டிருந்தார்களோ அதன் மேல் மாடத்தின் முகப்பு இடிந்து விழுந்து கொண்டிருந்தது!

அவர்கள் அங்கே வீதியைக் கடக்கத் திரும்பி யிராவிட்டால் அவர்கள் தலை மேலே விழுந்து கொன்றிருக்கும்!

ஒரு கண நேர வித்தியாசத்தில் மூன்று உயிர்கள் பிழைத்தன! அதுவும் எப்பேர்ப்பட்ட உயிர்கள்!

"நம்மில் யாருக்குப் பிராயம் முடியப் போகிறது என்று யாருக்குத் தெரியும்?" என்று பொன்னியின் செல்வர் கூறியது எவ்வளவு உண்மையான வார்த்தை?

இப்படி எண்ணி வந்தியத்தேவன் நடு வீதியில் நின்று பார்த்துக் கொண்டிருக்க, இருவரும் அப்பால் சென்றார்கள்.

வந்தியத்தேவன் அவர்களை மறுபடி அணுகியபோது அங்கே நின்ற உருவம் நிலா வெளிச்சத்தில் நன்கு தெரிந்தது.

கண் முன்னே காண்பதை நம்புவதா, இல்லையா என்ற சந்தேகம் அச்சமயம் அவனுக்கு உண்டாயிற்று.

இது என்ன பைத்தியக்காரத்தனம்? இது எப்படிச் சாத்தியமாகும்?

தஞ்சையில் பழுவேட்டரையர் அரண்மனையில் பார்த்த நந்தினி இங்கே இந்த அநுராதபுரத்து வீதிக்கு எப்படி வந்திருக்க முடியும்? நள்ளிரவில் இங்கே வந்து எதற்காக நிற்க வேண்டும்! மறுகணம் அந்த உருவம் மாயமாய் மறைந்தது. மற்ற இருவர் மட்டும் நின்றார்கள்.


50 ஆண்டுகளுக்கு
அவ்வளவு புதுமையானது
அவ்வளவு ருசியுள்ளது
மேலாக இந்தியாவில்
பிரசித்திபெற்ற
எவ்வளவு உயர்ந்த ரகம்
எவ்வளவு விதமான தினுசுகள்
பிஸ்கோத்துகள்
சிறந்த பிஸ்கோத்து
பிரிட்டானியா
FBMI
FEDERATION OF BISCUIT MANUFACTURERS OF INDIA

பாரதிவிழா அதிர்ச்சிகள்

ரா. கி.

பாரதி மண்டபத் திறப்பு விழாவுக்குப் பின்னர், இந்த வருஷத்திலேதான் எட்டயபுரம் விழாவில் மகத்தான கூட்டம். கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அன்றிரவு காந்தி மகான் கதா காலட்சேபம் செய்தபோது மண்டப மைதானத்தில் சுமார் நாற்பதினாயிரம் ஜனங்கள் கூடியிருந்தார்கள். காலட்சேபம் வழக்கத்தைக் காட்டிலும் அதிக விறு விறுப்புடன் விளங்கியது. எட்டயபுரம் மண்ணை ஸ்ரீ என். எஸ். கிருஷ்ணன் மிதித்ததும் மாஸ்கோவுக்குப் போகப் பாஸ்போர்ட் கிடைத்து விட்டதாக அவருக்குத் தந்திச் செய்தி கிடைத்தது.

"மாகாளி பராசக்தி! உருசிய நாட்டினிற்
கடைக்கண் வைத்தா ளங்கே
ஆகா! என்றெழுந்ததுபார் யுகப்புரட்சி!"

என்று பாரதியார் பாடினாரே, அந்தப் புது யுகம் பிறந்த நாட்டுக்குப் போக வேண்டும் என்ற பரபரப்புடன் கலைவாணர் காலட்சேபம் செய்தார். அவர் அடித்த வில்லின் ஓங்கார நாதமும் வழக்கத்தை விடக் கம்பீரமாய் எழுந்தது. காந்தி மகான் கதையில் 'சுதந்திரம் வந்துவிட்டது' என்ற கட்டம் வந்தபோது பாரதியார் பாடலுக்குக் கலைவாணர் வந்தார். அந்தக் காலத்திலேயே பாரதியார் "ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம்" என்று முழங்கியதைக் குறிப்பிட்டபோது, மக்களின் உற்சாகத்தைக் கேட்பானேன்?

நாதஸ்வரக் கச்சேரிக்கும் வில்லுப் பாட்டுக்கும் மத்தியில் வாய்ப்பாட்டுக் கச்சேரி செய்வது எவ்வளவு சிரமமான காரியம் என்பதைச் சொல்ல வேண்டியதில்லையல்லவா? ஸ்ரீமதி பழனி விஜயலட்சுமி இந்த அரிய சாதனையை வெற்றிகரமாக நிறைவேற்றினார். பாரதியார் கீதங்களையும் பாரதியார் புகழைப் பாடும் கீதங்களையும் கொண்டு சுமார் ஒன்றரை மணி நேரம் கச்சேரி செய்தார். இசைத் தட்டுக்களிலும் வானொலியிலும் ஸ்ரீமதி விஜயலக்ஷ்மியின் மதுரமான சங்கீதத்தை நேயர்கள் கேட்டிருப்பார்கள். ஒலி பெருக்கிக்கு மிகவும் இசைவான குரல். தாமே தம்பூர் மீட்டிக் கொண்டு சுருதியுடன் இழைந்த குரலில் சொல்லின் சுவை அறிந்து அவர் பாடினார். பாரதியாரைப் பற்றிய பாடல்களில் "குகன்" சாஹித்தியமான "ஞானத்தின் ஞாயிறொளி" என்னும் பாடல் கவர்ச்சிகரமான மெட்டில் மிக நன்றாக அமைந்திருந்தது. அதில் சில அடிகளை இங்கே மகிழ்ச்சியுடன் வெளியிடுகிறேன்:—

சொல்லுக்கு உயிரேற்றித்
தூய்மையாக்கியே—ஒளி
சொர்ணத்தின் மெருகிட்டான்
எங்கள் பாரதி

வில்லிற்கலை எழும் நல்
வேகமுடனே—பல
வீரக்கவி பொழிந்தான்
எங்கள் பாரதி

அடிமைச் சிறுமை அச்சம்
யாவும் அழியச்—சொல்
அனலைக் குழைத்தெறிந்தான்
எங்கள் பாரதி

திடங் கொண்டு போராட
வாழ்வுதனிலே—இங்கு
செம்மை வழி புகன்றான்
எங்கள் பாரதி

தமிழன் நிலை உயர்ந்து
ஓங்கிவளர—என்றும்
சலியாத் தவம் புரிந்தான்
எங்கள் பாரதி

அமிழ்தின் அமிழ்தம் அவன்
எங்கள் பாரதி—தமிழ்
அன்னை மணிப் புதல்வன்
எங்கள் பாரதி!


அன்றிரவு கலைவாணரின் கதா காலட்சேபம் முடிந்த பிறகு கூட்டத்திலிருந்து கலைந்து சென்றவர்களில் சிலர் "இந்தப் பட்டிக் காட்டிலே வந்து ஒரு மகான் பிறந்தாலும் பிறந்தார்; அதன் காரணமாக இந்த ஊருக்கு வந்த மகிமையைப் பார்!" என்று பேசிக் கொண்டு போனது என் காதில் விழுந்தது. அத்தனை ஜனங்களையும் சுற்றுப்புறத்திலிருந்த அவரவர்கள் ஊரில் கொண்டுபோய்ச் சேர்ப்பதற்கு இரவெல்லாம் பஸ்கள் ஓடிய சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது.

மறு நாள் 12உ பாரதி விழாப் பந்தல் ஒரு புதிய சோபையுடன் விளங்கியது. பாரதியாரின் தாய் மாமனும் என்பது பிராயத்து முதியவருமான ஸ்ரீ சாம்பசிவ அய்யர் 'வில்லின் கணை எழும் நல் வேகமுடனே' சில பாரதி கீதங்களைப் பாட விழா ஆரம்பமாயிற்று. சொற்பொழிவுகளைப் பொறுத்த வரையில் இந்த ஆண்டு எட்டயபுரம் விழாவைப் போல் இதற்கு முன் எந்த இலக்கிய விழாவும் சிறந்து விளங்கியதை நான் கண்டதில்லை. இதற்கு முக்கியமான காரணம் சொற்பொழிவாளர்கள் அனைவரும் பாரதியாருடைய பாடல்களில் ஊறித் திளைத்தவர்கள் என்பதுதான். அத்துடன், பேராசிரியர் சேதுப் பிள்ளை அவர்கள் காலவரையறையைக் கண்டிப்பாக அமுல் நடத்தியதும் சொற்பொழிவுகள் சிறந்து விளங்குவதற்கு உதவி செய்தது. நீண்ட முன்னுரைகளுக்கும் சம்பந்தமில்லாத விஷயங்களில் பிரவேசிப்பதற்கும் பேச்சாளர்களுக்கு அவகாசம் கிட்டவில்லை. நேரடியாக விஷயத்தில் இறங்க வேண்டியதாயிருந்தது. விஷயமோ பாரதி

யாரும் அவர் பாடலும்தான். உள்ளத்தில் பாரதியிடம் உண்மை பக்தி கொண்டவர்களாதலின் வாக்கும் ஒளிபெற்றுத் திகழ்ந்தது.

பேராசிரியர் சீனிவாச ராகவன் முதல் சொற்பொழிவை ஆரம்பித்தவுடனேயே விழாவுக்கு இலக்கிய மேன்மை ஏற்பட்டுவிட்டது. சுவாமி தனி நாயகம் அவர்கள் தாம் உலகமெல்லாம் சுற்றிப் பல பாஷைகளைப் பயின்று அறிந்த பின்னர் "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவதெங்கும் காணோம்" என்ற முடிவுக்கு வந்தது பற்றிச் சொல்லிச் சபையோரைப் புளகாங்கிதம் அடையச் செய்தார். பாரதியாரின் அருமைப் புதல்வியாகிய ஸ்ரீமதி சகுந்தலா பாரதி தந்தையார் தமக்காக "ஓடி விளையாடு பாப்பா!" என்ற பாடலைப் பாடியது பற்றிய வரலாற்றைக் கூறி மகிழ்வித்தார். இம்முறை பாரதி விழாவுக்கு ஸ்ரீமதி சகுந்தலா பாரதியுடன் அவருடைய தமக்கையார் ஸ்ரீமதி தங்கம்மாள் பாரதியும் அவருடைய புதல்வி ஸ்ரீமதி லலிதா பாரதியும் விஜயம் செய்து சிறப்பித்தார்கள். "சிறப்பித்தார்கள்" என்று சொல்வது உபசார வார்த்தையன்று. பாரதியார் குடும்பத்தினர் மேடையில் வீற்றிருந்ததே விழாவுக்குச் சிறப்புத்தான். ஆனால் ஸ்ரீமதி தங்கம்மாள் அவர்களின் புதல்வி ஸ்ரீமதி லலிதா பாரதியோ அதிர்ச்சி தரும் முறையில் சிறப்பை அளித்தார்.

கவிஞரின் வம்சத்தில் கவிஞர் தோன்றுவது சாதாரணமாக எதிர்பார்க்க முடியாத காரியம். ஆனால் பாட்டனாரின் கவிதா சக்தி தமக்கு உரிமையாகியிருக்கிறதென்பதை ஸ்ரீமதி லலிதா பாரதி அன்று நிரூபித்துக் காட்டினார்.



பாட்டி:— ஏண்டா! உடம்பு, முதுகு எல்லாம் வலி எடுக்கிறது என்று நேற்று இராத்திரி முனகிக்கொண்டிருந்தாயே, இன்றைக்கு ஆபீஸுக்குப் போகாவிட்டால் என்ன?

பேரன்:—இல்லை, பாட்டி! இந்த ஆபீஸ் நேரத்திலே, பஸ்ஸிலே ஏறிப் போனால், எந்த வலியாயிருந்தாலும் பஞ்சாய்ப் பறந்துபோகும்!

இந்த வைபவத்துக்கென்றே அவர் பாடிக் கொண்டு வந்து சபையில் அரங்கேற்றிய அழகிய பாடலில் ஒரு பகுதியைத் தயவு செய்து படித்துப் பாருங்கள்:—

"பாட்டுக் கொரு புலவன்
பாரதி என் பாட்டன்!
நாட்டுக் கொரு கவிஞன்
நல்ல திருநாளில்
பங்கு பெறக் கொண்ட
பிறப்புரிமை நான் பெற்றேன்
மாநில மெல்லாம் போற்ற
மண்டபம் தான் எழுந்த
காட்சிதனைக் கண்டோரும்
களிப்பு மிக எய்துகிறோம்
பாரதியின் நாமத்தைப்
பாரறியப் பறை சாற்றி
ஊரரிய நாடறிய
உலக மெலாம் வியப்புறவே
வானவரும் போற்ற
வானளாவ நிற்கின்ற
பாரதி மண்டபத்தைப்
பார்த்து மகிழ்கின்றேன்
....
தந்தை தவக் கனவில்
தானே உளம் களியும்
சகுந்தலா பாப்பாவின்
சாதுரியப் பேச்சென்ன?
இவற்றை யெல்லாம் இங்கே
இரும்புவீர், நீர் கண்டீர்!
எங்கள் குல முதல்வன்
ஏற்றம் பல பயிற்றும்
எக்களிப்பில் இங்கே
இறுமாந்தோம்! இன்புற்றோம்!"

எந்த ஒரு அருமையான பொருளின் உரிமையைப் பற்றியாவது சர்ச்சை எழுந்தால், "உங்கள் பாட்டன் வீட்டுச் சொத்தோ!" என்று கேட்பது உலக வழக்கு. ஆனால் ஸ்ரீமதி லலிதா பாரதியோ,

"பாட்டுக் கொரு புலவன்
பாரதி என் பாட்டன்!"

என்று பெருமிதத்துடன் சொல்லிக் கொள்ளும் பாக்கியம் பெற்றவர். பாரதியார் வானுலகிலிருந்து வந்து அன்றைய விழாவில் கலந்து கொண்டிருந்தால்,

"லலிதா என் பேத்தி!"

என்று பெருமையுடன் சொல்லிக் கொண்டிருப்பார் என்பதில் சந்தேகமில்லை.

அன்றைய விழாவில் மிகப் பொருத்தமாக அமைந்த மற்றொரு பிரசங்கம் காரைக்குடி "குமரன்" ஆசிரியர் திரு சொ. முருகப்பா அவர்கள் நிகழ்த்தியது. இடைக் காலப் புலவர்கள் எப்படி யமகம் திரிபுகளில் அகப்பட்டுக் கொண்டு திணறினார்கள் என்பதற்குச் சில அழகிய உதாரணங்களை நகைச் சுவை ததும்ப ஸ்ரீ சொ. முருகப்பா எடுத்



மனைவி :—இந்த நாயினுடைய உடம்பும் முகமும் எனக்குப் பிடித்திருக்கிறது. கால்களைக் கண்டால் தான் பிடிக்கவில்லை !

கணவன் :—சட்டுப்புட்டுனு பிடித்ததை மாத்திரம் வாங்கிக்கோ !

துக் கூறினார். பின்னர், தமது சொந்த அநுபவங்கள் சிலவற்றை விவரித்தார்.

பாரதியார் காரைக்குடிக்கு ஒரு முறை விஜயம் செய்திருந்த போது நண்பர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டு "ஒரு பாடல் பாட வேண்டும்" என்று கேட்டார்களாம். "அதற்கென்ன ஜமாய்த்து விடுவோம் !" என்றாராம் பாரதியார். பிறகு, நண்பர்களைப் பார்த்து, "ஏன் இப்படி எல்லோரும் கூனிக் குறுகி உட்கார்ந்திருக்கிறீர்கள் ? முதுகெலும்பு வளையக் கூடாது. ஜம்மென்று நிமிர்ந்து உட்காருங்கள் !" என்றாராம். நண்பர்கள் அப்படி உட்கார முயன்றும் முடியவில்லையாம். பின்னர் பாரதியார்,

"உலகத்து நாயகியே எங்கள் முத்துமாரி
அம்மா ! எங்கள் முத்துமாரி !"

என்ற பாடலை உணர்ச்சிப் பெருக்குடன் ஜீவசக்தி ததும்பப் பாடினாராம். அந்தப் பாட்டு முடியும் சமயத்தில், அங்கிருந்தவர்கள் எல்லாரும் முதுகு நன்றாக நிமிர்ந்து, விறைத்த கட்டைகளைப் போல் முறுக்குடனே உட்கார்ந்திருந்தார்களாம். ஸ்ரீ முருகப்பாவின் பிரசங்கம் முடியும்போது விழா மேடையில் பலரும் அப்படி நிமிர்ந்து உட்கார்ந்திருக்கக் கண்டோம்.

ஸ்ரீ திரிலோக சீதாராம் சொற்பொழிவுக்குக் கையாளும் தனித்த நடையைப் போல் இதற்கு முன் யாரிடமும் நான் கேட்டதில்லை. தேமதுரத் தமிழ் முழக்கம் திரிலோகமும் கேட்கும்படியான கம்பீரமான குரலில், இழுமெனும் ஓசையுடன் அவர் ஒவ்வொரு வாக்கியத்தையும் முடிக்கும் போது செவிகள் நிறைந்து விடுகின்றன. பாரதியார் பாடல்களில் உள்ள வாழ்க்கைத் தத்துவக் கருத்துக்களை அவர் நன்கு ஆராய்ந்து அவைகளை அழுத்தமாக எடுத்துக் கூறுகிறார். அவருடைய சொல்லின் அழுத்தத்தை எழுத்தில் கொண்டுவர முடியாதாகையால் நேயர்களே நேரில் கேட்டு அநுபவிக்கட்டும் என்று விட்டு விடுகிறேன்.

நேரமாக ஆக, பேச்சுக்களில் காரசாரம் ஏறிக் கொண்டிருந்தது. ஸ்ரீ ஹரிஹர சுப்பிரமணியம், கவிஞர் வானம்பாடி, ஸ்ரீ கே. பி. எஸ். நாராயணன் ஆகியவர்கள் பாரதியார் சமூதாயப் புரட்சிக் கொள்கைகளை எடுத்துக் கொண்டு சக்கைப் போடு போட்டார்கள்.

முன்னால் பேசியவர்கள் பசி பட்டினியைப் பற்றி அதிகமாகப் பேசியதனால் ஏற்பட்ட ஆவேசத்தைத் தணிப்பதற்கு ஸ்ரீ சின்ன அண்ணாமலை, கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களின் பாடலை நன்கு கையாண்டார்.

"பாப்பா பாட்டினிலே—நெஞ்சம்
பறிகொடுத்தேனடா
சாப்பாடு எதுக்கடா—இனிச்
சர்க்கரை எதுக்கடா ?"

என்ற பாடலைப் பாடிக் காட்டியதும் சபையில் ஏற்பட்ட குதூகலத்தில் உண்மையாகவே பசி பட்டினி சாப்பாடு கூப்பாடு எல்லாம் மறந்து போய்விட்டன.

கடைசியாக ஸ்ரீ சிவஞான கிராமணியார் பேசி அன்றைய விழாவைப் பூர்த்தி செய்வித்தார். இலக்கியச் சுவையும் தமிழ்ப் பண்பும் இனிது கலந்த அவருடைய தனி நடையில், "தமிழர்களிடையே தரித்திரம் இருந்தாலும் பாதகமில்லை; ஆனால் தரித்திர புத்தி மட்டும் வேண்டாம்" என்று கூறி, பாரதியார் பாடல்களில் எப்படிப் பெருமிதம் ததும்புகிறது என்பதை எடுத்துக் காட்டினார். தலைவர் அவர்களின் முடிவுரையுடன் பாரதி விழா மகோந்நதமாக முடிவுற்றது.

எட்டயபுரத்திலிருந்து திரும்பி வரும் போதும் திரும்பி வந்த பின்னர் சென்னையிலும் பல நண்பர்கள் எட்டயபுரம் நிகழ்ச்சிகளை வானொலி மூலம் கேட்டு அநுபவித்ததைக் குறித்து மகிழ்ச்சி தெரிவித்தார்கள். பூர்வாங்கக் காட்சி வர்ணனைகள் மிகத் தரமாயிருந்தபடியால், விழாவை நேரில் கண்டு கேட்டு அநுபவித்தது போன்ற உணர்ச்சி ஏற்பட்டதாகக் கூறி இன்னும் சிறிது நேரம் ஒலி பரப்பியிருக்கக் கூடாதா என்ற ஆதங்கத்தையும் தெரிவித்தார்கள். வானொலி நிலையத்தைப் பற்றிக் குறைகளை அடிக்கடி கேட்டிருக்க எனக்கு இந்தப் பாராட்டுகள் மிக்க மகிழ்ச்சியை அளித்தன. தமிழன்பர்களின் சார்பாகத் திருச்சி வானொலி நிலையத்துக்கு நன்றி கூறுகிறேன்.

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்"

என்ற பாரதியாரின் வாக்கு இன்று பாரதியார் விழாவின் மூலமாக ஓரளவு பூர்த்தியாகி வருகிறது. இந்த ஆண்டில் தென்னாப்பிரிக்காவிலும் பர்மாவிலும் அந்தமான் தீவிலும் டில்லியிலும் இலங்கையிலும் பாரதி விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டிருக்கிறது. இவ்வளவு இடங்களில் நூற்றுக்கணக்கான கொண்டாட்டங்கள் நடந்த போதிலும் பாரதியார் பிறந்த எட்டயபுரம் விழாவுக்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு. அன்று எட்டயபுரத்து நிகழ்ச்சிகளை நாடெங்குமுள்ள தமிழன்பர்கள் ஆர்வத்துடன் வானொலி மூலம் கேட்டு மகிழ்கிறார்கள். எட்டயபுரம் வாசிகள் இந்தத் தனிப் பெருமைக்கு உகந்த முறையில் விழா நிர்வாகிகளுடன் பரிபூரணமாக ஒத்துழைத்து ஆண்டு தோறும் பாரதியார் விழாவை மேலும் மேலும் சிறப்பாக நடத்தி எட்டயபுரத்தின் புகழை வளர்த்துக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

புரியாத புதிர்!

கே. ஏ. எஸ்.

விடிந்தால் தீபாவளி. எதிர்வீட்டு ராகவய்யங்கார் அங்கு மிங்கும் ஓடியவண்ணமாக இருந்தார். அவருடைய இரண்டாவது பெண்ணுக்குத் தலை தீபாவளி. மாப்பிள்ளை மூன்று நாள் முன்னமேயே வந்து விட்டான். வீடே குதூகலத்தி லிருந்தது.

அன்று ராகவய்யங்கார் என்னிடம் வந்து "உங்கள் காரைத் தீபாவளியன்று கொஞ்சம் கொடுக்க முடியுமா! ஸ்ரீரங்கம் போய் வரலா மென்று பார்க்கிறேன். மாப்பிள்ளையும் ஸ்ரீரங்கம் போனதில்லையாம்" என்றார்.

"அதற்கென்ன! டிரைவரிடம் சொல்லி வைக்கிறேன்" என்றேன் நான்.

"நாளை தீபாவளியன்று நீங்கள் நம் வீட்டிலேயே சாப்பிட வேண்டும்" என்றார்.

"அதற்கென்ன! வருகிறேன்" என்றேன்.

பெரிய காரியத்தைச் சாதித்துக் கொண்டவர் போல் ராகவய்யங்கார் சென்றார்.

தீபாவளியன்று காலை எட்டு மணி இருக்கும். நான் அரை மனதுடன் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தேன்.

"ஸார்!..." என்ற குரலும் அதைத் தொடர்ந்து "அவர் தூங்கறாருங்க!" என்ற வேலையாளின் பதிலும் என் காதில் ஸ்பஷ்டமாக விழுந்தன.

"என்னப்பா இது! நாளுங் கிழமையுமாக எட்டு மணிக்கு மேலா ஒருவன் தூங்குவான்!"

"நான் பொய்யா சொல்லுகிறேன்" என்று கூறிய வேலைக்காரன் தன் குரலைத் தாழ்த்திக் கொண்டதாக நினைத்துக் கொண்டு "அதெல்லாம் நமக்குத்தான் தீபாவளிங்க. அவருக்குக் குழந்தை ஏது, குட்டி ஏது! கல்யாணம் கூட ஆகலிங்களே! அவர் ஒரு மாதிரி மனிதருங்க" என்றான்.

இதற்குள் டிரைவர் முனுசாமி அங்கு வரவே, அவர்கள் சம்பாஷணை தடைப்பட்டது. "காரைக் கொண்டு வரட்டுமா!" என்று கேட்டான் அவன்.

"ஐயாவிடம் சொல்லி விட்டு வரவேண்டாமா!" என்று கேட்டார் ராகவய்யங்கார்.

"வேண்டாம். 'என்னை எழுப்பாதே. காலையில் அவங்களுக்குக் காரைக் கொண்டு போ' என்று அவர் ராத்திரியே சொல்லி விட்டார்."

"நல்ல மனிதனய்யா! ஒரு நாள் கிழமை கிடையாது, கல்யாணம் கார்த்திகை கிடையாது. என்ன வாழ்க்கை வேண்டிக் கிடக்கிறது!" என்று ராகவய்யங்கார் முணுமுணுத்தது என் காதில் நன்றாக விழுந்தது. மறுபடியும் ஒரு முறை புரண்டு படுத்துக் கொண்டு கண்களை இறுக மூடிக் கொண்டவாறே சிந்தனையிலாழ்ந்தேன்.

இந்த உலகத்து ஜனங்களுக்கு, என் தாய் தந்தையர்கள் உள்பட எல்லோருக்கும் நான் ஒரு புதிராகவே தென்படுகிறேன். ஏன் தெரியுமா!

ஒரு காலத்தில் கல்யாணம் என்ற பேச்சு என் காதில் விழுந்ததுமே என் மனம் கந்தர்வ லோகத்தில் சஞ்சரிக்க ஆரம்பித்தது உண்டு. இரு பெண்கள் என்னை மணக்கத் தயாராக இருந்தார்கள். என் மாமா பெண்ணும் அத்தை பெண்ணும்தான். இருவரில் யாரைக் கல்யாணம் செய்து கொள்ளுவது என்று நான் யோசிக்க வில்லை.

என் அத்திம்பேர் பெரிய வியாபாரி. சென்னை ராயப்பேட்டையில் இருந்தார். அவருக்குப் பெரிய பங்களா கார், எல்லாம் இருந்தன. நிர்மலா அவரது ஒரே புதல்வி. பணம் இருந்தால் மனிதனுக்கு அழகு தானே வந்து விடுகிறது!

நிர்மலாவை நல்ல அழகியாகக் கருதினேன் நான். அவளும் என்னிடம் மிகவும் பிரியமாகத்தான் இருந்தாள்.

சென்னையில் நான் படித்துக் கொண்டிருந்த பொழுது தினமும் மாலை நானும் நிர்மலாவும் பீச்சுக்குப் போவோம். கடலின் கரையைக் கண்டாலும் காணலாம். நிர்மலாவின் அன்புக்கு எல்லையைக் காணமுடியாதென்றே எண்ணினேன்.

மூன்று வருஷங்கள் சேர்ந்தாற் போல் சென்னையிலேயே தங்கி விட்டேன். ஊர்ப்பக்கம் போக வேண்டுமென்ற அவசியமே ஏற்படவில்லை.

என் மாமா பிள்ளைக்கு உபநயனம் நடந்த பொழுது ஊருக்குப் போயிருந்தேன். என் மாமாவுக்கும் எங்கள் ஊர்தான்.

என் மாமா பெண் ஜானகியும் நிர்மலாவின் வயதுடையவள்தான். நிர்மலா ஒரே பெண்ணாக வளர்ந்தவள். ஜானகிக்குச் சகோதரர்களும் சகோதரிகளும் உண்டு. ஜானகி கிராமத்துப் பெண்.

உபநயனம் கழிந்து இரண்டு தினங்களுக்குப் பின் மாமா என்னிடம், "ஜானகியின் கல்யாணத்தை இந்த வருஷம் நடத்தி விடலாமென்று எனக்கு எண்ணம், அம்பி! ஜாதகங்களும் நன்றாகப் பொருந்தியிருக்கின்றன" என்றார்.

"நடத்த வேண்டியதுதான், மாமா!" என்றேன்.

மாமாவின் முகம் மலர்ந்தது. "அம்பி! ஜானகி பாக்கியசாலி. நீ எங்கே முடியாது என்று சொல்லி விடுவாயோ என்று நினைத்தேன்" என்றார்.

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. மாமா என்னைத் தன் மனத்தில் வைத்துக்கொண்டு பேசுகிறார் என்பது அப்பொழுதுதான் தெரிந்தது.

"மாமா! என்னை மறந்து விடுங்கள். நான் ஏற்கனவே நிர்மலாவை மணந்து கொள்வதாகத் தீர்மானித்து விட்டேன்" என்று உறுதியான குரலில் கூறிவிட்டு வெளியே போய்விட்டேன்.

சாயங்காலம் குளத்தங்கரையில் உட்கார்ந்து கொண்டு காற்று வாங்கிக் கொண்டிருந்தேன்.

"அத்தான்!" என்ற குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன். ஜானகி நின்று கொண்டிருந்தாள். அவள் ஆடை பாதி நனைந்திருந்தது. கேசம் காற்றில் பறந்து கொண்டிருந்தது. அவள் கண்களில் லேசாக நீர் படர்ந்திருந்தது.

என்னையறியாமல் எனக்கு ஒருவிதக் கோபம் வந்தது "என்ன வேண்டும், உனக்கு!" என்றேன்.

"ஒன்றுமில்லை. நீங்கள் நிர்மலாவை...... கல்யாணம் செய்து கொள்ளப் போகிறீர்களா!"

ஏனோ எனக்குக் கோபம் பற்றிக் கொண்டு வந்தது. "உனக்கென்ன அதைப்பற்றி அக்கறை, தரித்திரமே!" என்று கூறி விட்டேன். ஞானம் வேகமாகப் போய்விட்டாள்.

இரண்டு தினங்களுக்குப் பிறகு நான் சென்னைக்குக் கிளம்பி விட்டேன்.

மூன்று மாதங்களுக்குப் பிறகு ஏனோ தெரியவில்லை! அடிக்கடி எனக்கு ஜுரம் வர ஆரம்பித்தது. 'மலேரியா' என்றார்கள் டாக்டர்கள். ஆகவே, ஒரு மாதிரியாகப் பரீட்சையை முடித்துக் கொண்டு கிராமத்திற்கு வந்துவிட்டேன். உடம்பு சற்றுக் குணமாயிற்று. ஆனால் முன்போல் என்னால் ஓடி ஆட முடியவில்லை.

ஒருநாள் காலை என் தந்தை ஒரு கடிதத்தைக் கையில் பிரித்துக்கொண்டு என்னிடம் வந்து, "நிர்மலாவும் உன் அத்தையும் நாளைக்கு வருகிறார்கள்" என்றார்.

எனக்கு ஒரே குதூகலம். மறுநாள் நிர்மலா வந்தாள். சில மாதங்களில் அவள் உருவமே மாறிப் போயிருந்தது. முன்பு இருந்ததைவிட இப்பொழுது இன்னும் அதிகக் கவர்ச்சிகரமாகத் தென்பட்டாள்.

"உன் உடம்பு எப்படியிருக்கிறது!" என்று பரிவுடன் கேட்டாள் என் அத்தை.

"தேவலை. அதிருக்கட்டும். எங்கே இவ்வளவு தூரம், அத்தை!" என்று கேட்டேன்.

"நம் நிர்மலாவின் கல்யாணத்தை நிச்சயம் செய்ய வேண்டாமா! எவ்வளவு நாள் ஒத்திப் போடுவது, அம்பி!" என்றாள் அத்தை.

என் மனம் ஆனந்தத்தால் துள்ளியது. அத்தை தொடர்ந்து பேசிக்கொண்டே போனாள். "ஜாதகங்களும் நன்றாகப் பொருந்தியிருக்கின்றன. பையனும் படித்திருக்கிறான். சுமாரான இடம். உனக்குச் சங்கரனைத் தெரியுமோ, இல்லையோ! அவனுடைய தம்பி ராமமூர்த்திக்குத்தான் நிர்மலாவைக் கொடுக்கப் போகிறோம்" என்றாள்.

ஒரு சம்மட்டியைக் கொண்டு என் தலைமேல் ஓங்கி அடிப்பதுபோல் இருந்தது.

பிறகு பதிலே பேசாமல் வெளியே போய்க் குளத்தங்கரையில் உட்கார்ந்தேன். ஒருவேளை நிர்மலாவின் இஷ்டத்திற்கு விரோதமாக இவர்கள் நடக்கிறார்களோ! என்ற எண்ணம் என் உள்ளத்திலே இடம் பெற்றது. உடனே நான் வீட்டை நோக்கிப் புறப்பட்டேன்.

நான் போனபொழுது நிர்மலா தனியாகத்தான் இருந்தாள். "நிர்மல்!" என்றேன்.

ஸ்வாரஸ்யமாகப் புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்த நிர்மலா தலை நிமிர்ந்து பார்த்தாள்.



"நான் கேள்விப்பட்டது வாஸ்தவமா!"

"நீங்கள் கேள்விப்பட்டது எது என்று தெரிந்தால் அல்லவா உண்மையா பொய்யா என்று சொல்வதற்கு!" என்றாள் அவள்.

"நீ ராமமூர்த்தியை மணந்து கொள்ளப் போகிறாய் என்று கேள்விப்பட்டேனே, அதைத்தான் கேட்கிறேன்."

"அதைத்தான் அம்மா சொல்லியிருப்பாளே!" என்று ஒரே வாக்கியத்தில் பதில் சொல்லி விட்டாள்.

என் தலை சுழன்றது. கீழே விழாமலிருக்க அருகிலிருந்த தூணைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டேன்.

"நிர்மலா! நீ நிஜமாகத்தான் பேசுகிறாயா அல்லது விளையாடுகிறாயா!" என்று சற்றுக் கோபமாகக் கேட்டேன்.

நிர்மலாவின் முகம், சிவந்தது. "விளையாடுவது யார்! நீயா, நானா! வயது வந்த பெண்ணிடம் ஒரு புருஷன் கேட்கும் கேள்விகளைப் பார்!" என்றாள்.

நான் வாய் அடைத்து விட்டேன்.

* * *

"அத்தான்!"

எதிரே ஞானம் நின்றுகொண்டிருந்தாள். நான் ஒன்றுமே பேசவில்லை.

"உங்கள் அம்மா உங்களைச் சாப்பிடக் கூப்பிட்டுக் கொண்டு வரச் சொன்னாள்!" என்று பரிவோடு சொன்னாள்.

"சீ தரித்திரமே! என் முன் நில்லாதே, போ!" என்று நிர்மலாவின் மேல் வந்த கோபத்தை ஞானம் மீது காட்டினேன்.

ஞானம் அங்கிருந்து நகரவில்லை. என் கோபம் உச்ச நிலையை யடைந்தது. வெறி பிடித்தவன்போல் அவள் கையைப் பிடித்து 'தரதர'வென்று இழுத்து வெளியே தள்ளி விட்டு வந்து என் கட்டிலில் சாய்ந்தேன்.

அன்றிரவே எனக்கு மீண்டும் ஜுரம் வந்து விட்டது. பத்து நாட்கள் ஜுரம் விடாமல் அடித்து விட்டுப் பின்பு என்னிடமிருந்து விடை பெற்றுக் கொண்டது. ஜானகிதான் எனக்குப் பணிவிடை செய்து வந்தாள்.

என் அத்தை நிர்மலாவின் கல்யாணத்தை நிச்சயம் செய்து விட்டுச் சென்று விட்டாள்.

என் உடம்பு கொஞ்சம் குணமானதும் நானும் செப்டம்பர் பரிக்ஷைக்குத் தயார் செய்வதற்காகச் சென்னைக்குப் புறப்பட்டேன். ஆனால் இந்தத் தடவை ஒரு ஹோட்டலில் அறை வாடகைக்கு எடுத்துக் கொண்டு தங்கினேன். நிர்மலாவின் வீட்டுக்கே போகவில்லை.

நிர்மலாவின் கல்யாணம் விமரிசையாக நடந்தது என்று மட்டும் கேள்விப்பட்டேன்.

மறுமுறை நான் ஊருக்குப் போனபொழுது ஒரு தீர்மானம் என் மனத்தில் உருவாகியது.

ஜானகியைப் பார்த்த பொழுது என்னால் என் கண்களை நம்பவே முடியவில்லை. அவ்வளவு அழகாக இருந்தாள். எனினும் மாமாவிடமோ அல்லது ஜானகியிடமோ என் தீர்மானத்தைச் சொல்ல எனக்கு மனம் இடங் கொடுக்கவில்லை.

அன்று தை வெள்ளிக்கிழமை. இருட்டும் சமயம் மாமா வீட்டிற்குப் போயிருந்தேன். மாமி கோவிலுக்குப் போயிருந்தாள். மாமா வாசலில் யாருடனோ பேசிக் கொண்டிருந்தார். குழந்தைக ளெல்லாம் தெருவில் விளையாடிக் கொண்டிருந்தன. ஜானகி மட்டும் தனியாக ஏதோ ஒரு பாட்டை முணு முணுத்துக் கொண்டிருந்தாள்.

மொட்டை மாடியில் உட்கார்ந்து புத்தகம் படித்துக் கொண்டிருந்த நான் "ஜானகி! ஒரு டம்ளர் தீர்த்தம் கொண்டு வா" என்றேன்.

ஜானகி பாடுவதை நிறுத்திவிட்டுக் கையில் தண்ணீருடன் வந்தாள். நான் டம்ளர் ஜலத்தை வாங்கிக் கீழே வைத்து விட்டு "ஜானகி! என் மேல் உனக்குக் கோபமா!" என்று கேட்டேன்.

நாணத்துடன் தரையைப் பார்த்துக் கொண்டே "எதற்கு அத்தான் உங்கள் மேல் நான் கோபித்துக் கொள்ளப் போகிறேன்!" என்றாள் ஜானகி.

"ஜானகி! நான் ஒரு மூர்க்கன். என்னை மன்னித்துவிடு. உன்னையே மணந்து கொள்ளப் போகிறேன். நான் உனக்கு இழைத்திருக்கும் தீமைக்குப் பிராயச்சித்தமாக......"

"இல்லை, அத்தான்! என்னை மறந்து விடுங்கள்......" என்றாள் ஜானகி. அவள் கண்களில் நீர் முட்டியது.

"நான் அபாக்கியவதி. இருந்தாலும் உங்கள் அன்பைப் பெற்று விட்டேன். என்னை மறந்து விடுங்கள், அத்தான்!" என்றாள் ஜானகி. அவள் குரல் கம்மியது.

"இல்லை. என்னால் முடியாது ஜானகி! உலகத்தில் யாரையாவது நான் மணப்பதெனென்றால் அது நீதான். நீ என்னை மணக்க மறுத்தால் வாழ்நாள் முழுவதும் பிரும்மச்சாரியாகவே, இருக்கப் போகிறேன். என் குல தெய்வத்தின் மேல் ஆணை.........!" என்று நான் கூறி முடிப்பதற்கு முன்னால் ஜானகி அருகில் ஓடிவந்து என் வாயைப் பொத்தினாள்.

"வேண்டாம், அத்தான்! வேண்டாம்! அப்படி ஒன்றும் சொல்லாதீர்கள். நான்தான் மணந்து கொள்ளும் நிலையில் இல்லை. அதற்காக நீங்களும் அப்படி இருப்பதா! அத்தான், நீங்கள் என் தெய்வம்! ஒரே தெய்வம்தான் எனக்கு. ஆனால் அதை மற்றொருவர் பூஜிக்கக்கூடாதா!" என்று புதிர்போலக் கேட்டாள் ஜானகி.

"ஏன், ஜானகி! உனக்கென்ன இப்பொழுது! மணந்து கொள்ளும் நிலையிலில்லை என்றால் எனக்கு விளங்கவில்லையே!" என்றேன்.

ஜானகி மௌனமாக இருந்தாள். கீழ்வானத்தில் சந்திரன் பவனி வந்து கொண்டிருந்தான்.

"ஜானகி! அதோ பார்! வானவெளியில் யார் வருகிறார்கள், தெரியுமா! அவனும் உன்னைக் கண்டு வெட்கப்படுவான். அதிருக்கட்டும். நீ ஏன் கல்யாணம் செய்துகொள்ள மாட்டாய்!"


"அத்தான்! நீங்கள் அந்தச் சந்திரனுடன் என்னை ஒப்பிட்டது சரிதான். அவனைப் பிடித்த வியாதிதான் என்னையும் பிடித்திருக்கிறது" என்றாள் ஜானகி சாவதானமாக.

பாம்பை மிதித்தவன்போல் "ஐயையோ!" என்று அலறிவிட்டேன் நான்.

ஜானகி பேசிக் கொண்டே போனாள்.

"அத்தான்! நான் இன்று காலையில் விழித்த முகம் நல்ல முகம். உங்கள் வாயாலேயே என்னை





கல்கி காரியாலய பிரதம அக்கௌண்டெண்ட் ஸ்ரீ என். வெங்கட்ராமன் அவர்களின் குமாரி சௌ. ஜெய லக்ஷ்மிக்கும் திருக்கருகாவூர் ஸ்ரீ என். சுப்பய்யரின் குமாரர் ஸ்ரீ சாம்பமூர்த்தி பி. ஏ. (ஆனர்ஸ்) அவர்களுக்கும் சென்ற 14-ந் தேதி சென்னை கீழ்ப்பாக்கம் ஜெளரோஜி தோட்டத்தில் சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. நண்பர்களும் உறவினர்களும் கல்கி காரியாலய சிப்பந்திகளும் திரளாக விஜயம் செய்து மணமக்களை ஆசீர்வதித்துத் திருமணத்தைச் சிறப்பித்தனர். தம்பதிகளுக்கு ஏராளமான வாழ்த்துச் செய்திகள் வந்து குவிந்தன. அன்று மாலை காரைக்குடி ஸ்ரீ சாம்பசிவ ஐயர் அவர்களின் நாத மயமான வீணைக் கச்சேரி நடந்தது. வாழ்க! ஜயலக்ஷ்மி — சாம்பமூர்த்தி!

நேசித்ததாகக் கேள்விப்பட்டு விட்டேன். என் ஜன்மம் சாபல்யமாகி விட்டது, அத்தான்!'' என்றாள் ஜானகி. அவள் முகம் மலர்ந்திருந்தது.

ஏதோ ஒரு வஸ்து எங்கிருந்தோ வந்து என் நெஞ்சை யடைத்துக் கொண்டது.

''ஜானகி!'' என்றேன்.

மௌனமாக என்னை நோக்கினாள் அவள். அவள் பார்வையில் தென்பட்ட குளுமை என்னை இன்ப லோகத்தில் ஆழ்த்தியது.

''ஜானகி! நீதான் என் மனைவி! இந்திரனாலும் அதை மாற்ற முடியாது. உன் வியாதி, தானே போய்விடும். கவலைப்படாதே. ஆனால் நீ என்னை ஏமாற்ற முடியாது! என்னை ஏமாற்றினால் அப்பொழுது நான் பிரும்மச்சாரியாகவே இருந்து விடுவேன். தெரியுமா!''

ஜானகி ஏதோ பேச யத்தனித்தாள். அதற்குள் ''ஜானகி!......ஜானகி!'' என்று மாமி கூப்பிடும் குரல் கேட்டது.

கோவிலிலிருந்து மாமி வந்துவிட்டாள்.

''நான் போகிறேன் அத்தான்!'' என்று கூறிய வண்ணம் ஜானகி கீழே ஓடி விட்டாள்.

அன்றிரவு முழுவதும் எனக்குத் தூக்கம் பிடிக்கவே யில்லை. எவ்வளவோ எண்ணங்கள்.

வழக்கம்போல் காலையில் சுகமாகத் தூங்கிக் கொண்டிருந்தேன்.

''அம்பி! அம்பி! எழுந்திரு!'' என்று என் தாயார் என்னை அவசரமாக எழுப்பினாள்.

கண்களைக் கசக்கிக் கொண்டே எழுந்திருந்த என்னிடம் என் அன்னை, ''அம்பி! ஜானகிக்கு உடம்பு சரியாக இல்லை. நான் போகப் போகிறேன். நீயும் வேண்டுமானால் வா!'' என்றாள்.

எனக்குத் தூக்கி வாரிப் போட்டது.

ஜானகி ஒரு கட்டிலில் படுத்திருந்தாள். சுற்றிலும் என் மாமா மாமி குழந்தைகள் அனைவரும் உட்கார்ந்திருந்தனர்.

''ஜானகி! அத்தையும் அத்தானும் வந்திருக்கிறார்கள், பாரம்மா!'' என்றார் மாமா.

மூடியிருந்த அவள் கண்கள் திறந்து கொண்டன. என்னைக் கண்டதும் எழுந்து உட்கார முயற்சி செய்தாள் அவள். நான் தடுத்து விட்டு, ''மாமா! இதுவரை ஜானகிக்கு உடம்பு சரியில்லை என்று ஏன் என்னிடம் சொல்லவில்லை!'' என்று வருத்தத்துடன் கேட்டேன்.

மாமா சோகம் கலந்த சிரிப்புடன், ''சொல்லி என்ன பிரயோஜனம், அம்பி! உன் மேல் அவள் உயிரை வைத்திருந்தாள். நீ அவளுக்குக் கணவனாக மாட்டாய் என்று தெரிந்தவுடனேயே அவள் மனம் முறிந்து, அதுவே அவளை அரித்து விட்டது. நீயாவது க்ஷேமமாக இரு'' என்றார்.

என் மனத்தை அம்மொழிகள் என்னவோ செய்தன. ''இல்லை. நான்தான் ஜானகியின் கணவன். அடுத்த முகூர்த்தத்திலேயே அவளை மணந்து கொள்வேன். அவள் உடல் நிலை சற்றுச் சரியாகட்டும்!'' என்றேன் உணர்ச்சி வேகத்தில்.

மாமாவின் முகத்தில் வியப்புக் குறி தோன்றியது. ''எலும்பு முறிந்து போனால் வைத்தியனிடம் போகலாம். மனம் உடைந்தவர்களுக்கு மருந்து ஏது! இனி என் ஜானகி பிழைப்பாளா!'' என்றார்.

''ஏதாவது அசட்டுப் பிசட்டென்று உளறாதே!'' என்று என் மாமாவைக் கடிந்து கொண்டாள் என் தாயார்.

''அத்தை!'' என்று கூறியவாறு ஜானகி சுற்று முற்றும் பார்த்தாள். என் பக்கம் திரும்பியதும் அவள் கண்கள் அகல விரிந்தன.

அவ்வளவுதான். ஜானகி இந்த உலகத்திலிருந்து நிரந்தரமாக விடை பெற்றுக் கொண்டாள்.

அதற்குப் பிறகு என் வாழ்க்கையில் விசேஷமாக எதுவும் நடக்கவில்லை. வாழ்க்கையில் இருவரை நான் நேசித்தேன். இருவரும்-இருவரில் ஒருவரும் எனக்குக் கிட்டவில்லை. கல்யாணம் என்ற பேச்சே எனக்கு வெறுப்பைத் தந்தது. கல்யாணம் செய்து கொண்டு கிருஹஸ்தாஸ்ரமத்தில் வாழ்க்கையைத் துவங்காததாலோ என்னமோ பணம் சிறுகச் சிறுகச் சேர ஆரம்பித்தது. திருச்சிக்கு மாற்றிக் கொண்டு வந்து விட்டேன்.

ஒவ்வொரு சமயம் பூரண சந்திரனைப் பார்க்கும் போதெல்லாம் மட்டும் ஜானகியின் நினைவு வரும்.

* * *

மறுபடியும் ஒரு முறை புரண்டு படுத்தேன். கடிகாரத்தில் மணி ஒன்பதடித்தது.

வாசலில் கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டது. ராகவய்யங்கார் ஸ்ரீரங்கத்திலிருந்து திரும்பி விட்டார். சோம்பல் முறித்த வண்ணம் எழுந்தேன்.

ராகவய்யங்கார் உள்ளே வந்து, ''சாப்பிடப் போகலாமா!'' என்று கேட்டார்.

''இல்லை, இன்று பண்டிகையாயிற்றே! இங்கேயே சாப்பிட்டு விடுகிறேன்!'' என்றேன்.

என்னை ஒரு மாதிரியாகப் பார்த்து விட்டு அவர் திரும்பினார். இந்த உலகத்திற்கு நான் ஒரு புதிராகத் தென்படுகிறேன். கடைசிவரை நான் என் வாழ்நாள் முழுவதும் இப்படியே இருந்து விடலாம். அதுவும் எனக்கு ஒரு புதிர்தானே!

முத்துக்கள் உதிர்ந்தன!

ஆசிரியை: ஸ்ரீமதி குந்தினிகா கபாடியா] [மொழிபெயர்ப்பு: வாஞ்சி

(சென்ற வாரத் தொடர்ச்சி)

தனக்கு ஓய்வு கிடைக்க வில்லையே என்பதற்காக அனந்த் வருந்தினன். இருந்தாலும் சம்பளம் வாங்கிக் கொண்டு வேலை செய்யும் நர்ஸை எவ்வளவு காலத்துக்கு நம்பிக் கொண்டிருக்க முடியும்! அனந்தின் தாயாருக்கோ மிகவும் வயதாகி விட்டது. கிரணின் மனே நிலையையோ அல்லது வர்ணிக்க முடியாத அவனுடைய சோகத்தையோ அந்தக் குழந்தையால் முற்றிலும் உணர்ந்து கொள்ள முடியவில்லை. எனவே, அவனுக்குக் கிரண் மீது மிகுந்த பாசம் இருந்தும் கூட, அவளால் அவனது மனே நிலையை அறிந்து அவனது அன்பைப் பெற முடியவில்லை.

வயோதிகரான அனந்தின் தகப்பனர் அந்தப் பையன் விஷயத்தில் அதிகச் சிரத்தை எடுத்துக் கொள்ளவில்லை. அவருக்குக் கிரணிடம் பிரியம் இருக்கத்தான் செய்தது. இருந்தாலும் உளறிக் கொட்டும் குழந்தையின் மழலை இன்பத்தை அனுபவிக்க வேண்டும் என்ற ஆர்வம் அவருக்கு வெகு காலமாக இருந்தது. அத்தகைய குழந்தை அவரது மீசையை இழுத்து, கன்னத் தொந்தரவு செய்தால் கூட அவர் சந்தோஷப் படுவார். ஆனல் பேச்சும் மழலையும் விளையாட்டும் சூன்யமான கிரணிடம் அவர் என்ன செய்வது!

ஊமையும், முடமுமான அந்தக் குழந்தை விஷயத்தில் எல்லோரும் அனுதாபம் கொண்டனர். ஆனல், கிரணின் விசித்திரமான போக்கு யாரும் அக்கறை எடுத்துக் கொண்டு அவனைக் கவனிப்பதற்குத் தடையாக இருந்தது.

அனந்துக்குச் சகோதரி ஒருத்தி இருந்தாள். அவளுக்கு அவளுடைய குழந்தைகளைப் பராமரிப்பதற்கும், அவளுடைய பெரிய குடும்பத்தை நிர்வகிப்பதற்குமே பொழுது சரியாக இருந்தது. எனவே அனந்துக்கு மறுபடியும் கல்யாணமாகி அவன் மனைவி வந்தவுடனேயே தன் வீட்டுக்குத் திரும்பிவிட வேண்டுமென்று அவள் துடித்துக் கொண்டிருந்தாள்.

அனந்தின் இரண்டு இளைய சகோதரர்களும் ஒரு சகோதரியும் பள்ளிக் கூடத்தில் படித்துக் கொண்டிருந்தார்கள். பட்சிகளைப் போல் ஆடிக் கொண்டும் ஓடிக்கொண்டும் பாடிக் கொண்டும் சந்தோஷமாக இருந்தார்கள்.

இத்தனை பேருக்கு நடுவில் கிரண் தன்னந்தனியனாக இருந்தான். சாப்பாட்டுக்கும் சௌக்யத்துக்கும் குறைவில்லை என்றாலும் அவன் மனம் விவரிக்க முடியாத சஞ்சலத்துக்கு உள்ளாகித் தவித்துக்கொண்டிருந்தது.

கடைசியாக அனந்த் சரயூவை விவாகம் செய்து கொள்வதென்று நிச்சயித்தான். சுசீலாவின் மரணத்தினல் ஏற்பட்ட சூன்யமான இடத்தை நிரப்புவதற்கு அவனுக்கு ஒரு துணை வேண்டியிருந்தது. அதனல் கிரணுக்கும் அதிர்ஷ்டம் ஏற்படலாம். எனினும் கிரண் சரயூவிடம் அன்பு காட்ட வேண்டுமே! அவ் விஷயத்தில் அனந்துக்குச் சந்தேகம்தான் ஏற்பட்டது.

இருந்தாலும் மேற்படி நிலைமைக்குப் பரிகாரமாக வேறு வழி என்ன இருக்கிறது! கல்யாணம் செய்து கொள்ளாமல் இருப்பது தன்னுடைய சந்தோஷ வாழ்க்கையைத் தியாகம் செய்வதாகும். தவிர அவ்விதம் இருப்பதால் குழந்தையின் வாழ்க்கையில் அதிக உற்சாகமோ சந்தோஷமோ ஏற்படும் என்றும் தோன்றவில்லை.

* * *

சுசீலா இறந்த எட்டு மாதங்களுக்குப் பிறகு அனந்தின் இருதயத்திலும் அவன் வீட்டிலும் புதிய ஜீவனும் புதிய பிரகாசமும் உண்டாயின. அவன் சரயூவை விவாகம் செய்து கொண்டான்.

அது மறுமணமாதலால் கல்யாணத்தில் அதிக ஆடம்பரமோ உல்லாசமோ காணப்படவில்லை. இருந்தாலும் அனந்தின் வீடு மங்களகரமாகவும் ஒரே சந்தடியாகவும் இருந்தது.

சில உறவினர்கள் மாத்திரமே வந்திருந்தார்கள். அனந்தின் வயோதிகத் தாயார் தடியை ஊன்றிக் கொண்டு அங்குமிங்கும் சென்று ஒவ்வொருவரும் என்னென்ன செய்ய வேண்டும் என்று கட்டளையிட்டுக் கொண்டிருந்தாள். அனந்தின் தகப்பனருடைய முகத்தில் ஆனந்தம் தாண்டவமாடியது.

வயோதிகர்களான அவ்விருவரும் இறந்த மருமகளை மிகவும் அன்பாக நடத்தி வந்தார்கள். குணவதியான சுசீலாவினிடம் அவர்களுக்கு மிகுந்த மதிப்பு உண்டு. அனந்துக்கு இரண்டாவது விவாகம் செய்யும்படி நேர்ந்தது அவர்களுக்கு உள்ளூற அதிக வேதனையைக் கொடுத்தது. இருந்தாலும் புது நாட்டுப் பெண் வருவதன் மூலம் குடும்பத்தில் மீண்டும் சந்தோஷம் ஏற்படும் என்று அவர்கள் ஆவலுடன் இருந்தனர்.

அனந்தின் தகப்பனர் அதிகமாகப் பேசமாட்டார். வீட்டு விவகாரங்களில் தலையிடாமல் ஒதுக்கமாகவே இருப்பார். அவர் கூடக் கல்யாணக் காரியங்களில் அதிகமாக ஈடுபட்டார். பேரன் பிறந்து அங்குமிங்கும் ஓடி மழலைச் சொற்களால் தன்னை மகிழ்விப்பான் என்ற ஆனந்தம் அவரது முகத்தில் தாண்டவமாடியது.

மேற்படி அசாதாரண நிலைமையையும் சந்தடியையும் கிரண் கவனித்துக் கொண்டிருந்தான். அதைக் கண்டு அவனுக்குப் பயமும் சஞ்சலமும் உண்டாயின. இந்தச் சந்தடிக்கெல்லாம் காரணம் என்ன என்பதை அவனல் அறிந்து கொள்ள முடியவில்லை. இருந்தாலும் அதெல்லாம் ஏனே அவனுக்குப் பிடிக்கவில்லை. சந்தடி அதிகம் ஆக ஆக, கல்யாணத் தேதி நெருங்க நெருங்க, கிரணுக்கு இந்த உலகத்தில்தான் தன்னந்தனியாகவும் நிர்க்கதியாகவும் இருப்பது போல் தோன்றியது.

எல்லோரும் கிரணைக் கவனித்துக் கொண்டார்கள். அவனுக்கு வேண்டியதெல்லாம் செய்தார்கள். ஆனல் அவனுடைய சரீரத்துக்குத் தேவையான வசதிகளைத் தான் அவர்கள் செய்தார்கள். எல்லோரும் அவனைச் சந்தோஷப்படுத்த

முயன்றார்கள். ஆனால் அவனுடைய ஹிருதய தாபத்தை அறிந்து கொள்ள வில்லை; அறிந்து கொள்ள யாரும் முயற்சிக்கவில்லை.

சிற்சில சமயங்களில் ஓய்விருக்கும் போது அனந்த் அந்தக் குழந்தையிடம் சென்று பக்கத்தில் உட்காருவான். அவனை உற்சாகப்படுத்த முயற்சி செய்வான். அவன் மனத்தில் உள்ளதை ஊடுருவிப் பார்க்க முற்படுவான். ஆனால் அதெல்லாம் கிரண் விஷயத்தில் வீணாக முடியும். கிரணோவெனில் வேதனை நிறைந்த முகத்துடன் எங்கேயோ பார்த்துக் கொண்டிருப்பான்.

* * *

கல்யாணத்துக்கு முதல் நாள் கிரண் சுருட்டி மடக்கிக் கொண்டு அனந்துக்கு அருகில் ஊர்ந்து சென்று, அவனை உற்றுப் பார்த்தான். அவனது பார்வையில் தோன்றிய வேதனை அனந்தின் மனத்தை உருக்கிவிட்டது.

அனந்த் விம்மி விம்மி அழுதான். கமலா இறந்தபோது கூட அனந்த் அவ்விதம் கண்ணீர் விட்டுக் கதறவில்லை. தன் குழந்தையின் மனோ வேதனையினால் மனம் நைந்து உருகிய அனந்த், மறுமணம் செய்துகொள்ளும் எண்ணத்தையே விட்டு விடலாமா என்று யோசித்தான்.

எனினும் அவ்வாறு செய்வதால் என்ன பலன்! கிரணின் வாழ்க்கையில் மீண்டும் ஒளியும் சந்தோஷமும் ஏற்படுவதற்கு ஒரே ஒரு நம்பிக்கைதான் இருக்கிறது. அது மறுமணம் செய்து கொள்வது தான். அப்படியிருக்க, அந்த யோசனையையும் விட்டு விட்டால் பிறகு மேற்படி நம்பிக்கை பாழாக வேண்டியதுதான்.

மறுநாள் மாப்பிள்ளை வீட்டைச் சேர்ந்தவர்கள் கல்யாணத்துக்காகப் புறப்பட்டனர். அப்போது அனந்தின் மனத்தில் ஒருவித விசித்திரமான உணர்ச்சி ஏற்பட்டது. ஒருபுறம் தன் புதல்வனின் நலனுக்காகவே தான் மறுமணம் செய்துகொள்ள நிச்சயித்ததாக அவனுக்குத் தோன்றியது. மற்றொரு புறம் அந்தக் குழந்தையைத் துரோகம் செய்வதாகவும் அவனுக்குத் தோன்றியது.

சென்ற இரண்டு நாட்களாக அவன் எண்ணமெல்லாம் கிரணின் எதிர்கால க்ஷேமத்தைப் பற்றியதாகவே இருந்தன. தனக்காக அல்ல, கிரணுக்காகவே தான் மறுமணம் செய்து கொள்வதாக எண்ணித் தன்னைத்தானே சமாதானப் படுத்திக் கொண்டான். எனினும் கிரண் சம்பந்தப்பட்ட வரையில் தன் மறு விவாகம் வெற்றிகரமாக, பலன் உள்ளதாக இருக்குமா என்பதுதான் அவனது ஒரே கவலையாக இருந்தது.



மாப்பிள்ளை வீட்டார் சரயூவின் ஜாகைக்கு வந்து சேர்ந்தனர். தனக்குக் கணவனாக வரப்போகும் அனந்தைப் பார்க்கவேண்டும் என்று அவள் மனம் துடியாய்த் துடித்தது. எனவே, ஒருவருக்கும் தெரியாமல் அவள் ஜன்னலின் வழியாக அனந்தைப் பார்த்தாள்.

அவ்வளவுதான்! கன்னிப் பருவத்தினளான சரயூவின் ஹிருதயத்தில் களிப்பை யூட்டும் பல கற்பனைக் காட்சிகள் எழுந்தன. தான் நடத்தப் போகும் குடும்ப வாழ்க்கை பற்றிய இன்பமயமான கனவுகள் அவள் மனத்தில் தோன்றின. காதல் மயமான, அழகு மயமான இன்ப வாழ்க்கையை எள்ளளவும் குறைவின்றிப் பரிபூரணமாக அனுபவிக்க வேண்டும் என்று அவள் ஏங்கிக் கொண்டிருந்தாள்.

எனினும் அவளது இன்பக் கனவுகள் களங்கமற்றதாக இருக்கவில்லை. நொண்டிக் குழந்தையின் ஞாபகம் அவள் கனவுகளுக்குக் களங்கமாக இருந்தது.

அந்தக் குழந்தைக்காக அவள் பரிதாபப்படாமல் இருக்கவில்லை. அவன் விஷயத்தில் அனுதாபமும் கொண்டாள். இருந்தாலும் இன்பக் கடலில் மூழ்கி மனோரம்மியமான குடும்ப வாழ்க்கையை ஆரம்பிக்கும்போதே, அவள் அந்தக் குழந்தையைப் பராமரிக்க வேண்டிய பொறுப்பை, கடமையை ஏற்க விரும்பவில்லை. மேற்படி பொறுப்பு அவளுக்கு வேதனையைக் கொடுத்தது.

அந்தக் குழந்தை முடமாக இராதிருந்தால், முதலில் சில நாட்கள் வரையில் அவனை அவனுடைய தாய் மாமன்

வீட்டுக்கு அனுப்பிவிடலாம். பிறகு அவனை அழைத்துக் கொண்டுவந்து விடலாம். அந்தப் பையனை அவள் தன் சொந்தக் குழந்தையைப் போலவே நடத்த உறுதி கொண்டாள். அவனிடம் அவள் 'வித்தியாசம் காட்டப்போவதில்லை. அவனை மிக்க அன்புடன் பராமரிக்கவும் உறுதிகொண்டாள்.

ஆனால் தாம்பத்ய வாழ்க்கையின் ஆரம்ப காலத்தை ஆனந்தமாகக் கழிக்கவேண்டி அவள் உருவாக்கிய கற்பனைச் சித்திரங்கள் வீணாவதா! சுவர்க்கலோக சுகத்தை அனுபவிக்கப் போவதாக அவள் கண்ட கனவுகள் எல்லாம் வியர்த்தமாவதா! எனவே, சிறிது காலத்துக்கு அந்தக் குழந்தையைப் பராமரிக்க வேண்டிய கடினமான பொறுப்பு இராமலிருந்தால்தான் அவள் தன் இன்பக் கனவுகளையும் கற்பனைகளையும் நிறைவேற்றிக் கொள்ள முடியும்.

திடீரென்று அவளுக்கு ஒரு யோசனை தோன்றியது. ஆரம்பத்தில் சிறிது காலத்துக்கு அந்தக் குழந்தையைப் பராமரிப்பதற்காக ஒரு நர்ஸை நியமிக்கும்படி அனந்தைக் கேட்டுக் கொள்ளலாம் அல்லவா! தவிர, அனந்தின் தாயாரும் மற்றவர்களும் வீட்டில் இருக்கும்போது ஏன் அவள் வீணாகக் கவலைப்படவேண்டும்! அனந்தைத் தவிர அவனது குடும்பத்தைச் சேர்ந்த மற்றவர்களைச் சரயூ இன்னும் பார்க்கவில்லையென்றாலும், அவர்கள் யாவரும் நல்ல மனிதர்களாக இருக்க வேண்டும் என்றே அவளுக்குத் தோன்றியது. எனவே, சரயூவின் எதிர்கால வாழ்க்கையில் நம்பிக்கை யாகிற மலர்கள் பூத்துக் குலுங்கின!

அனந்துக்கும் சரயூவுக்கும் திருமணம் விமரிசையாக நடந்தேறியது. அவள் மிகுந்த வருத்தத்துடன் தன் பெற்றோர்கள், சகோதரர்கள் சகோதரிகள் முதலியோரிடம் விடை பெற்றுக் கொண்டாள். அப்போது உலக விஷயங்களில் மிகுந்த அனுபவம் வாய்ந்த சரயூவின் தாயார் தன் பெண்ணிடம் இரகசியமாகக் காதோடு காதாக ஒரு விஷயம் சொன்னாள்.

"சாத்தியமானால் அந்தப் பையனை அவனுடைய தாய் மாமன் வீட்டுக்கு அனுப்பிவிடு. இப்போது முதற்கொண்டே அந்தப் பாரத்தை நீ சுமக்க ஆரம்பித்து விடாதே; தெரிந்ததா!" என்று சரயூவின் தாயார் கூறினாள்.

"பாவம்! என் பெண்ணே இன்னும் குழந்தைதான். அப்படியிருக்க இந்தக் குழந்தை இன்னொரு குழந்தையை எவ்வாறு பராமரிக்க முடியும்! போதாக் குறைக்கு அந்தப் பையன் நொண்டி, ஊமையுங்கூட! அதனால் சரயூவுக்கும் தொல்லை அவனுக்கும் தொல்லை. இவ்வாறு இரண்டுபேரும் கஷ்டப்படுவதைக் காட்டிலும் அவனை அவனுடைய மாமன் வீட்டுக்கு அனுப்பிவிடுவது நல்லதல்லவா!" என்றும் சரயூவின் தாயார் தனக்குத்தானே முணுமுணுத்துக் கொண்டாள்.

தன் தாயாரின் அபிப்பிராயத்தை நன்றாக அறிந்து கொண்டவள் போல சரயூவும் தலையை அசைத்தாள்.

சரயூ எல்லோரிடமும் விடைபெற்றுக் கொண்டதுடன், எல்லோருடைய ஆசீர்வாதத்தையும் பெற்று வண்டியில் ஏறினாள். அவள் மனதிலே ஏக காலத்தில் ஆனந்தமும் துக்கமும் கலந்த உணர்ச்சிகள் பொங்கி நெஞ்சை அடைத்தன. கணவனுடன் இன்ப வாழ்க்கை நடத்தப்போகிறோம் என்பதில் ஆனந்தம்; பெற்றோரையும் உற்றாரையும் விட்டுப் பிரியவேண்டியிருக்கிறதே என்பதில் துக்கம்.

புதிய தம்பதிகள் சூரியாஸ்தமனத்துக்கு வீடு போய்ச் சேர்ந்தனர். புது மணப் பெண்ணை எல்லோரும் அன்புடனும் மகிழ்ச்சியுடனும் வரவேற்றார்கள். வயோதிகர்களான அனந்தின் பெற்றோர்கள் மகனையும் மருமகளையும் ஆசீர்வதித்தனர். அனந்தின் அக்காள் ஓடோடியும் வந்து சரயூவின் முகத்தைக் கூர்ந்து கவனித்தாள். "நமது வீட்டுக்கு மகாலக்ஷ்மியே வந்திருக்கிறாள்" என்று குதூகலத்துடன் சொல்லி அவள் தன்னுடைய சம்மதத்தையும் மகிழ்ச்சியையும் தெரிவித்ததுடன், சரயூவை மிக்க அன்புடன் வரவேற்றாள்.

தான் வாழப்போகும் புதிய வீட்டில் எல்லாரும் தன்னை அன்புடன் வரவேற்றது, சரயூவுக்கு எல்லையற்ற மகிழ்ச்சியைக் கொடுத்தது.

இவ்வளவு சந்தோஷத்துக்கு இடையே சரயூவுக்குத் திடீரென்று அந்த வீட்டில் உள்ள நொண்டிப் பையனின் ஞாபகம் வந்துவிட்டது. அந்தப் பையன் நகர்ந்து கொண்டே அங்கும் இங்கும் போவான். ஊமையானதால் உருத் தெரியாமல்



ஏதாவது உளறிக் கொட்டுவான். தன் பரிதாப நிலையைக் குறித்து அழ ஆரம்பித்து விடுவான்.

இந்த எண்ணம் சரயூவின் சந்தோஷத்துக்குத் தடையாக இருந்தது. அந்தப் பையனிடம் அவளுக்கு அனுதாபம் உண்டு என்றாலும், அவன் விஷயத்தில் அவளுக்கு வெறுப்பே ஏற்பட்டது.

அந்தப் பையன் எங்கே! தன் கண்களில் படவில்லையே. அவன் எங்கே விளையாடுகிறானோ! விளையாடியதால் அவன் கைகளிலும் கால்களிலும் புழுதி படிந்திருக்கும். சிவ சிவா! அவன் திடீரென்று வந்து அவனது அழுக்குக் கைகளால் சரயூவின் கழுத்தைக் கட்டிக் கொள்ளலாம். இப்படியெல்லாம் சரயூவின் கற்பனை ஓடிக் கொண்டிருந்தது.

அந்தப் பையனைச் சரயூவின் ஹிருதயம் அறவே வெறுத்தது. இருந்தாலும் தன்னுடைய இன்ப வாழ்க்கைக்குக் குந்தகம் ஏற்படாத வகையிலேயே தாய் என்ற முறையில் தான் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்ய அவள் தவறப் போவதில்லை.

திடீரென்று அவளுக்கு ஓர் உண்மை புலனாயிற்று. 'இது என்ன! இந்தப் பையனைப் பற்றிய ஞாபகம் என் மனதை விட்டு அகலமாட்டேன் என்கிறதே. என் கணவனைக் காட்டிலும் அதிகமாக இவனைப் பற்றியே நினைத்துக் கொண்டிருக்கிறேனே!' என்று சொல்லிக் கொண்டாள்.

அனந்தை அவ்வாறு மறந்ததைக் குறித்து அவளுக்கு வெட்கமாக இருந்தது. வரவேற்பு, விருந்து எல்லாம் முடிந்த பின் இரவு வெகுநேரம் கழித்து சரயூ அனந்தின் படுக்கையறைக்குச் சென்றாள்.

அப்போது கிரணைப் பற்றிய ஞாபகம் அவளுக்குக் கொஞ்சம் கூட இல்லை. அவளது மனம் அப்போது கிரணை அடியோடு மறந்து விட்டிருந்தது.

தன்மீது சரயூவுக்குள்ள பூரண நம்பிக்கையையும் அவளது பார்வையில் ஒளிர்ந்த அன்பையும் அனந்த் கவனித்தான். சரயூ தனக்குக் கிடைத்தது கடவுளின் அருளே என்று எண்ணினான். அவள் நிச்சயமாக கிரணைக் கவனித்துக் கொள்வாள்; முடமாகி, நிர்க்கதியாக இருக்கும் கிரணிடம் அவள் அவனுடைய சொந்தத் தாயைப் போல அன்பு செலுத்துவாள் என்ற நம்பிக்கை அவனுக்கு உண்டாயிற்று.

தன் கணவனை முதன் முதலாகச் சந்தித்த சரயூ பரவசமடைந்து உலகத்தையே மறந்தாள். பரவசமடைந்த அந்த இரண்டு ஆத்மாக்களை மறைத்துக் கொண்டு இரவின் இன்பமயமான கனவுகளாகிற திரை விழுந்தது!



வீட்டுக்காரர்:—என்ன ஸார், யோசிக்கிறீர்கள்? காப்பியை ஆற்றுவதற்கு இன்னொரு டம்ளர் கொண்டுவரச் சொல்லட்டுமா?

வந்தவர்:—ஆகா, கொண்டுவரச் சொல்லுங்கள். அப்படியே இந்தக் காப்பியைக் கொஞ்சம் கூட வைத்துக் கொண்டு வரச் சொல்லுங்கள்!

* * *

மறுநாள் சரயூ விடியற்காலம் வெகு சீக்கிரமாக எழுந்தாள். மாடியிலிருந்து கீழே இறங்கி வந்தாள். அப்போது அவளுடைய மாமியாரைத் தவிர வேறு யாரும் எழுந்திருக்கவில்லை. அனந்தின் தாயார்தான் கதவுகளையும் ஜன்னல்களையும் திறந்து வைத்திருந்தாள். ஓர் அறையில் உட்கார்ந்து கண்களை மூடிக் கொண்டு ஜப மாலையை உருட்டிய வண்ணம் இருந்தாள். அவளது களை பொருந்திய முகமும் கம்பீரமான தோற்றமும் உண்மையில் சரயூவின் மனத்தைக் கவர்ந்தன.

பிறகு சரயூ வீட்டைச் சுற்றி நாலாபுறமும் தன் பார்வையைச் செலுத்தினாள். அப்போது தாழ்வரையின் ஓரத்தில் வசீகரமான தோற்றமுள்ள ஒரு சிறு பையன் உட்கார்ந்துகொண்டிருப்பதைப் பார்த்தாள். அவன் தன்னை மறந்து, ஆகாயத்தில் தோன்றிய ஜ்வாலை போன்ற சிவப்பு வெளிச்சத்தை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவன் யாரோ தன் உறவினரின் குழந்தையாக இருக்க வேண்டும் என்று எண்ணிச் சரயூ அவன் அருகில் சென்றாள். நெற்றியில் சுருட்டையான அழகிய கேசங்கள் தொங்க, அவனது முகம் தாமரை புஷ்பம் போல் வசீகரமாகவும் களிமையாகவும் மிருதுவாகவும் இருந்தது. குறுகுறுவென்றிருந்த அவனது கண்களில் இனம் தெரியாத வேதனை குடி கொண்டிருப்பதும் தெரிந்தது. அவனது கன்னங்களில் வழிந்திருந்த இரண்டு கண்ணீர்த் துளிகள், தாமரை இலைகளில் தேங்கிய பனித் துளிகளைப் போல் விளக்கு வெளிச்சத்தில் பளபள வென்று பிரகாசித்தன.

கடல் பச்சை நிறமுள்ள ஒரே ஒரு சட்டைதான் அவன் போட்டுக் கொண்டிருந்தான். கால்களை நீட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தான். ஏதோ ஒரு தேவதையின் குழந்தைதான் வழிதவறி பூமிக்கு வந்து விட்டதோ என்று சரயூவுக்கு அந்தச் சமயத்தில் தோன்றியது. வேதனை நிறைந்த அவனது பார்வை, தான் பிரிந்து வந்துள்ள தாயாரை ஆகாயத்தில் தேடுவது போல் இருந்தது. அவனது அழகிய கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

சோககரமான அந்தக் காட்சியைக் கண்ட சரயூவின் ஹிருதயத்தில் அவள் அறியாமலேயே தாய்க்கு இயல்பான வாத்ஸல்யமும் பாசமும் பொங்கி எழுந்தன. அவள் அந்தக் குழந்தையின் பக்கத்தில் உட்கார்ந்தாள். மகிழ்ச்சி ததும்ப அவன் முகத்தைத் தன் பக்கம் திருப்பினாள். அன்பு கனிந்த குரலில், "உன் பெயர் என்ன கண்ணு!" என்று கேட்டாள்.

ஆகாயத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்த கிரணின் பார்வை பூமிக்கு வந்தது. அவன் சரயூவை மௌனமாகப் பார்த்தான்.

சரயூ இனிய புன்முறுவலோடு "உனக்குப் பெயர் கிடையாதா?" என்றாள்.

ஆனால் கிரண் பதில் சொல்லவேயில்லை. அவன் மௌனமாக சரயூவையே பார்த்துக் கொண்டிருந்தான். அவன் ஒரு வேளை தன்னுடைய நாத்தியின் குழந்தையோ என்று நினைத்தாள். ஆகா! இந்தக் குழந்தைக்குத் தாயாராக இருப்பது அவளுக்கு நிச்சயம் பெருமைதான்!

பிறகு சரயூ புன் முறுவல் ததும்ப பெருகிய வாத்ஸல்யத்துடன் அவனது முகத்தைத் தன் மார்பில் இறுக அணைத்துக் கொண்டு, "நீ என்னுடன்

"பேசப் போகிறாயா, மாட்டாயா!" என்று விளையாட்டுக் கோபத்துடன் கேட்டான்.

ரவின் முகத்திலும் புன்முறுவல் பூத்தது. அவன் தாயார் கமலா இறந்த பின் அவன் முகத்தில் புன் முறுவல் தோன்றியது இதுதான் முதல் தடவையாகும். சரயூவைப் பார்த்ததும் தன் தாயார் மீண்டும் உயிர் பெற்று வந்திருப்பது போல் அவனுக்குத் தோன்றியது. தன்னுடைய இளம் முறுவலுக்குப் பதிலாகத் தன்னை ஆயிரம் மடங்கு அதிக சந்தோஷப் படுத்துவதற்காகத் தன் தாயார்தான் அப்படி மாறு வேஷத்துடன் வந்திருக்கிறாளோ என்று அவன் நினைத்தான். பல மாதங்களுக்குப் பின் முதல் தடவையாக அவன் வாயிலிருந்து இனிய குரலில் 'ம்மா' என்ற 'வார்த்தை' வெளிவந்தது!

அந்தப் பையனுக்குப் பேசத் தெரியாது என்பதையும் நீட்டப்பட்டிருந்த அவனது கால்கள் உயிரற்றுக் கிடப்பதையும் அப்போதுதான் சரயூ தெரிந்து கொண்டாள். அப்போது அவளுக்கு ஏற்பட்ட ஆச்சரியத்தையும், அதிர்ச்சியையும், வேதனையையும் சொல்லி முடியாது. எந்தப் பையன் மீது அவள் சொல்லொணா வெறுப்புக் கொண்டிருந்தாளோ, எந்தப் பையனைப் பற்றிப் பல்வேறு விசித்திரமான, அதிருப்திகரமான கற்பனைகள் அவள் மனத்தில் எழுந்தனவோ, அந்தப் பையன் இவ்வளவு வசீகரமாகவும் களங்கமற்றும் சாந்தமாகவும் இருப்பான் என்று அவள் கனவிலும் கருதவில்லை.

அவ்வளவுதான்! உணர்ச்சிப் பெருக்கினால் சரயூ அவனை வாரியணைத்து இறுகத் தழுவிக் கொண்டாள். வாத்ஸல்யப் பெருக்கினால் அவனை முத்தமிட்டாள்.

முத்துக்கள் போன்ற கண்ணீர்த் துளிகள் சரயூவின் கண்களிலிருந்து உதிர்ந்தன. ரவி ஆனந்தத்தினால் கண்களை மூடிக் கொண்டான். அச்சமயம் இந்த உலகமே இன்ப மயமாக அவனுக்குத் தோன்றியது.

அதே சமயத்தில் அனந்த் அவ்விடத்துக்கு வந்து சேர்ந்தான். அந்தக் காட்சியை, — தாயும் குழந்தையும் பரவசமடைந்து தழுவிக் கொண்டிருந்த காட்சியை அவன் பார்த்தான். எவ்வளவு மெதுவாக வந்தானோ அது போலவே சந்தடி செய்யாமல் மெதுவாகத் திரும்பிச் சென்றான். அவனது கண்களில் மகிழ்ச்சியும் குதூகலமும் தாண்டவமாடின! பெருகி வழிந்த ஆனந்தக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டான்.

படித்துப் பாருங்கள்!

நமது கொடி

சுதந்திர மக்களுக்கு நாட்டின் கொடி ஒரு லட்சியக் குறி. அது சுதந்திரச் சின்னம் மட்டும் அல்ல; தேச மக்களின் கௌரவம், லட்சியங்கள், ஆகியவற்றை உணர்த்தும் அடையாளம்; நாட்டின் பெருமையை ஓங்கச் செய்யும் சாதனம்.

இப்படிப்பட்ட நம் நாட்டுக் கொடி நமது அரசியல் சரித்திரத்தை யொட்டிப் படிப்படியாக வளர்ச்சி யடைந்து இப்பொழுது இருக்கும் உருவத்தை அடைந்திருக்கிறது. நமது பாரத தேசத்தில் 1906-ம் ஆண்டு முதன் முதலில் கல்கத்தாவில் நமது கொடி ஏற்றப்பட்டது. 1917-ம் ஆண்டு அன்னிபெஸண்டு அம்மையார் சில மாறுதல்களுடன் ஒரு கொடியை ஏற்றினர். கடைசியில் 1921-ம் ஆண்டு காந்தி மகான் இந்திய மக்களின் தலைவரானர். அந்த மகான் சிருஷ்டித்ததே நம் நாட்டின் மூவர்ணக் கொடியாகும்.

மிகவும் அழகான முறையில் வர்ண சித்திரங்களுடன் வெளி வந்திருக்கும் இந் நூலில், நமது தேசியக் கொடியின் பூர்வீகமான ஆறுவித வடிவங்களும் சித்திரங்களுடன் விளக்கப்பட்டிருக்கின்றன.

தேசியக் கொடியை உபயோகிக்க வேண்டிய முறை, அதற்குச் செலுத்த வேண்டிய மரியாதை, முதலிய விதிகள் யாவும் விரிவாக இந் நூலில் தரப்பட்டிருக்கின்றன.

தேசியக் கொடிக்கு அவமரியாதை ஏற்பட அநுமதிக்கக் கூடாது. ஆரஞ்சு வர்ணம் கீழே யிருக்குமாறு கொடியைப் பறக்கவிடக் கூடாது. யார் வேண்டுமானாலும் மோட்டாரில் தேசியக் கொடியைப் பறக்க விடக் கூடாது; அநுமதிக்கப் பட்ட பிரமுகர்கள்தான் பறக்க விடலாம். விளம்பரத்துக்காகக் கொடியை உபயோகிக்கக்கூடாது.

தேசியக் கொடியைப் பற்றிய விதிகள் இவ்வளவு இருக்கின்றனவா என்று இந்நூலைப் படித்ததும் அதிசயிக்கத் தோன்றுகிறது. இந்நூலின் இறுதியில் தேசியகீதமும் அதைச் சரியாக 'நடத்த' வேண்டிய முறையும் கூறப் பட்டிருக்கிறது. இப்புத்தகம் கல்வி ஸ்தாபனங்களுக்கு இன்றியமையாதது. மற்றும் பொதுக் காரியாலயங்களிலும் இந்நூல் அவசியம் இருக்க வேண்டும்.

பிரசுரம்:—சென்னை சர்க்கார் செய்தி இலாகா; விலை: அணா 8.

என் பிரயாண நினைவுகள்

நாற்பதாயிரம் மைல்கள் உலகப் பிரயாணம் செய்த ஒருவர் தமது பிரயாண நினைவுகளைச் சொன்னால் சுவாரஸ்யமாயிருப்பதற்குக் கேட்கவா வேண்டும்!

இந்தப் புத்தகத்தைப் படித்தால், சுவாரஸ்யமான கேள்விகளுக்கு அதைவிடச் சுவாரஸ்யமான பதில்களை அறிந்து கொள்ளலாம்.

"பாரிஸ் நகரத்தில் இருப்பவை என்ன!" என்று ஒருவர் கேட்டால், "உலகிலேயே பெரிய தியேட்டர், எழுபத்தைந்து நாடகக் குழுக்கள், புகழ்பெற்ற கிறிஸ்தவ ஆலயங்கள்!" என்று பளிச்சென்று பதில் அளிக்கலாம்.

"பாரிஸ் நகரத்தில் இல்லாதவை என்ன!" என்று அவர் மடக்கி இன்னொரு கேள்வி கேட்டால், அதற்கும் சுலபமாக, "தூசி, பிச்சைக்காரர்கள், மிருதுவான பனி, உறுதியான நாணயம், பலமான அரசாங்கம், சுகாதாரம்!" என்ற பதிலை டக்கென்று சொல்லலாம்.

இதே மாதிரி ஸ்விட்ஸர்லந்து தேசத்தின் செழிப்பையும், அந்நாட்டு மக்களின் நாகரிகத்தையும் நேரில் பார்ப்பதுபோல் உணரலாம்.

இன்னும் செக்கோஸ்லவகியா, மலேயா ஜெர்மனி முதலிய நாடுகளைப் பற்றியும், ஐரோப்பாவில் நடந்த பெரிய பொருட் காட்சிகளைப் பற்றியும் ஆசிரியர் நேரில் பார்த்து அறிந்து அனுபவங்களை ரஸமாகச் சொல்லுகிறார். எல்லோரும் படிக்க வேண்டிய நூல்.

ஆசிரியர்: சோம. இலக்குமணச் செட்டியார்; பிரசுரம்: பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை 1. விலை ரூ. 1-0-0.

பணமும் பானையும்



ரா. வீ.

ஜம்புலிங்கத்தின் வீட்டில் அன்று ஏக அமர்க்களப்பட்டது. அவன் உயிருக்கு உயிராய்ப் போற்றிப் பாதுகாத்து வந்த மண் பானை திருட்டுப் போய் விட்டது. இரண்டணாக் காசு பெறாத மண் பானைக்கு இவ்வளவு அமர்க்களப்படுத்துவானேன் என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா? ஆனால் ஜம்புலிங்கத்தைக் கேட்டால் அல்லவா அந்தப் பானையின் அருமையும் பெருமையும் தெரியும்! அந்தப் பானைதான் அவனுக்கு ஆஸ்தி. அதை ஐயாயிரம் தருகிறேன், பதினாயிரம் தருகிறேன் என்று கேட்டால் கூட அவன் விலைக்குக் கொடுக்க மாட்டான். ஏனெனில் அதுதான் அன்றாடம் அவனுக்குச் சோறு போட்டு வந்தது. மண் பானையாவது, சோறு போடவாவது என்று உங்களுக்கு வியப்பாயிருக்கிறதல்லவா? அந்த மண் பானையில் ஒரு அபூர்வ சக்தி இருந்தது.

தினம் பொழுது விடிந்ததும் விடியாததுமாக அதில் கையை விட்டுத் துழாவிப் பார்த்தால் இரண்டு ரூபாய் கிடைக்கும். அந்த ரூபாயைக் கொண்டு அவன் பெரிய குடும்பம் 'காமா சோமா' வென்று ஒருவிதமாக ஓடி வந்தது. அப்படிப்பட்ட மகிமை வாய்ந்த மண் பானை திருட்டுப் போய்விட்டதென்றால் யாருக்குத்தான் வருத்தமாயிராது? என்ன தேடியும் அது கிடைக்காமற் போகவே, ஜம்புலிங்கம் நியாயஸ்தலத்துக்குச் சென்று திருட்டுப் போன விஷயத்தை எழுதிவைத்தான்.

அந்த அதிசயப் பானையின் அபார சக்தியைக் கேள்விப்பட்ட நியாயாதிபதி சிறிது நேரம் யோசித்தார். அப்புறம், "ஆமாம், இந்தப் பானைத் திருட்டுப் போனது சம்பந்தமாக உனக்கு யார் மீதாவது சந்தேகம் உண்டாகிறதா?" என்று கேட்டார்.

"அடுத்த வீட்டு ஆறுமுகத்துக்கு என்னிடம் இந்த மந்திர சக்தி நிறைந்த பானை இருப்பது தெரியும். எதிர் வீட்டு ஏகாம்பரத்துக்கு வெகு நாட்களாகவே என் பானை மீது ஒரு கண் உண்டு. கோடி வீட்டுக் குப்புசாமியும் அடிக்கடி அந்தப் பானையைப் பற்றியே தான் பேசுவான். நான் யார் மீதுஎன்று சந்தேகப்படுவது?" என்று அடுக்கிக் கொண்டேபோனான் ஜம்புலிங்கம்.

"சரி, போதும். நிறுத்து, உன் பிரசங்கத்தை!" என்று சொல்லி விட்டு, நியாயாதிபதி அவன் சொன்ன அந்த ஆசாமிகளை யெல்லாம் அழைத்து வரும்படி ஆள் அனுப்பினார்.

அவர்களை யெல்லாம் சுயமாகவும் கடுமையாகவும் கேட்டுப் பார்த்தார் நியாயாதிபதி. ஆனால் இந்த அதட்டல் உருட்டலுக்கெல்லாம் திருடினவன் மசிந்து விடுவானா? தம் குற்றத்தை ஒப்புக் கொள்ளத்தான் ஒப்புக் கொள்ளுவானா? எல்லோரும் தாங்கள் திருடவில்லை என்று ஒரேயடியாகச் சாதித்து விட்டனர். நியாயாதிபதி என்ன செய்வார், பாவம்! கடைசியில் தன் சபையில் கூட்டம் கூடியிருந்த பொழுதே ஜம்புலிங்கத்தைப் பார்த்து, "என்னால் இந்தத் திருட்டைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அதற்காக இத்தனை நாளும் மண்பானையின் உதவியைக் கொண்டு சாப்பிட்டுக் கொண்டிருந்த நீ கஷ்டப்படக் கூடாதல்லவா? ஆகவே, என்னிடம் இருக்கும் பானையை உனக்குத் தருவதாக உத்தேசித்திருக்கிறேன். உன் பானை இரண்டு ரூபாய் தானே தந்தது? என் பானை ஒரு நாளைக்கு நான்கு ரூபாய் தரும். உன் பானை கிடைக்கும் வரை என் பானையைக் கொண்டு போய் வைத்துக் கொள். எப்படியாவது உன் பானையைக் கண்டு பிடித்து உன்னிடம் சேர்ப்பிக்க முயற்சிக்கிறோம்" என்றார். பிறகு உள்ளே எழுந்து சென்று சிறிது நேரத்துக்கெல்லாம் மூடிய பானை ஒன்றுடன் திரும்பி வந்தார். அதை ஜம்புலிங்கத்தின் கையில் கொடுத்து, "இந்தப் பானையை ஏழு நாட்கள் வரை நீ திறந்து பார்க்கக் கூடாது. எட்டாவது நாள்தான் திறக்க வேண்டும். அதற்குப் பிறகுதான் இது பணம் தர ஆரம்பிக்கும்" என்றார்.

அதைக் கேட்ட ஜம்புலிங்கமும் சரியென்று சம்மதித்து அதை வாங்கிக் கொண்டு போனான். ஏழு நாட்கள் வரை பானையைத் திறக்காமல் பல்லைக் கடித்துக் கொண்டு பொழுதைப் போக்கி விட்டான். நாளை முதல் நமக்கு நாலு ரூபாய் கிடைக்கும் என்ற இன்பக் கற்பனையில் மூழ்கிய அவன் தன்னை மறந்து அப்படியே கண் அயர்ந்து விட்டான். பொழுது விடிந்து கண் விழித்த அவனுக்கு மறுபடியும் ஒரு பெரிய அதிசயமும்



அதிர்ச்சியும் காத்திருந்தன. நியாயாதிபதி கொடுத்திருந்த அந்தப் பானையும் காணமற் போய் விட்டது. அவன் கலவர முற்று ஒரே ஓட்டமாக ஓடி நியாயாதிபதியிடம் அந்தத் திருட்டைப் பற்றியும் முறையிட்டான். அதைக் கேட்ட நியாயாதிபதி, "இவ்வளவு அஜாக்கிரதையாக இருக்கும் உனக்கு இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டும்" என்று அவனை மிகவும் கடிந்து கொண்டார்.

"எஜமான்! என் பானை இரண்டு ரூபாய் தான் கொடுத்தது. நீங்கள் கொடுத்த பானை நாலு ரூபாய் தரப்போகிறது. இரண்டு ரூபாய்ப் பானை போனால் என்ன? நாலு ரூபாய்ப் பானை கிடைக்கிறதே! இது நம் அதிர்ஷ்டம்தான். நாளை முதல் நம் குடும்பம் கஷ்டப்படாமல் நடக்கும் என்று கனவு கண்டுகொண்டிருந்தேன். அந்தக் கனவில் அப்படியே தூங்கிவிட்டேன். அந்தச் சமயம் கள்ளன் களவாடிக் கொண்டு போய்விட்டான்!" என்று முறையிட்டான் ஜம்புலிங்கம்.

"உன் அதிர்ஷ்டம் அப்படி! அதற்கு நான் என்ன செய்வேன்?" என்றார் நியாயாதிபதி.

அதே சமயம் போலீஸ் சிப்பாய்கள் ஜம்புலிங்கத்தின் வீட்டுக்கு அடுத்த வீட்டிலிருந்த ஆறுமுகத்தைக் கட்டிப் பிடித்துக் கொண்டு வந்து நியாயாதிபதிக்கு எதிரே நிறுத்தினர். அவன் கைகளையும் கால்களையும் உதறிக் கொண்டு 'ஹா ஹூ' என்று ஊரே அதிரும்படி கூச்சலிட்டுக் கொண்டு, உடலை வில்லாக வளைத்து நின்றான். அவனைப்பார்த்த நியாயாதிபதி, "ஏன்? என்ன விசேஷம்? எதற்காக இப்படி உடம்பை வில்லாக வளைத்துக்கொண்டு அலறுகிறாய்?" என்று கேட்டார்.

"எஜமான், மன்னிக்கணுங்க. ஏதோ தெரியாத்தனமாகச் செய்து விட்டேனுங்க. ஜம்புவின் பானையை நான்தான் திருடி எடுத்துக் கொண்டேன். அன்று அவனுடைய இரண்டு ரூபாய்ப் பானைக்குப் பதிலாக நாலு ரூபாய்ப் பானையை நீங்கள் அவனுக்குக் கொடுக்கவே, அதை நான் எடுத்துக் கொண்டு விட்டு, இதை அவன் வீட்டிலேயே வைத்து விடலாம் என்று எண்ணி நேற்று இரவுக்கிரவே அந்தப் பானையை மாற்றிவைத்தேன். அவன் பானையை அவன் வீட்டுப் பரணில் ஒளித்து வைத்திருக்கிறேன். நீங்கள் கொடுத்த பானையை இன்று திறந்து ரூபாய்க்காகக் கையை விட்டுப் பார்த்தேன். ஏழெட்டுத் தேள்கள் ஏக காலத்தில் கொட்டி விட்டன. வலி பொறுக்க முடியவில்லை. எசமான், இனி இந்த வழிக்குப் போகமாட்டேனுங்க!" என்று கெஞ்ச மாட்டாக் குறையாகக் கூறினான்.

அதைக் கேட்ட நியாயாதிபதி, "திருடனுக்குத் தேள் கொட்டினாற் போல என்று சொல்வார்கள். ஆனால் அவர்களைப் போல் நீ இல்லையே! இதுதான் நீ திருடப் புகுந்த முதல்தடவையோ?" என்று கேட்டார்.

"ஆமாமுங்க, எசமான்! ஆமாமுங்க, எசமான்!" என்றான் ஆறுமுகம்.


"உனக்குத் திருட்டுக்குத் தகுந்த தண்டனை கிடைத்து விட்டது. இனிமேலாவது இந்தத் திருட்டுப் புத்தியை விட்டுவிட்டு நியாயவழியில் நல்லபடியாகச் சம்பாதித்துப் பிழைத்துக்கொள்!" என்று சொல்லி அவனை விடுதலை செய்து அனுப்பினார் நியாயாதிபதி.

விடு கதை

யானைக்கும் பூனைக்கும்
அடங்காத தண்ணீர்
அயோத்தி ராஜாவுக்கு
முழங்கால் தண்ணீர்

விடை : [illegible]

நீங்களும் வரையலாம்!



பிருந்தாவனத்துப் பெரியவர்

சு. ராமமூர்த்தி

என்னை யறியாமலேயே என் வாய் ஒரு நாமாவளியைப் பாடிக் கொண்டிருந்தது. சுற்றிலும் ஓடும் பக்திச் சூழ்நிலையில் என்னுடல் உணர்விழந்திருந்தது; என்னுள்ளம் நினைவிழந்திருந்தது. எவ்வளவு நேரம் இந்நிலையில் நானிருந்தேனோ, எனக்குத் தெரியாது. திடீரென்று என்னை ஒரு முறை சுற்றிப் பார்த்தேன். அங்குக் குழுமியிருந்த பக்தர்களின் கண்கள் எல்லாம் பக்திப் பிரேமை வழிய என்னையே பார்த்துக் கொண்டிருந்தன. அருகில் உட்கார்ந்திருந்த என் மனைவியின் கண்களில் வெளிப்பட்ட வியப்பு, சாவித்திரியின் ஆர்வமிகுந்த பார்வை, எல்லாம் எனக்கு இவ்வுலக உணர்வை ஊட்டின.

* * *

டில்லியில் உத்தியோகம் வகிக்கும் எனக்கு ஞாயிற்றுக்கிழமையுடன் சேர்ந்து இரண்டு நாள் லீவு கிடைத்துவிட்டால் ஏதோ ஒரு பெரிய நிதி கிடைத்தது போலத்தான். இந்த வருஷம் அந்த மாதிரி நிதி கொடுத்தாற் போல் கிடைத்தது 'தேவளி' விடுமுறை. அந்த விடுமுறையைக் கழிக்க 'ஆக்ரா' போகவேண்டும் என்று வற்புறுத்தினாள் ராஜம். எனக்கும் ராஜத்திற்கும் கல்யாணமாகி இரண்டு வருஷங்களாகியிருந்தாலும் தனிக் குடித்தன வாழ்க்கைத் தொடங்கிச் சில மாதங்கள் தானாயிற்று. ஆகவே, காதற் சின்னமாகிய 'தாஜ்மஹாலை'ப் பார்க்க விழைந்ததில் வியப்பில்லை யல்லவா!

இன்பத்தில் திளைத்த என் மனம் ஆக்ராவிலிருந்து திரும்புகையில் பிருந்தாவனம் போய்வர விழைந்தது. காதற் சின்னத்தைக் கண்டபின் காதல் நினைவுகளை ஊட்டும் பிருந்தாவனத்தையும் பார்க்க இச்சை பிறந்தது.

அன்று மாலை மதுரை கேதாரிநாதர் கோவிலில் விசேஷமான கூட்டம். பக்தர்களின் உள்ளம் கரைந்து ஓடும் பஜனை முழக்கம். என்னையுமறியாமல் அங்கே போய் உட்கார்ந்தேன். சாதாரணமாக பஜனை, கோவில் என்றால், போகாத நான் அன்றைக்குச் சென்றது என் மனைவி ராஜத்துக்குப் புதுமையாக இருந்தது. 'காதல் கனிந்தால் பக்தி' என்பதை அவள் எப்படி அறிவாள். இரண்டு நாட்களாகக் காதல் நினைவுகளில் திளைத்த நான் பக்திப் பரவசத்தில் ஈடுபட்டது இயற்கை என்பதை அவள் அறியவில்லை!

அப்பொழுதுதான் ஆரம்பத்தில் குறிப்பிட்ட சம்பவம் நிகழ்ந்தது. சட்டென்று உணர்வு வந்து சூழ்நிலையை அறிந்த பின்பு எனக்குச் சற்று வெட்கமாகக் கூட இருந்தது.

கூட்டம் கலைந்தது. நான் புறப்படத் தயாரானதும், பஜனை செய்து கொண்டிருந்த ஒரு பெரியவர் என்னை இருக்கும்படி சமிக்ஞை செய்தார். பிறகு நாங்கள் மூவரும் அவரைப் பின்தொடர்ந்து சென்றோம். தவழ்ந்து சென்று கொண்டிருந்த யமுனையின் கரையை அடைந்ததும், அதிகமாக ஒருவருமில்லாத துறையொன்றில் அவர் உட்கார்ந்தார். எதிரே பயபக்தியுடன் நாங்கள் உட்கார்ந்தோம். ஸ்நானம் செய்துவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்த ஒரு சிலர், அவரை வணங்கி, எங்களை வெறிக்கப் பார்த்துக் கொண்டே சென்றனர். அங்கு நிலவிய மௌனத்தைக் கலைத்து, "நீங்கள் எந்த ஊர்!" என்றார் அப்பெரியவர். ஊர்பேர் தெரியாத இடத்தில் பலரும் வணங்கும் பெருமை கொண்ட சிரேஷ்டமான பெரியவர் ஒருவர் எங்களிடம் தனிமையாக உரையாட முற்பட்டதில் ஏற்கனவே எனக்கு அளவில்லாத வியப்பு. அவர் தமிழில் பேசியதும் என் உவகை கரைபுரண்டோடியது.

என்னைப் பற்றிய விவரங்களையெல்லாம் சொல்லிவிட்டு, என் மனைவியையும் அறிமுகப் படுத்தினேன். சட்டென்று "அந்தப் பெண் யார்!" என்று கேட்டார் எங்களுடன் இருந்த சாவித்திரியைக் குறிப்பிட்டு.

"அவள், என் மாமா மகள். தகப்பனார் இறந்துவிட்டார். தாய் கிராமத்திலிருக்கிறாள். இவள் மட்டும் என்னுடன் இருந்து வருகிறாள். சாவித்திரி என்று பெயர்......" என்றேன்.

"அவள் தன் அம்மாவை விட்டு வேண்டுமானாலும் இருந்து விடுவாள். ஆனால் என்னை மட்டும் விட்டுப் பிரிந்து இருக்கவே மாட்டாள். எனக்கும் இவள் இல்லாவிட்டால் என்னவோ வெறிச்சென்று இருக்கும்" என்று பெருமையாகச் சொன்னாள் என் மனைவி ராஜம்.

இதைக்கேட்ட பெரியவரின் முகத்தில் வேதனையின் சாயை படர்ந்தது. ஏதோ விவரிக்கமுடியாத பழைய எண்ணங்களின் நினைவைத் தொடர்ந்து ஒரு பெருமூச்சு விட்டார். நான் ராஜத்தின் முகத்தைப் பார்த்தேன். பெரியவரின் மனவேதனையை அறிந்து, பரிவோடு, அவர் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"உங்கள் மனத்தை அழுத்தும் அவ்வளவு துன்பமான சம்பவம் என்ன!" என்று கேட்டுவிட்டு அவர் முகத்தைக் கூர்ந்து கவனித்தேன்.

என் முகத்தில் பொங்கி நின்ற ஆவலை உணர்ந்து, "அது ஒரு கதை. அதைச் சொல்லிப் பயன் என்ன!" என்றார் சற்று ஏக்கத்துடன். என் ஊகம் உண்மையாகிவிடவே, மேலும் தூண்டப்பட்ட ஆவலுடன், "உங்களுக்கு அதைச் சொல்லுவதில் இஷ்டமில்லாவிட்டாலும் அதை அறிய விரும்புகிறேன். மேலும் மனத்தை அழுத்தும் ஒரு விஷயத்தைப் பிறரிடம் சொல்லுவதால் அதன் பளு குறையும்......" என்றேன். என் வினயத்தைக் கேட்டுப் புன்னகை செய்துவிட்டுத் தம் கதையைச் சொல்லத் தொடங்கினார்.

"எனக்கு அப்பொழுது வயது பதினாறு. என் தங்கை ராஜி இறந்து நாலைந்து மாதங்களாகியிருந்தன. வெகுநாள் கழித்துப் பிறந்தவள் என் தங்கை. ஆகவே அவளிடம் எனக்கு அளவில்லாத அன்பு. நிரம்ப சொத்து சுதந்திரத்துடன் வாழும் குடும்பத்தில் பரம்பரையாகப் பிள்ளைக் குழந்தைகளே பிறந்து வந்திருந்ததால் பெண் குழந்தைக்கு ஏங்கி நின்றனர் என் பெற்றோர். குடும்பத்தில் ஒரு பெண் குழந்தையாவது இருந்தால்தானே இன்பமாயிருக்கும்! எனக்கும் கொஞ்சிக் குலவுவதற்கு ஒரு தங்கையில்லையே என்றுதானிருந்தது. இந்தக் குறைகள் தீரப் பிறந்தாள் ராஜி. ஆனால்

வலது கையால் கொடுத்த இந்த நிதியைத் தெய்வம் இடது கையால் தட்டிப் பறிக்கும் என்று நாங்கள் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

"அந்த ஸ்தானத்தை நிரப்ப வந்தாள் ராதை. ராதை என் மாமாவின் பெண். மாமா இறந்து விட்டதும் குழந்தையுடன் எங்கள் வீட்டுக்கு வந்துவிட்டாள் மாமி. அப்பொழுது ராதைக்கு வயது ஐந்து. அவளது குடிகையும் மழலைப் பேச்சும் என்னைக் கொள்ளைகொண்டு விட்டன. ராஜி இறந்ததையும் மறந்து அவளிடம் அன்பு கொண்டேன். நாளடைவில் எங்களிடையே ஏற்பட்ட அன்புப் பிணைப்பு நீரும் நிழலும் போலாகி விட்டது. நானில்லாமல் அவளுக்குப் பொழுது போகாது. அவளுடன் பேசாமல் என்னால் இருக்கவே முடியாது!

"அவள் பள்ளிக்கூடத்தில் படித்து வந்தாள். நான் கல்லூரிப் படிப்பை முடித்துக்கொண்டு தொழிலில் அமர்ந்தேன். தினசரி அவளுக்குப் பாடஞ் சொல்லிக் கொடுப்பது, அவளை அழைத்துக்கொண்டு வெளியே உலாவச் செல்வது, இவையெல்லாம் என்னுடைய வறண்ட காரியாலய வாழ்க்கைக்குப் பசுமை யளித்தன.

"எனக்கு வயது வந்துவிட்டதாக எண்ணி மணம் முடிக்க ஏற்பாடு செய்தனர் என் பெற்றோர். முறைப்படி பெண் பார்த்து, என் விருப்பத்துடன் கல்யாணம் நடந்தது.

"கல்யாணி வீட்டிற்கு வந்ததுமே, எங்கள் வீட்டிற்குத் தனி சோபை யுண்டாயிற்று. வசந்த காலத்துப் பூஞ்சோலைபோல் நிறமும் மணமும் பெருகி யிருந்தது. எல்லோரையும்விடக் கல்யாணியிடம் அதிக அன்புடன் பழகியது ராதைதான்!

"எங்கள் இன்பக் கிளைக்கும் இல்வாழ்க்கை இளந் தென்றல் போல் தவழ்ந்து சென்றது. என் தாயார் எங்களிடையே யிருந்த ஒற்றுமையைக் கண்டு உள்ளம் பூரித்தாள். தனது நாட்டுப் பெண்ணுக்காகப் பெருமை கொண்டாள். ராதையிடம் நான் காட்டிய சிரத்தையில் ஊக்கமளித்தாள். கல்யாணி ஒரு தெய்வப் பிறவி. அவளைப் போன்ற பெண்ணைக் காண்பது அரிது. பெண்மைக் குணம் அவ்வளவும் ஒருங்கே அமைந்தவள். ஆனால் சூது நிறைந்த இந்தக் காலத்தில், அவளது குணம், 'அசடு' என்ற பட்டத்தை ஊராரிடமிருந்து வாங்கிக் கொடுத்தது.

"ராதையின் படிப்பில் நான் ஊக்கம் காட்டினேன். என்னுள்ளத்தில் கரைபுரண்டு ஓடும் அன்பில் கல்யாணியும் ராதையும் என் இரு கண்களைப்போல் விளங்கினார்கள். கல்யாணி அதிகம் படிக்காதவள். அந்தக் குறையுமில்லாமல் வளர்ந்து வந்தாள் ராதை.

"நானும் ராதையும் ஏதாவது பாடங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்போம். கல்யாணியும் அங்கு இருப்பாள். நான் வேடிக்கையாக, 'கல்யாணி, நீயும் சேர்ந்து படியேன்' என்பேன். 'எனக்கு ஏன் இந்தத் தொல்லை. ராதை படித்தால், நான் படித்தாற் போலத்தான். அவள் படிக்கட்டும் நன்றாக. அவள் படித்துப் புகழ் பெற்றால் அது எனக்கு இல்லையா என்ன!' என்பாள். அவள் ராதையிடம் கொண்டிருந்த பிரேமையை நினைத்து வியக்கும் என் மனம்.

"ஆனால் இந்த நிலைமை நீடிக்கவில்லை. பண்டம் தித்திப்புத்தான். சாப்பிட்ட பின்னர் வாயில் நிலைத்து நிற்கின்ற ருசி புளிப்புதானே! அதே போலத்தான் முடிந்தது என் வாழ்க்கை.

"எனக்கும் அப்பொழுது உலக அனுபவம் போதாது. நான், என் மனைவி, ராதை—இது



தான் என் உலகம். வேறொன்றும் எனக்குத் தெரியாது. எங்கள் மூவரையும் சுற்றிலுமுள்ள உலகத்தின் நினைவே எனக்கு அப்பொழுது இல்லை. நான் அலட்சியமாக இருந்தால் உலகம் சும்மா விட்டு விடுமா! ஒட்டகம் ஓடிப்போய் மண்ணுக்குள் முகத்தை மறைத்துக் கொண்டு விட்டால், அதனுடைய பூதாகாரமான உடல் அதைத் தொடர்ந்து வருபவர்களுக்குத் தெரியாமல் போய்விடுமா!

"நான் எப்பொழுதும் போல் ராதையுடன் வெளியே போய் வருவேன். அவளுக்குப் பாடஞ் சொல்லிக் கொடுப்பேன். தனிமையில் பேசுவேன்; பழகுவேன்.

"ஆனால் கல்யாணியின் போக்கில் மாறுதல் தென்பட்டது. எப்பொழுதும்போல் 'கல கல' வென்று பேசுவதில்லை. அடிக்கடி தனிமையை நாடுவாள். ஏதாகிலும் சாக்குப் போக்குச் சொல்லி எங்களுடன் சம்பாஷணையில் கலந்து கொள்ள மாட்டாள்.

"இதுமட்டுமல்ல; நாளடைவில் என் தாயாரின் போக்கில் கூட மாறுதல் தோன்றியது. ராதையுடன் பேசும்பொழுது இருக்கும் பரிவு இப்பொழுதெல்லாம் கிடையாது. என்னைப் பார்க்கும் பார்வையில் ஒருவித சந்தேகம் நிலவியது. என் தாயாரும் கல்யாணியும் அடிக்கடி தனிமையில் 'குசுகுசு' வென்று பேசிக் கொண்டிருப்பார்கள். என்னைக் கண்டதும் பேச்சு நின்றுவிடும்.

"உலக அனுபவம் இருந்திருந்தால், நான் அப்பொழுதே இந்த மாறுதலின் மூலத்தை அறிந்து அதற்கேற்றபடி நடந்து கொண்டிருப்பேன். இன்று அதை நினைத்துப் பயன் என்ன ......!"

இந்த இடத்தில் அவர் சற்று நிறுத்தினர். அவர் முகத்தில் தோன்றிய வேதனை என்னை என்னவோ செய்தது. அவரை நிமிர்ந்து பார்த்தேன். அவர் பார்வை ராஜத்தின் மீது பதிந்திருந்தது. ராஜம் சற்றே தரையைப் பார்த்தவண்ண மிருந்தாள். அவள் கண்களில் நீர் நிரம்பி யிருந்தது. அந்தப் பெரியவர் சொன்ன கதையை சாவித்திரி வெகு ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டிருந்தாள்.

மீண்டும் அவராகவே கதையைத் தொடர்ந்தார்:

"ராதைக்குவயது பதினேந்து ஆயிற்று. அவளுடைய அழகு எல்லோருக்கும் ஆச்சரியமாக இருந்தது. அவளுடைய நிறைந்த அறிவும் விசால புத்தியும் எனக்குப்பெருமையளித்தன.

"இப்பொழுதெல்லாம் ராதை முன் போல் என்னுடன் பழகுவதில்லை. பேச்சில் ஓர் அடக்கம்! நாலு வார்த்தைக்கு ஒரு பதில்! என்னால் இதைப் பொறுக்க முடியவில்லை. அவளைத் தனிமையில் வற்புறுத்தி விசாரிக்கவே, அவள் அழுது விட்டாள். என் மனைவியும் தாயாருந்தான் இதற்குக் காரணம் என்று அறிந்ததும் என் இதயத்தில் சுட்டி கொண்டு குத்துவது போலிருந்தது. அதை வெளிக்குக் காட்டவில்லை. அனாயாசமாகப் பறந்து இன்பமாக வாழும் ஒரு பறவையைப் பிடித்துக் கூண்டில் அடைத்தால், அது எவ்வளவு நாளைக்குத்தான் உயிருடனிருக்கும்! இந்த விஷயத்தை என்னுள் அடக்கி அடக்கி வைக்கவே என்னுள்ளத்தில் அக்கினி ஜ்வாலை எழுந்து குமுறத் தொடங்கியது. என் மனைவியிடம் கொண்ட காதல், அன்னையிடம் பூண்ட அன்பு, ராதையிடம் செலுத்திய வாஞ்சை எல்லாம் என் உள்ளத்தீயில் கருகி சாம்பராகி விட்டன.

"ஒரு நாள் வெளியே போக கல்யாணியை அழைத்தேன். அவள் வரவில்லை. பிறகு ராதையைக் கூப்பிட்டேன். அவள் பதில் ஒன்றும் சொல்லவில்லை. பக்கத்தில் நின்று கொண்டிருந்த என் மனைவியையும், தாயாரையும் மாறி மாறிப் பார்த்து, என்னையும் பயத்துடன் பார்த்தாள் ராதை. அவளை அவசரப் படுத்தினேன். தட்டுத் தடுமாறி 'வரவில்லை' என்றாள். நான் வற்புறுத்திச் சம்மதிக்கச் செய்தேன். என் தாயாருக்கு இது கொஞ்சம்கூடப் பிடிக்கவில்லை.

'ஏண்டா அவளை வலுக்கட்டாயம் செய்யறே' என்று சொல்லிவிட்டு, 'அழகுதானடி! அவன் தான் கூப்பிட்டால், 'சரி' என்று புறப்படத் தயாராக இருக்கிறயே குதிரை மாதிரி' என்றாள் ராதையிடம். அதற்குள் என் கோபப் பார்வையைப் பார்த்ததும் ஒன்றும் சொல்லாமல் உள்ளே போய்விட்டாள். ராதையும் நானும் புறப்பட்டோம். உள்ளே கல்யாணியிடம், 'ஏண்டி அம்மா, அழறே' என்று என் தாயார் சொல்லிக் கொண்டிருந்தது என் காதில் விழுந்தது.

"வழி நெடுக ஒரு பேச்சில்லாமல் நாங்கள் சென்றோம். நான் சொல்லும் வார்த்தைகளுக்கெல்லாம் பதில் பேசாமல் வந்தாள் ராதை. என் முகத்தைக்கூடப் பார்க்கவில்லை. அவள் குனிந்த தலை நிமிராமல் புது மணப்பெண்ணைப் போல்

நடந்து வந்தாள். என் ஆத்திரம் எல்லை மீறிற்று. அவளைப் பிடித்து ஒரு குலுக்குக் குலுக்கி நிறுத்தினேன். அவள் உதடுகள் துடித்தன. தாடை படபடத்தது. கண்களிலிருந்து நீர் கொட்டக் 'கோ'வென்று அழுது விட்டாள். அவள் அழுகையைக் கண்டதும் என் கோபமெல்லாம் மறைந்து விட்டது. அவளைத் தேற்றலானேன்!

"குழந்தை முதல் எடுத்துக் கொஞ்சி விளையாடிய எனக்கு இனி அவளிடம் நெருங்கிப் பழக சுதந்திரம் கிடையாது. உரிமை கிடையாது. வயது வந்த பெண்ணானால் என்ன! என் தங்கை தானே! இது என்ன கொடுமை! என் மனம் அப்படியே வெடித்து விடும்போலிருந்தது. என் உள்ளத்தில் மூண்ட நெருப்பு என்னை எரிக்க ஆரம்பித்து விட்டது. இவ்வுலகமே சுழன்று சுழன்று என் கண் எதிரினின்றும் மறையத் தொடங்கி விட்டது.

"ராதையுடன் வீட்டுக்குத் திரும்பினேன். போனதும், நான் எங்கே போனேன்! எதற்காகப் போனேன் என்ற கேள்விகளை ராமபாணம் போல் பிரயோகித்தாள் கல்யாணி. அவள் கேள்வியில் தோன்றிய கடினத்தில் நான் சற்றே வெலவெலத்துப் போய்விட்டேன். அன்றுவரை அவள் என்னிடம் அம்மாதிரி கடுமையாகப் பேசியதே கிடையாது. பக்கத்தில் என் தாயாரும் நின்று கொண்டிருந்தாள். கூண்டில் ஏற்றப்பட்ட கைதி போலிருந்தது என் நிலைமை.

"உங்களுக்கே இது அழகாயிருக்கா! ஊரில் நாலு பேர் இப்படிப் பேசுவதுகூட உங்களுக்குத் தெரியவில்லையா! எனக்கு வெளியில் தலை காட்ட முடியவில்லையே! நீங்கள் என்ன, குழந்தையா!" கல்யாணியின் விக்கலையும் விம்மலையும் மிஞ்சி வெளி வந்தன இவ் வார்த்தைகள். அவள் வார்த்தையில் தோன்றிய உருக்கம் என் மனத்தைக் கரைத்து விட்டது. ஆனால் நான் அப்படி என்ன தப்பு செய்துவிட்டேன்! அவள் ஏன் அப்படிப் பதறுகிறாள் என்பது எனக்குப் புரியாத புதிராகவே யிருந்தது.

"ஆமாண்டா, குழந்தை! நாலு பேர் சொல்லும்படி இப்படி நடக்கலாமாடா! அவளும் சிறிசுதானே!..." இது என் தாயாரின் வார்த்தை.

"ஐயோ, அம்மா! நீயுமா இப்படிப் பேசறே! அவள்தான் சிறிசு, என்னவோ பேசுகிறாள். நீ கூடவா!......"

நான் பேசி முடிப்பதற்குள், "நான் சிறிசு என்பதாவது உங்களுக்கு ஞாபக மிருக்கிறதா!......" என்றாள் கல்யாணி.

"என்னுள்ளம் வெடித்து விட்டது. அவர்களுக்கு நான் ராதையிடம் கொண்ட அன்பு பிடிக்கவில்லை. அதை ஒழிக்க முற்பட்டனர். ஒழிந்துவிட்டது. செடியின் இலைகளை யெல்லாம் கிளைந்து விட்டால் செடி காய்ந்து மடிவதுதானே இயற்கை! அந்த நிலையில்தான் இவ்வுடல் இப்பொழுது இங்கு இருக்கிறது" என்று ஒரு நீண்ட பெருமூச்சுடன் பிருந்தாவனத்துப் பெரியவர் கதையை நிறுத்தினார்.

"அத்தான்!" என்று கத்திக் கொண்டே, அவர் பாதங்களில் வீழ்ந்தாள் ராஜம். எனக்கு ஒன்றும் புரியவில்லை.

"நீ ராதைதானா! நான் சந்தேகித்தது சரிதானா!" என்று அன்பும் ஆர்வமும் கலந்த குரலில் கேட்டார் பெரியவர்.

எனக்கு இந்தப் புதிர் விளங்கவில்லை. அவர் கூறிய ராதைக்கும் ராஜத்திற்கும் என்ன சம்பந்தம்? இவ்வளவு நாட்களாக என்னிடம் இதைப்



பற்றி ஒன்றும் சொன்னதில்லையே!—என்ற பல் வேறு கேள்விகள் எழுந்தன. இதைத் தெரிந்து கொண்டு விட்டாள் ராஜம். "இதென்ன, கதைகளில் வருவது போலிருக்கிறதே என்றுதானே நினைக்கிறீர்கள்! கதை மாதிரிதான் இருக்கிறது. இவ்வளவு நாளும் உயிரோடு இல்லை என்று எண்ணிக் கொண்டிருந்த என் பிரிய அத்தானை மீண்டும் இந்த ஜன்மத்திலேயே பார்க்கிறேன் என்றால், 'இது நிஜமா!' என்று கேட்கத்தானே தோன்றுகிறது......" என்றாள் ராஜம்.


ஆவல் என்னை மிஞ்சிவிட்டது. நான் பொறுமையை இழந்து விட்டேன். "என்ன தத்துப் பித்து என்று உளறிக் கொண்டே போகிறாய். விஷயத்தை விவரமாகச் சொல்" என்று சற்றுக் கடிந்தபடி கேட்டேன்.

அவளுக்கே உரிய புன்னகை மின்வெட்டை என்மீது வீசிவிட்டு அவள் சொல்ல ஆரம்பித்தாள்:

"என் பெயர் ராஜத்தான். அத்தை வீட்டுக்கு வந்ததும், அத்தையின் பெண் ராதும் இறந்து போய்க் கொஞ்சநாள் தானாகி யிருந்தது. என் பெயரைச் சொல்லி, அழைக்கும் போதெல்லாம் அதன் ஞாபகம் வந்து அத்தை அழுவாள். பித்துப் பிடித்தாற்போலிருந்து விடுவாள். இதை மாற்றுவதற்குத்தான் என்னை ராதை யென்று கூப்பிட ஆரம்பித்தாள், அம்மா!

"அத்தான் கோபித்துக்கொண்டு வீட்டை விட்டுப் போய் மூன்று வருஷம் கழித்துத்தான் நம் கல்யாணம் நடந்தது. அதுவரையில் அத்தானைப் பற்றிய சமாசாரம் ஒன்றும் தெரியாமலிருக்கவே எல்லோரும் சேர்ந்து அத்தான்......"

இதை முடிப்பதற்குள் ராஜம் விக்கி விக்கி அழ ஆரம்பித்து விட்டாள். பக்கத்தில் உட்கார்ந்திருந்த சாவித்ரியின் கண்களில்கூட நீர் நிரம்பி யிருந்தது. என் மனம் கலங்கி விட்டது.



அரை ரூபாய்

எஸ்.வி.எஸ்

தோள் மீது பையைச் சார்த்திக் கொண்டு வீட்டுக்குள்ளே நுழைந்து சமையலறைக்குச் சென்றான் பாலு.

சமையலறையில் அவன் சித்தி சமைத்துக் கொண்டிருந்தாள். சித்தியின் முன் அந்தப் பையை வைத்து விட்டு, "அரை வீசை உருளைக் கிழங்கு ஆறணா, காலணா கொத்த மல்லி, காலணா பச்சை மிளகாய். போக மிச்சம் ஒன்பதரையணா" என்று சொல்லிக் கொண்டே சில்லறையைக் கொடுத்தான். அடுப்பங்கரையில் வேலை செய்து கொண்டே இடது கையால் அந்தச் சில்லறையை வாங்கி இடுப்பில் செருகிக் கொண்டாள் அவன் சித்தி.

கொஞ்ச நேரத்துக் கெல்லாம் அந்தச் சித்தியின் புருஷன் துரைசாமி வந்தான். ஆமாம், இந்த துரைசாமியை பாலுவின் அப்பா என்று சொல்வாருமுளர். பாலு அப்படி விளிக்காத போது, நாம் மட்டும் அவ்வாறு கூப்பிடுவானேன்?

சித்தியின் புருஷன் சமையலறையிலிருந்த பிறையைத் துளாவிக் கொண்டே "வெற்றிலையே கிடையாதா? அப்பப்பா, வீட்டில் ஒன்று தீர்ந்து போனால் உடனே அதை வாங்கி வைப்போம் என்கிற வழக்கமே கிடையாது. இது என்ன வீடோ...!" என்று இரைந்தான்.

"ஏதோ ஒரு நாள் ஒரு வேளை வெற்றிலை இல்லை என்றால் வீடு இரண்டு பட்டுப் போகிறது! டேய், தொடகாலி, இங்கே வா!" என்று கூப்பிட்டாள் சித்தி.

பாலு வந்தான். "இந்தா, இந்தச் சில்லறையைக் கொண்டு போய் அரைக் கவுளி வெற்றிலை வாங்கிக் கொண்டு, சீக்கிரம் வா!"

பாலு அவள் கொடுத்த அரை ரூபாயை வாங்கிக் கொண்டு ஓடினான். சற்று நேரத்துக் கெல்லாம் திரும்பி வந்தான் பையன் வெறுங் கையுடன். அவன் முகத்தில் பீதி குடி கொண்டிருந்தது.

"என்னடா?" என்றாள் சித்தி.

"சித்தி, நீ கொடுத்த ரூபாய் செல்லாதாம்!" என்று நீட்டினான்.

"என்ன? செல்லாதா? முட்டாள், மூதேவி! உன்னை என்ன பண்ணினாலும் பாவமில்லை! ஒரு ரூபாய் எடுத்துக் கொடுத்து உருளைக் கிழங்கு வாங்கி வாடா என்று அனுப்பினால், உருளைக் கிழங்குக்காரனிடமோ பச்சை மிளகாய்க் காரனிடமோ ஏமாந்து வந்திருக்குயே! நீ கொடுத்த சில்லறை தானேடா என்னண்டை இருக்கு!" என்று சொல்லி மிச்சம் இருந்த சில்லறையை எடுத்துத் தரையில் எறிந்துவிட்டு 'நறுக்' கென்று அவன் தலையில் குட்டினாள். அப்போதும் அவள் ஆத்திரம் தீரவில்லை. "போடா, போ! எங்கேயாவது போய் அந்த அரை ரூபாயை மாற்றிக் கொண்டு வா! அதை மாற்றாமல் வீட்டுக்குள் நுழையக் கூடாது! போ, இன்றைக்கு உனக்குச் சோறு, தண்ணி கிடையாது போ!" என்றாள் கடுமையான குரலில் சித்தி.

அவ்வளவையும் பார்த்துக் கொண்டு சும்மா உட்கார்ந்திருந்தான் துரைசாமி. ஆம், அவனும் என்ன செய்ய முடியும்? அவன் தான் சித்தியின் புருஷனாகி விட்டானே!

பையன் அடி மேல் அடி வைத்து வீட்டை விட்டு வெளியேறினான்!

* * *

"ஸார், லக்ஸ் சோப் இருக்கிறதா?",

"இருக்கு!"

"என்ன விலை?"

"ஆறரையணா!"

"ஒரு சோப் கொடுங்க!" என்று சொல்லிக் கொண்டே தன் எட்டணாவை நீட்டினான்.

"தம்பி, எத்தனை நாளா இந்த வேலை ஆரம்பிச்சிருக்கே. உதை கிதை கேட்குதா முதுகு......?" என்றான் கடைக்காரன். பாலு கடையை விட்டு இறங்கினான்.

"வெல்லம் வீசை எப்படிங்க?"

"பதின்மூன்றணா!"

"அரை வீசை கொடுங்க."

"தம்பி, இந்தக் காசுக்கு அரை வீசை வெல்லம் கொடுக்க மாட்டாங்க—ஒரு வீசை தான் கொடுப்பாங்க. இந்தக் கன்னத்திலே ஒரு அறை; அந்தக் கன்னத்திலே ஒரு அறை; அப்படி ஒரு வீசை!"

பாலு ஏறாத கடை கிடையாது; இறங்காத கடை கிடையாது. எல்லாக் கடைக்காரர்களும் சர்வ ஜாக்கிரதையாகத்தான் இருந்தார்கள். ஒருவரும் ஏமாறத் தயாராக இல்லை. பாலுவுக்கு அலுத்து விட்டது; பசி காதடைத்தது. கால்கள் நோக ஆரம்பித்தன. பொழுதும் சாய்ந்து விட்டது.

ஏதோ ஒரு கைப்பிடிச் சுவர் மீது சற்று நாழிகை உட்கார்ந்து இளைப்பாறினான். அதற்குள் இருள் கனவேகமாகக் கவிந்து வந்தது. நட்சத்திர கணங்கள் மினுக் மினுக் கென்று பளிச்சிடத் தொடங்கின. வீடுகளிலும் தெருக்களிலும் மின்சார விளக்குகள் ஜகத் ஜோதியாக ஒளி வீசின. இவை யெல்லாம், பாலுவின் சோர்ந்த உள்ளத்துக்கு உற்சாகமூட்ட வில்லை. தூரத்தே ஒரு மண்ணெண்ணெய் விளக்குத் தெரிந்தது. அதைக் கண்டவுடன் அவனுடைய சோர்ந்த உள்ளம் ஒரு முறை சிலிர்த்து எழுந்தது.

அந்த மண்ணெண்ணெய்க் கைவிளக்கின் வெளிச்சம், அவல், பொரி, வேர்க்கடலை, பட்டாணி விற்கும் கடையிலிருந்து வந்தது. இந்த மங்கல் ஒளியில் தன் எட்டணாவை மாற்றி விடலாம் என்று நினைத்தான் பாலு.

மேலும், அவனுக்கிருந்த பசியில் அரையணா அல்லது ஓரணாவுக்கு வேர்க்கடலை பட்டாணி வாங்கினால் தேவலை போல் தோன்றியது. ஆகவே, அவன் அதிர்ஷ்டத்தை (அல்லது கடைக்காரனின் துரதிர்ஷ்டத்தை என்று வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம்) பரிசோதிக்கப் புறப்பட்டு விட்டான் பாலு.



பொரி கடலைக் கடையில் ஒன்பது வயதுச் சிறுவன் உட்கார்ந்து, அந்த விளக்கொளியில் படித்துக் கொண்டிருந்தான். "வாக்குண்டாம்: வாக்குண்டாம்; நல்ல மனமுண்டாம்: நல்ல மனமுண்டாம்" என்று பதவுரையை நெட்டுரு ஏற்றிக் கொண்டிருந்தான்.

"இந்தாப்பா, எனக்கு அரையணா வேர்க் கடலை; அரையணா அரிசிப் பொரி போடு" என்றான் பாலு.

பையன் புஸ்தகத்தைக் கவிழ்த்து வைத்து விட்டு, சின்ன உழக்கில் அளந்து போட்டான், அவன் மடியில். பின்னர் பாலு தன் செல்லாத எட்டணாவைக் கொடுத்தான். கடைக்காரப் பையன் அதைச் சரியாகக் கூடப் பார்க்காமல், சில்லறை வைக்கப் பட்டிருந்த பெருங்காயத் தகரப் பெட்டியில் போட்டு விட்டு, ஏழணாச் சில்லறை அதிலிருந்து எடுத்துக் கொடுத்தான். அவன் கொடுக்கும்வரை பாலுவின் இதயம் 'திக்' 'திக்' என்று அடித்துக் கொண்டது. அவன் கொடுத்த பிறகு கொஞ்ச தூரம் வரைக்கும் அடி மேல் அடி வைத்து மெள்ள நடந்தான். அதாவது தான் கொடுத்தது செல்லாத ரூபாய் என்று கண்டு பிடித்து விட்டானானால் தன்னைக் கூப்பிட்டுத் திருப்பிக் கொடுக்கக் கூடச் சந்தர்ப்பம் அளித்தான் கடைக்காரப் பையனுக்கு. அவனோ, மறுபடியும் "வாக்குண்டாம்: வாக்குண்டாம், நல்ல: நல்ல" என்று ஆரம்பித்து விட்டான். பாலுவும் பிடித்தான் ஒரு ஓட்டம் வீட்டை நோக்கி.

பாலுவுக்குத் தான் அடைந்த வெற்றியில் பசி கூடத் தெரியவில்லை. வாங்கிய வேர்க் கடலையில், ஒரு கடலை கூட வாயில் போட்டுக் கொள்ள அவன் மனம் விரும்பவில்லை.

வீட்டுக்குள் நுழைந்ததும், 'அந்த அரை ரூபாயில் ஓரணா நஷ்டமானதற்காக சித்தி கோபித்துக் கொள்வாளோ, பொரி கடலை வாங்கியதற்காகக் கடிந்து கொள்வாளோ' என்று பயந்தவாறே மெள்ள சென்றான்.

"என்னடா மாற்றினாயா?" என்றாள் இடிக் குரலில் சித்தி.

"மாற்றினேன் சித்தி. ஆனால் ஓரணாவுக்குப் பொரி கடலை வாங்க வேண்டியதாகப் போச்சு. பொரி கடலைக் கடையிலே தான் மாற்ற முடிஞ்சது. வேறு எங்கும் மாறவில்லை" என்று திக்குத் திணறிக் கூறினான்.

"சரி, தொலையறது ஓரணா. ஏழணா வந்ததே இல்லையோ!" என்று தன் திருப்தியை வெளிப்படக் கூறினாள் அவள் சித்தி. பாலுவுக்கு மனசு நிம்மதி யடைந்தது. சில்லறையைத் தைரியமாக அவன் கையில் கொடுத்தான்.

"சரி, தட்டு எடுத்து வைச்சுக்கோ. சாப்பிட்டுவிட்டு உன் அப்பாவைப் பார்த்து விட்டுப் போய்ப் படுத்துக்கோ. உன் அப்பாவுக்குத்தான், 'இத்தனை நேரம் ஆச்சு; இன்னும் பிள்ளையைக் காணவில்லையே' என்று ஏக்கமாகப் போய் விட்டது" என்றாள் சித்தி.

பாலு ஒன்றும் பதில் சொல்லாமல் கைகால் அலம்பிக் கொண்டு தட்டு எடுத்து வைத்துக் கொண்டான். ஜலத்தில் போடப் பட்டிருந்த சோற்றைப் பிழிந்து எடுத்து அவன்

தட்டில் வைத்தாள். கொஞ்சம் உப்பைப் போட்டாள். ஒரு ஊறுகாய்த் துண்டைப் போட்டாள். பிறகு கொஞ்சம் (மூப்பேரும் பெற்ற) மோரை விட்டாள். "சாப்பிட்டுத் தட்டை அலம்பி வைச்சு விட்டு எச்சிலிடத்தைச் சுத்தி பண்ணிவிட்டுக் கதவைநன்றாக இழுத்துச் சாத்திக் கொண்டு போய்ப் படுத்துக் கொள்" என்று சொல்லி விட்டுப் போய்விட்டாள் சித்தி.



'சாயங்காலம் உருளைக் கிழங்கு வாங்கி வந்தோமே! அது நமக்குக் கிடையாது போலிருக்கிறது!' என்று நினைத்துக்கொண்டே சாப்பிட்டான்.

* * *

சித்தி, அவன் அப்பாவைப் போய்ப் பார்த்து விட்டுப் படுக்கச் சொன்னாள். அவன் அப்படிச் செய்யவில்லை. அவனுக்குத் தன் சித்தியின் புருஷனைப் பார்க்கப் பிடிக்கவில்லை. நேரே தன்னிடத்துக்குப் போய், பாயை விரித்து, ஒரு அழுக்குத் தலையணையைப் போட்டுப் படுத்துக் கொண்டான்.

அவனுக்குச் சாயங்காலம் நடந்த நிகழ்ச்சிகள், அவன் ஏறியிறங்கிய கடைகள், அவன் கேட்டுக் கொண்ட விதவிதமான வசவுகள் எல்லாம் நினைவுக்கு வந்தன. கடைசியில் அந்தக் கடலை வியாபாரியின் பையன், தான் ஏமாற்றிய பையனின் நினைவு வந்தது. 'அவனுடைய அப்பா அந்தச் செல்லாத ரூபாயைக் கண்டால், அந்தப் பையனை எவ்வளவு கோபித்துக் கொள்வார்! ஒரு வேளை அவனை அடிக்கக் கூட அடிக்கலாம் பாவம்!' என்று நினைத்தான். துக்கம் தொண்டையை அடைத்தது; விம்மி விம்மி அழுது விட்டான்! அப்படி அழுது கொண்டே தன்னை யறியாமல் தூங்கி விட்டான்.

* * *

பொழுது விடிந்து, பாலு தன் பாயைச் சுருட்டியபோது தலையணையின் அடியிலிருந்து ஒரு எட்டணா விழுந்தது! பாலு திடுக்கிட்டான். ஐயோ, யாரோ இங்கே எட்டணா வைத்து விட்டுப் போயிருக்கிறார்களே. இதற்கு ஏதாகிலும் வசவு கிடைக்குமோ என்று ஒரு கணம் தயங்கினான். 'யார் இந்த எட்டணாவை இங்கு வைத்திருந்தால் என்ன, எப்படி வந்தால் என்ன? இந்தக் காசைப் பற்றி இப்பொழுது வீட்டில் பிரஸ்தாபிக்கப் போவதில்லை. இதனால் எனக்கு என்ன திட்டு, அடி, உதை கிடைத்தாலும் பரவாயில்லை. தாங்கிக் கொள்ளத் தயார். இந்த வீட்டில் இதைத் தவிர வேறு என்னதான் எனக்குக் கிடைக்கிறது! ஆகவே இந்த எட்டணாவைப் பற்றி வெளியில் மூச்சு விடப் போவதில்லை' என்று தீர்மானித்துக் கொண்டு விட்டான்!

அன்று சாயங்காலம் பள்ளிக்கூடம் போய் விட்டு வீட்டுக்கு வந்தான். புஸ்தக அலமாரியின் அருகில் யாரும் இருக்க வில்லை. துரைசாமி பாலுவை நோக்கி வந்தான். பாலு அப்படியே சித்தப்பிரமை பிடித்தவன் போல் நின்று விட்டான்.

"பாலு, இன்றைக்குக் காலையில் உன் தலையணையடியில் ஒரு எட்டணா வைத்திருந்தேன். எடுத்துக் கொண்டாயா?"

பாலுவுக்கு என்ன பதில் சொல்வது என்றே தெரியவில்லை.

அவன் நிலைமையை உணர்ந்த துரைசாமி "பாலு, நான் உன்னைக் கோபித்துக் கொள்ள மாட்டேன். நீ சந்தோஷமாகச் செலவழிக்க வேண்டுமென்றுதான் வைத்தேன். அதை எடுத்துக் கொண்டு போய்ப் பக்ஷணம் வாங்கிச் சாப்பிட்டாயா?" என்று அன்பும் ஆதரவும் தொனிக்கும் குரலில் கேட்டான்.

"இல்லை!"

"பின் என்ன செய்தாய்?"

"நேற்று நான் ஏமாற்றிய பொரிகடலைக் கடைச் சிறுவனுக்குக் கொண்டு போய்க் கொடுத்து விட்டேன்!" என்றான் சிறுவன்.

இதைச் சொன்னதும் துரைசாமியின் உள்ளத்தில் புத்திரவாத்ஸல்யம் பெருக்கெடுத்து ஓடியது! அப்படியே அவனை மார்புறக் கட்டிக் கொண்டான்!

பாலுவும், அந்த அரவணைப்பில் இவர் சித்தியின் புருஷர் மட்டுமல்ல, தன் அப்பாவும்தான் என்பதை உணர்ந்தான்!



"ஏண்டா, பத்து பலம் பேரிச்சம் பழத்தையும் சினிமா பார்ப்பதற்குள் தின்றுவிட்டாயே! கொட்டைகளையெல்லாம் கீழேதானே துப்பினாய்?"

பையன்:—இல்லை, அப்பா! பக்கத்தில் உட்கார்ந்திருந்த ஒருவர் தொப்பியில் போட்டு விட்டேன், அத்தனை கொட்டைகளையும்!

ஆரோக்கியமான குடும்பமே சந்துஷ்டி நிறைந்த குடும்பம்!



குடும்ப ஆரோக்கியத்தைப் பாதுகாக்க சாதாரண உணவு போதாது என்று டாக்டர்களுக்குத் தெரியும். குறைபாடுகளை நிவர்த்தி செய்து குடும்பத்தில் ஆரோக்கியமும் சந்துஷ்டியும் நிலவ ஓவல்டின் அதிகப்படியான போஷாக்கு அளிக்கிறது. இந்த ருசியான உணவு பானத்தில் சேர்த்துள்ள இயற்கை உணவுகளும் சுத்தமான பசுவின் ஏட்டுப்பால் பழுத்த பார்லிமால்ட், சிறந்த கொக்கோ, இயற்கை பாஸ்பேட்டுகள் பி & டி விடமின்களும் இருக்கின்றன. ஓவல்டினில் இருக்கும் போஷாக்கு மற்றும் விடாமின் சத்துக்கள் இன்றியமையாதவை. ஓவல்டினைப் போல் சிறந்தது வேறு கிடையாது. பெரியவர்கள் திடசாலிகளாக இருக்க ஓவல்டின் பருகவேண்டும். இது குழந்தைகளுக்கு வளர்ச்சியைத் தூண்ட உதவுகிறது. இரவில் நித்திரைக்குமுன் சாப்பிட்டால் ஆழ்ந்த சுகமான நித்திரையைத் தருகிறது. போலிகளைத் தள்ளிவிடுங்கள்.

விநியோகஸ்தர்கள் : கிரஹாம்ஸ் டிரேடிங் கம்பெனி (இந்தியா) லி-ட்.



ஓ வ ல் டி ன்

குடும்ப ஆரோக்கிய பானம்.

OV. 326

அஜீர்ணமா?

உட்கொள்ளுங்கள்

ஒரு டோஸ்

இம்மருந்தில் →



மக்ளீன் பிராண்ட் ஸ்டமக் பவுடர் ஒரே டோஸ் சாப்பிட்டவுடனேயே அஜீரணத்தாலேற்படும் உப்புசம், இருதய எரிச்சல், குமட்டல், வயிற்று நோவுகள் மறைந்துவிடும். இன்றே நீங்கள் பரிசீலித்துப் பாருங்கள். "அலெக்ஸ் ஸி. மக்ளீன்" என்ற கையெழுத்துடன் கூடிய அசல் மக்ளீன் பிராண்ட் ஸ்டமக் பவுடரையே பார்த்து வாங்குங்கள்.

வியாபார விபரங்களுக்கு: ஜெ.எல்.மாரிசன்.ஸன் அண்ட் ஜோன்ஸ் (இந்தியா) லிமிடெட், மஹாலக்ஷ்மி கோவிலுக்கு எதிரில், வார்டன் ரோட், பம்பாய் 26.



LAS. (B)

உங்கள் காலில் உள்ள

Zam-Buk தொந்தரவுகளை ஜாம்-பக்



எவ்வளவு விரைவில் குணப்படுத்துகிறது என்று பாருங்கள் !



ஜாம் - பக்
நோயுற்ற காலில் உள்ள புண்களை மாயமாய் மறையச் செய்கிறது.

உங்கள் கால்களில் ஜாம்-பக்கைப் போட்டுத் தேய்த்து விடுங்கள். வலி, அயர்ச்சி, நோய் எல்லாம் விரைவில் ஓடிப்போகும். விதம் தந்து குணப்படுத்தும் சிறந்த ஔஷதத் தைலங்கள் ஜாம்-பக்கில் இருக்கின்றன. ஜாம்-பக் எரிச்சலையும், வீக்கத்தையும் போக்கடிக்கிறது. ஜாம்-பக் கொப்புளங்களை குணப்படுத்துகிறது. ஜாம்-பக் கால் ஆணியை அகற்ற உதவும். ஜாம்-பக் உங்கள் கால்வலிகளைக் குணப்படுத்துகிறது. மற்றும் கமைச்சல், இதர சரும நோய்கள், வெட்டுப் புண்கள், காயங்கள், புண்கள், ரணங்கள், நெருப்புக் காயங்கள், மண்டைச் சொறி, பூச்சிக்கடி மூலம் முதலியவற்றிற்கு ஜாம்-பக் உபயோகிக்கலாம்.



ஜாம்-பக் உலகத்தின் சிறந்த சரும ஆயின்ட்மென்ட் மிருகக் கொழுப்பு கலப்பற்றது என்ற உத்தரவாதம்

FZY 3

ஏஜண்டுகள்: மெஸர்ஸ். தாதா & கோ., பி.டி. மதராஸ்



என்றும் உங்கள் கூட்டாளி

நீங்கள் வெளியே செல்லும் போதும், வீட்டிலே தங்கும்போதும் ஐடியால் உங்களுக்கு க்ஷேமத்தை யளிக்கும் கூட்டாளியாக விளங்கும். நீங்கள் அதை பூர்ண நம்பிக்கையுடன் உபயோகிக்கலாம்.


நோய் நிவாரணி, கிருமி நாசினி, நறுமணத்துடன் கூடியது. விஷக் கலப்பற்றது.

தயாரிப்பாளர்:
தி மைசூர் இண்டஸ்ட்ரியல் & டேடிங் கார்ப்பரேட்டர் லிமிடெட்.
மல்லேஸ்வரம், பெங்களூர்

விற்பனை ஏஜண்டுகள்:
பெஸ்ட் அண்ட் கம்பெனி லிமிடெட்,
தபால் பெட்டி நெ. 63, சென்னை




35 TM.


நீண்ட கால நோயைத் தவிருங்கள்.
குழந்தைகளை அசக்தமாக்கும் சுரம், குலைநோய் சாதாரண கோளாறுகளிலிருந்து ஆரம்பமாகின்றது. கீழ்கண்ட கோளாறுகளில் ஏதாகிலும் ஒன்று நீடித்திருந்தாலோ அல்லது திரும்பத் திரும்ப வந்தாலோ, டாக்டரின் ஆலோசனையை நாடி அதன் காரணங்களைக் கண்டு பிடிக்கவும்.
மலச்சிக்கல் அல்லது வயிற்றுப்போக்கு — வாந்தி — பசியின்மை — இலேசான ஜுரம் — சோம்பல் — சிடுசிடுப்பு — பருத்த அல்லது உஷ்ணமான வயிறு — சரீர இளைப்பு.
ஜம்மியின்
லிவர்க்யூர்
சுரம், குலை நோய்களுக்கும் அவைகள் பரவாமல் தடுப்பதற்கும் உதவுகின்றது. எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.
பெரிய கடை தெரு, தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி. பெரிய தெரு, கும்பகோணம். ஆர்காட் ஸ்ரீனிவாஸாசாரி தெரு, பெங்களூர் சிடி. மற்ற கிளை ஸ்தாபனங்கள்:— பம்பாய் - நாகபூர் - லக்னோ - கல்கத்தா - விஜயவாடா - விஜயநகரம்.
ஜம்மி வெங்கடரமணய்யா & ஸன்ஸ்
2, பிரமலட் ரோடு, மைலாப்பூர், மதராஸ்.


மணத்தில் முன்னணியில் நிற்பது
டி.எஸ்.ஆர்
பன்னீர், வாசனை பாக்குத்தூள்
சந்தனத்தூள்
வாசனைச் சுண்ணாம்பு
நெ 1. கோகுல் மட்டிப்பால் வத்தி
கோகுல் மேனகா வத்தி
SCENTED
NUTS
T.S.R. & CO.
டி.எஸ்.ஆர் & கோ,
கும்பகோணம்.
சென்னை நகரத்திற்கு டிஸ்ட்ரிப்யூட்டர்கள்: சுராஜ் ஏஜன்ஸீஸ், மதராஸ் - 14
கோவை, பாலக்காடு & நீலகிரிக்கு சோல் ஏஜண்டுகள்:
B. பாலபட்டாபி செட்டியார், 216, வைசியாள் தெரு, கோயமுத்தூர்

எது வேண்டும்?
சேவையா? சிக்கனமா?
இரண்டுமே உங்களுக்குக் கிடைக்கும்.



வெலாக்ஸ்

மிகச் சிறந்து விளங்கும் இந்த ஆறு ஸிலிண்டர் வாக்ஸால் வேகமாகச் செல்லக் கூடியது; சிறந்த சேவை தரக்கூடியது. மணி ஒன்றுக்கு 75 மைல் வேகத்தில் ஓடும். காலன் பெட்ரோலுக்கு அதிக மைல்கள் ஓடும் அற்புதம் இது.

வைவர்ன்

உங்கள் சிக்கனத்திற்கு ஏற்ற சிறந்த கார் இது. நாலு ஸிலிண்டர் வாக்ஸால் சாதாரணமாக ஓட்டினால் காலனுக்கு 35 மைல் செல்லும். வேகமாக ஓட்டினால் மணிக்கு 60 மைல்களுக்குமேல் போகும்.

இன்றே வந்து எம்மைக் காணுங்கள்! இப்புதிய வாக்ஸால் சிக்கனத்துடன் கூடிய சேவையை உங்களுக்கு எப்படித் தருகிறது என்பதை நாங்கள் மகிழ்ச்சியுடன் காண்பிக்கிறோம்......... சிக்கனத்துடன் கூடிய சேவை.

- சௌகரியம்!
- பிரயாண சுகம்!
- தோற்றம்!

வாக்ஸால்

வெலாக்ஸ் '18' ... வைவர்ன் '12'

சுந்தரம் மோட்டார்ஸ் லிமிடெட்
37, மவுண்ட் ரோடு, சென்னை

டி. வி. சுந்தரம் அய்யங்கார் & ஸன்ஸ் லிட்.
மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, புதுக்கோட்டை, சேலம்

Edited, Printed and Published by R. Krishnamurthy at "Kalki" Press 116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras

REGD. No. M. 4392

Registered as a newspaper in Ceylon